# வரவு

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

9



2003/2004

வர்த்தக மன்றம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAYOORA

## GIFT CENTRE



# மயூரா அன்பளிப்பு அகம்





* அழகுசாதனப் பொருள்கள்
* அன்பளிப்புப் பொருள்கள்
* இலத்திரனியல் பொருள்கள்
* பெண்களுக்கான மேக்கப் பொருள்கள்
* சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள்





14, New Market, (out side)
Power House Road, Jaffna
Tel: 021 222 2084

14, நவீன சந்தை (வெளிப்புறம்)
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 2084


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு

## இதழ் - 9

## 2003

**MILLENIUM EDITION**


இதழாசிரியர்

செல்வன் R. குமரன்



**வர்த்தக மாணவர் ஒன்றியம்**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்பட விளக்கம்




கடந்த இரு தசாப்தங்களாக துரிதமாக வளர்ந்துவரும் கற்கை நெறிகளுள் வர்த்தக கல்வியும் ஒன்றாகும். பொருளாதார தொழில் நுட்ப ரீதியாக பல நடைமுறைகளையும் உள்ளடக்கி பரந்துபட்ட கற்கைநெறியாக இருப்பது யாவரும் அறிந்ததே.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு கைத்தொழில்துறை வளர்ச்சி மிகவும் இன்றியமையாதது. அத்துடன் நகர உருவாக்கம் பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமான பங்கை ஆற்றுகின்றது.
பல்வேறு பொருளாதார நெருக்கடி நிலைமைகளிலும் வர்த்தகத்துறை பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டு முக்கிய துறையாக விளங்குகிறது.

மலர்ந்துள்ள இப்புத்தாயிரமாம் ஆண்டில் எமது வணிக உலகம் தன்னை மறந்து பல்வேறு பரிணாம வளர்ச்சியில் வழிநடாத்திச் செல்கின்றது எமது "வரவு" மலர் இன்று எம் சமூகத்தில் பிரகாசிப்பது போன்று எதிர் காலத்தில் அபிவிருத்தி அடையப்போகும் எம் நாட்டிலும் பிரகாசிப்பது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக்கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக்கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒரு பெரும் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந்தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே - பல
கலைமலி கழகமும் இதுவே - தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே!

எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள் கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவை பயில் கழகமும் இதுவே!
ஓங்கு நல் அறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒரு பெரும் கழகமும் இதுவே!
ஔிர் மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரன கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினில் தாயென மிளிரும்
தனிப்பெரும் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசியுரை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

ஆண்டு தோறும் இந்துவின் மைந்தர்களில் ஒரு பகுதியினரான வர்த்தக ஒன்றியம் "வரவு" என்னும் வரலாற்றுப் பதிவேட்டை வெளியிட்டு வருகின்றனர்.

"வரவு இன்றிச் செலவு இல்லை". மனித குலத்தின் வாழ்க்கையையே இந்த வரவு தான் கொண்டு செல்கிறது. அரசன் முதல் ஆண்டி வரை இந்த வரவையே எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

வளர்ச்சி பெற்ற நாடுகளையும் வளரும் நாடுகளையும் வளர்ச்சி அடையாத நாடுகளையும் கூட இந்த வரவு தான் எமக்கு வேறுபடுத்திக் காட்டுகிற தென்றால் அது மிகையாகாது.

இத்தகைய பெருமை வாய்ந்த "வரவு" இன்று எமது வர்த்தக மாணவர், ஆசிரியர் ஆகியோரின் இடைவிடா முயற்சியால் அனைவரது சிந்தனைக்கும் அறிவுக்கும் விருந்தான ஒரு சஞ்சிகையாக வெளிவருவது கண்டு கல்லூரியின் அதிபர் என்ற வகையில் பெருமையடைகின்றேன். இம்மலர் மேன்மேலும் வளரவும் உயரவும் எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
SRI NAGAVARATHA NARAYANAR THEVASTHANAM

அருட்கவி சீ. விநாசித்தம்பி M.A
ARUDKAVI S. VINASITHAMBY M.A

நாகேஸ்வரம், NAKESWARAM,
அளவெட்டி. ALAVEDDI
(இலங்கை) (Sri Lanka)

தொலைபேசி: 070 - 212896



## அருட்கவி
## சீ. விநாசித்தம்பி ஐயா அவர்களின்
# ஆசியுரை

உலகமெல்லாம் வர்த்தகத்தின் பயனைக்காட்டி
ஓங்குகின்ற தேசபொரு ளாதாரத்தின்
கலைவளர்ச்சி மக்கள்செயற் பாடு,பொங்கும்
கணிதநெறி, மதிப்பீட்டு முறைமை. நாட்டு
நிலைவளர்ச்சி நிதிவரவு செலவின் போக்கு,
நிறைகணக்கு முறைகள்,இவை எல்லாம் யார்க்கும்
பலனளிக்கும் வகை“வரவு” பெயரைத்தாங்கிப்
பகிரங்கமாகும் இந்நூல் மக்கள் கைநூல்.

யாழ்இந்துக் கல்லூரி மாணவர்கள்
ஞானகல்வி வெளியீடாய் “வரவு” என்னும்
வாழ்வு தரும் சஞ்சிகைநம் மக்கட்கெல்லாம்
வழிகாட்டும் நூலாகிப் பொருளாதாரம்
சூழ் உலகம் முழுவதுமே பயன்சுரக்க
தூயகலை, கலாச்சாரம், பண்புநல்கி
ஏழ்கதிரின் ஞாயிறுபோல் வாழி!வாழி!
இந்துக்கல்லூரி தமிழ்மலை போல்வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொறுப்பாசிரியரின் ஆசிச் செய்தி

எமது கல்லூரியின் "வர்த்தக மாணவர் ஒன்றியம் தனது ஒன்பதாவது "வரவு" சஞ்சிகையை வெளியிடுவது குறித்து மிக மகிழ்ச்சியடைகின்றேன். கல்லூரியைப் பொறுத்தவரையில் மாணவர்கள் ஒரு மலரை அச்சிட்டு வெளியிடுவது என்பது சாமானிய விடயம் அல்ல. பல்வேறு அர்ப்பணிப்புக்களைச் செய்து தான் இதை நிறைவேற்ற வேண்டும். எமது கல்லூரியைப் பொறுத்த வரையில் வர்த்தகத் துறைத் ஏனைய கணித, விஞ்ஞானவறை மாணவர்களை விட எண்ணிக்கையில் குறைவுதான், அப்படியிருந்தும் அண்மைக் காலமாக ஏனைய துறைகளோடு இணையாக வளர்ச்சி அடைந்து வருவது கண்கூடு.

பல்வேறு இடர்பாடுகளுக்கும் மத்தியில் எவ்வாறு இம்மலரை வெளியிடப் போகிறார்கள் என என் மனதில் சந்தேகம் எழுந்தது உண்மை. ஆனால் எனது சந்தேகத்தைத் தவிடுபொடியாக்கி, தடைகள் பல தாண்டி, விடாமுயற்சியுடன் வெற்றி கொண்டு இம் மலரை வெளியிட்ட வர்த்தக மாணவர் ஒன்றிய செயற்குழு உறுப்பினர்களையும், ஏனைய வணிகத்துறை மாணவர்களையும் மனஉவந்து பாராட்டுவதுடன், கல்லூரியின் வர்த்தகத்துறையின் தொடர் வளர்ச்சிக்கு உரம் இட்டமைக்கும் பொறுப்பாசிரியர் என்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டவனாகின்றேன். அம் மாணவர்களை சகல செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றேன்.

எம் மன்றம் தொடர்ந்து வரவுகளைப் பெற்று "வரவு"களை வெளியிட இந்து அன்னையின் ஆசியும் ஸ்ரீ ஞான வைரவப் பெரமானின் அருளும் கிடைக் கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வகுப்பாசிரியரின் நெஞ்சத்திலிருந்து

தரம் 13 வர்த்தக வகுப்பைச் சேர்ந்த எனது வகுப்பு மாணவர்களால் வெளியிடப்படும் "வரவு" சஞ்சிகைக்கு இவ் ஆசிச்செய்தியை வழங்குவதில் பேருவகை கொள்கிறேன். நிலவும் இன்றைய சூழலில் பரீட்சைமயப்படுத்தப்பட்ட கல்வி முறை காணப்படு கின்றது. கல்விச் சூழலில் இவ்வாறான முயற்சிகள் கல்வியாளர் மத்தியில் பெரும் ஆதரவையும் ஆறுதலையும் பெறும் என்பது எனது நம்பிக்கை. மாணவர்கள் தமது ஆக்கத்திறனை மட்டும் வெளிப்படுத்துவதற்கான சாதனமாக மட்டும் இத்தகைய சஞ்சிகையின் வெளியீடுகள் அமையாமல் ஆளுமை, அமைப்பு ஒழுங்கு முறை தொடர்பான பயிற்சிகளை வழங்குவனவாக அமைதல் வேண்டும்.

இச் சஞ்சிகையை இன்று இவ்வடிவத்தில் அவர்கள் வெளிக்கொணர்வ தற்கு சரமங்களை அவர்களது வகுப்பாசிரியராகிய தன்மையினால் நான் நன்றாகவே உணர்ந்துள்ளேன். இத்தகைய பயிற்சிகள் மற்றும் அனுபவங்களை எதிர்காலத்தில் அவர்கள் தமது வேலைத்தளத்தில் பயன்படுத்துவதன் மூலம் அவர்கள் இந்து அன்னையின் கொடி தொடர்ந்து உயரப் பறப்பதை உறுதி செய்வார்கள் என நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின்
# இதயத் துடிப்பிலிருந்து

நவீன உலகினில் நம்நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் வணிக அறிவு வளர்ச்சிக்காய் முதல் எட்டு மலர்களிலும் எண்திசையெங்கும் வணிக மணம் பரப்பிய "வரவு" முப்பது தோழர்களின் ஒருமித்த முயற்சியால் இம் முறையும் ஒன்பதாவது மலராக மலர்ந்து உங்கள் பஞ்சுக் கரங்களில் தவழ்வதைக் கண்டு அக மகிழ்வடைகின்றேன.

உபஅதிபர் திரு. சிவசுப்பிரமணிய சர்மா அவர்களின் அயராத உழைப்பி னால் 1972ஆம் ஆண்டு தைத்திங்கள் பத்தாம் நாள் உதயமாகி வெள்ளி விழாக்கண்ட நிலையிலும் கூட எமது துறை மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. எனினும் இன்றுவரை எத்தனை தடங்கல்கள் நேர்ந்தாலும் எமது துறையானது தனித்துவ பாணியில் அதன் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக்கொண்டே இருக்கிறது. இம் முன்னேற்றப்பாதையின் அடையாளமே ஒன்பதாவது தடவையாக மலரும் இவ் "வரவு" மலர் ஆகும்.

வணிகமே வாழ்க்கை என்றாகி, பூகோளமே ஓர் கிராமமாகி தொடர்பாடல் வளர்ச்சியை அனுபவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இரு தசாப்த காலயுத்தத் தின் கோரப்பிடியினுள் சிக்கி நலிவடைந்து போய்க்கொண்டிருக்கிறது நம் நாட்டுப் பொருளாதாரம். எனவே விரைவாய் ஓடும் வணிக உலகினோடு ஒத்து நகர்வதற்கு நமது தேசப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது மிக அவசியமான தாகும்.

அத்தகைய சிந்தனையாளர்களின் ஆரம்ப வெளிப்பாடே இவ் "வரவு" என்றால் அது மிகையாகாது.

"வணிகக் கல்வியை பாரெல்லாம் பைந்தமிழில்
பரப்பி வளமுற வழி செய்வோம்"

எனும் உயரிய சிந்தனையை உயிர் மூச்சாகக் கொண்டு செயற்படும் எம் வணிக மாணவரின் வெளியீடான "வரவு" மலர் புலமை மிக்க அறிஞர்களின் கருத்துக்களாலும், மாணவர்களின் ஆக்கங்களாலும், எம் மூத்த மாணவர்களின் முன்னேற்ற அறிக்கை களாலும் புது மெருகூட்டப்பட்டுள்ளதால் வளர்ந்து வரும் மாணவ சமுதாயத்தின் அறிவுத் தாகத்திற்கு இதைவிட நாம் அளிக்கக்கூடிய சிறந்த பானம் வேறு இல்லை என்றே நம்புகின்றோம்.

இறுதியாக, மலருக்கு அழகூட்டினோம்! மணம் சேர்த்தோம்! இப்போது உங்கள் கைகளில் மணம் கமழ விட்டுள்ளோம்! எமது பணி நிறைவேறியது. மலரை நுகர்ந்து பயன் பெறுவது உங்கள் கடமை. மலரை இதழ் இதழாகப் புரட்டுங்கள்! ஒவ்வொரு முத்தான இதழ்களிலும் சத்தானதும் தேனிலும் இனியதுமான கருத்துக்களை அருந்தி அறிவுத் தாகத்தைத் தீருங்கள்! அதுவே எங்கள் திருப்தியும் கூட!

**இனிவரும் காலங்களில் இணையற்ற இந்துவின்**
**இம்மலர் இடையறாது மலர மாணவத் தோழர்களே பாரீர்!**

*வர்த்தக மாணவர் ஒன்றியம்*
*யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி*
*யாழ்ப்பாணம்.*

*இ. குமரன்*
இதழாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரின் உள்ளத்திலிருந்து

"எத்துறை ஏனினும் அத்துறை வெல்வோம்" என்றவாறு கடந்த நூறு வருடங்களுக்கும் மேலாக தமிழ் கல்விச் சமூகத்தில் என்றுமே முதலிடத்தில் விளங்கும் யாழ் இந்துக் கல்லூரியின் "வரவு" என்ற வசந்தமலரை உங்கள் கரங்களில் தவழவிடுவதில் நாம அகமகிழ்கின்றோம்.

"வரவு" என்ற வணிகமலர் இந்துவின் சாதனை வரலாற்றில் நவமணியாக ஜனனம் பெற்றுள்ளது. "வரவின்" வரவு, பரீட்சை காரணமாக சற்று தாமதமடைந்தாலும் எமது மன்றத்தினரின் அஞ்சாத மனவுறுதியும், தேடல்களும் அறிவுப்பசியும் தூண்களாக உருவாகி இன்று ஒரு வளமூட்டவல்ல நூலாக வரவு மிளிர்கின்றது.

இன்றைய நவீன உலகில் தொழில்நுட்ப வளர்ச்சி, உலகமயமாதல் போன்ற நிலமைகளால் வணிகத்துக்கான வாய்ப்புகள் பல்கிப்பெருகுகின்றன. உலகில் இன்று வணிகக் கல்வியானது நவீன தகவல் தொழில்நுட்பத்துடனும் பிரயோக கணிதத்துடனும் இணைந்து வீறுநடை போடுகின்றது. வணிகத்தின் எல்லையற்ற இம் முன்னேற்றத்திற்கு ஈடுகொடுக்க பல நூல்கள் உதித்திட வேண்டும். நாட்டில் தலைசிறந்த முறையில் கல்வியை திறன்மிக்கதாக கற்பிக்க வேண்டும்.

நவமலராய் வெளிவரும் எமது சஞ்சிகை சிறப்பாக வெளிவர தட்டிக்கொடுத்து ஊக்கமளித்த எமது அதிபர், வேலைப்பளுவின் மத்தியிலும் எமது சோரவிடாது உரமூட்டிய துறைசார் ஆசிரியர்கள் என்றும் எமது கௌரவத்துக்கு உரியவர்கள்.

எத்தனை இடைஞ்சல்கள், பரீட்சை மாற்றங்கள் ஏற்படினும் "வரவு" பொன்விழா மலரை கல்லூரியில் சுவடிபதிக்க வேண்டுமென்பதே எமது பேரவா.

**வர்த்தக மாணவர் ஒன்றியம்**
**யாழ். இந்துக்கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

**ச. தமிழன்பன்**
**தலைவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் இதயத்திலிருந்து



எமது வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் வெளியீடாகிய "வரவு" சஞ்சிகையின் ஒன்பதாவது மலர் இன்று உங்கள் கைகளில் தவழுகின்றது. கல்விமான்களின் பயன்மிக்க ஆய்வுக் கட்டுரைகள். மாணவர்களது முத்தான ஆக்கங்கள் எனப் பலவும் இம் மலரை நறுமணம் வீசச் செய்கின்றன.

பாடசாலை உயர்தர, சாதாரண தர மாணவர்களிற்கு மட்டுமல்லாது உயர்கல்வி பயிலும் மாணவர். ஆர்வலர்கள் மத்தியில் கட்டாயம் இந்த "வரவு" எனும் மலரானது வாசனை பரப்பும் என நம்புகின்றோம்.

எமது கல்லூரியானது கல்வியில் மட்டுமல்லாது இதர விடயங்களிலும் தனது அரிய, அளப்பிரிய சாதனைகளை நிலைநாட்டி வருவது யாவரும் அறிந்ததே. இந்து அன்னையின் அரவணைப்பில் இதம் காணும் மைந்தர்களாகிய நாம் பல்துறை சார்ந்த செயற்பாடுகளின் ஓரங்கமாகவே இவ் வரவு இதழை வெளியிட்டு வருகின்றோம். இம் மலர் எமது ஆற்றல், கடினமான உழைப்பு, திறமை என்பவற்றினை இக் கல்விச் சமூகத்திற்கு பொட்டிட்டுக் காட்டும் என்பதில் எதுவித ஐயமுமில்லை என நம்புகின்றோம்.

இம் மலரானது நறுமணம் வீச உதவிய தேன்துளிகள் பல நூற்றுகணக்கானவை. பல்கலைகழக விரிவுரையாளர்கள், கல்விமான்கள், மாணவ நண்பர்கள், தங்கள் ஆக்கங்களை முகங்கோணாது மனமுவந்து எமக்கு நல்கி உதவினர். அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் போன்றோரது வழிகாட்டல்களும், அறிவுரைகளும் எமக்கு ஆதர்சனமாக அமைந்தன. வர்த்தகப் பெருமக்கள் விளம்பரங்கள் மூலம் அளித்த நிதியுதவி எமக்கு பெரிதும் கைகொடுத்து உதவியது. இவர்கள் யாவர்க்கும் இம் மன்றத்தின் செயலாளர் என்ற வகையில் எனது நன்றி என்றும் உரியது.


எம்மைத் தொடர்ந்து வரும் கழக உறுப்பினர்களும், எம்மருமை சக மாணவர்களும் ஆர்வத்துடனும், ஆற்றலுடனும் இவ்வரவு இதழை வெளியிட வேண்டும், வெளியிடுவார்கள்.

***பு. கஜன்நாத்*** *(2003-13ᶠ Com)*
***செயலாளர்***
***வர்த்தக மாணவர் ஒன்றியம்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக மாணவர் ஒன்றிய இலச்சினை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலச்சினை அறிமுகம்

அணுவிற்கும் ஒரு மையக்கருவுண்டு. இதேபோல் எமது புனித இலச்சினைக்கும் ஒரு மையக்கருவுண்டு. அதுதான் இவ்விலச்சினைக்கு மத்தியிலுள்ள "தராசு" ஆகும். அன்று தொட்டு இன்று வரை வியாபாரத்தின் உயிர்நாடியாக விளங்குவது இந்த அளவு கருவியே ஆகும். எனவே இக்கருவி வியாபாரத்தினை புலப்படுத்துவதாக உள்ளது.

வியாபாரமானது எமது நாட்டில், இலங்கைப் பண அலகாகிய ரூபா (Rs) விலும், அந்நிய நாணங்களாகிய டொலர் ($) ஸ்ரேலிங்பவுண் ( ...)போன்றவற்றிலுமே மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. எனவே தராசைச்சுற்றி இந்நாணய குறியீடுகள் அலங்கரிக்கின்றன.

பரந்த உலகம் இன்று ஒரு கிராமம்போல் எம்மை அண்மித்துவிட்டது. காரணம் நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களாகும். இத்தொழில்நுட்ப வசதிகள் வியாபாரத்தின் துணைநிலைச் சேவைகளில் இன்று நீக்கமறக் கலந்துவிட்டது. எனவே இக்காலத்தில் வியாபாரம் துணைநிலைச் சேவைகளால் மெருகேற்றப்பட்டு "வர்த்தகம்" எனும் நிலைப்பாட்டை அடைந்துள்ளது.

எமது இலச்சினையை நோக்குவீர்களானால் மையத்தில் உள்ள தராசைச்சுற்றி அணிசெய்யும் கணனி, தட்டச்சு, விமானம், செலூலர் தொலைபேசி. வங்கித் தொழிலைக்குறிக்கும் பணநோட்டுக்கள், கப்பல் என்பன வியாபார்த்தின் துணை நிலைச சேவைகளையே குறிக்கின்றன. இதன்மூலம் எமது இலச்சினை "வர்த்தகம்" எனும் கூற்றுக்கு வரைவிலக்கணம் என்றால் மிகையாகாது.

வர்த்தகத்துறை மாணவர்களுக்கு வர்த்தகத்துறை சார்ந்த கல்வியானது நாளொரு வண்ணமாக விரிவடைந்து செல்கின்றது. இதனால் அவர்களின் வர்த்தகக்கல்வியும் முதன்மைபெறுகின்றது. விரிந்த நிலையில் உள்ள ஒரு நூல், அதற்குக் கீழே ஒரு பேனா என்பவை இக்கருத்தினை விளக்குவதாக அமைகின்றது.

செய்மதிகள் வலம்வரும் இப்புவியில் வர்த்தகத்துறையில்லா ஓர் இடமில்லை. இலச்சினையில் பூமிப்பந்தின் தோற்றத்தின் மூலம் வர்த்தகத்தின் வியாபாரத தன்மை இங்கு வலுப்பெறுகின்றது.

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப்புகட்டிக் குறுகத்தறித்த குறள்" எனும் பெருமை யுடைய திருக்குறள் போன்றே எமது ஒன்றியத்தின் இலச்சினையும் பரந்துபட்ட வர்த்தகத்தின் தோற்றப்பாட்டை தனது சிறு அமைப்பில் உங்களிடம் காட்டி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக மாணவர் ஒன்றிய செயற்குழு




இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக) :-
S. தயாபரன் (ஆசிரியர்), N. சிவஞானசுந்தரம்பிள்ளை (ஆசிரியர்), S. சிவராஜா (ஆசிரியர்), K. சண்முகராஜா (ஆசிரியர்), B. ஜெயரெட்ணராஜா(பொறுப்பாசிரியர்), P. மகேஸ்வரன் (பிரதி அதிபர்), C. தமிழன்பன் (தலைவர்), A. சிறிகுமரன் (அதிபர்), R. குமரன் (இதழாசிரியர்), L. ஓங்காரமூர்த்தி (பிரதி அதிபர்), S. நகுலராஜா (ஆசிரியர்), A. சண்முகலிங்கம் (ஆசிரியர்),


நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக) :-
A. ரமணன், R. சனாதனன், P. கஜன்நாத் (செயலர்), N. கயூரன், P. சபீஸ்குமார், P. உபேந்திரா (உபதலைவர்), N. சுபாஸ்கரன், P கஜானனசர்மா, P. சாரங்கன், S. சிவாகரன், E. நிர்ஜிகன், V. சகாயரூபன், S. பிரகாஸ் P. ஜெயப்பிரசாத் (உபசெயலர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலமெங்கும் பைந்தமிழில் வணிக மணம் பரப்பும் வரவே நீ என்றென்றும் வாழி!

**உள்நாட்டில் புகழ் பெற்றதும் சர்வதேச தரம் வாய்ந்ததுமான *Arpico* நிறுவனத்தின் மெத்தைகள், வாளிகள், மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் ஏக விநியோகஸ்தர்கள்**



# WOOD SONS

T.P - 021 - 222 2430

**68,70 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

ஒன்பதாவது அகவையை பூர்த்தி செய்யும் வரவிற்கு எமது உள்ளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

தலைநகரிற் பிரசித்தி பெற்ற நிறுவனம் தற்போது யாழ்ப்பாணத்தில் உங்களிற்காக!

# Siyanas

Tailoring & Textile



**இளைய தலை முறையினரின் இதயம் கவரும் இன்றைய புடைவையகம்.**

*77, Kasthuriyar Road, Jaffna.*
*Tele: 021 - 222 2967*

With the best compliments from

# K.D.M Technologies



Dealers in: Mobile Phones, Accessories & VCD, VHS rental



No.1011, K.K.S Road,
(near the Milk White)
Jaffna.

T.P: 021-222 3521
Mobile: 0777-492619

வரவே நீ வையகம் புகழ் பாட வருக

நாவூறும் இறைச்சி வகைகள், கோழி பாகங்கள், சோசெயஸ் (SAUSAGES) வகைகள், நூடில்ஸ் வகைகள், எண்ணெய் வகைகள், சுவையான மா வகைகள் மற்றும் கால்நடை உணவுகள் அனைத்தையும்

PRIMA QUALITY CHICK

ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்

# PRIMA



PRIMA BEST IN FEED

இல: 144, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
வர்த்தக மாணவர் ஒன்றிய

## பதவியாளர்கள்

## 2003/2004

| | | |
|---|---|---|
| காப்பாளர் | - | திரு A. சிறிகுமரன் |
| பொறுப்பாசிரியர் | - | திரு P. ஜெயரட்ணராஜா |
| தலைவர் | - | செல்வன் C. தமிழன்பன் |
| உப தலைவர் | - | செல்வன் B. உபேந்திரா |
| செயலர் | - | செல்வன் P. கஜன்நாத் |
| உபசெயலர் | - | செல்வன் B. ஜெயபிரசாத் |
| பொருளர் | - | செல்வன் R. பிரசன்னா |
| இதழாசிரியர் | - | செல்வன் R. குமரன் |
| விளம்பர முகாமையாளர் | - | செல்வன் M. ஆதவன் |
| மன்ற உறுப்பினர் | - | செல்வன் P. சாரங்கன் |
| | - | செல்வன் R. அன்ரன் ராஜீவ் |
| | - | செல்வன் A. ரமணன் |
| | - | செல்வன் P. பவலக்ஸ்மன் |
| | - | செல்வன் S. சதீஸ்குமார் |

## 2002 - 2003-ம் ஆண்டு செயற்குழு

காப்பாளர்:- செல்வன் A. சிறிகுமரன்
பொறுப்பாசிரியர்:- திரு. S. சிவசுப்பிரமணிய சர்மா
தலைவர்:- செல்வன் P. மயூரன்
உபதலைவர்:- செல்வன் S. தமிழன்பன்
செயலாளர்:- செல்வன் J. யசிந்தன்
உபசெயலாளர்:- செல்வன் P. கஜன்நாத்
பொருளாளர்:- செல்வன் P. பரணீதன்
இதழாசிரியர்:- செல்வன் A. குகரூபன்
விளம்பர முகாமையாளர்:- செல்வன் S. சாரூபன்
மன்ற உறுப்பினர்:- செல்வன் K. ஜயந்தன்
செல்வன் S. லதீனன்
செல்வன் R. சனாதனன்
செல்வன் P. கிருபரங்கன்
செல்வன் S. விமலசேகர்
செல்வன் N. யேகரஜீவ்
செல்வன் J. கிருஸ்ணராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவின் வரவினிலே....


**பொருளியல்**

1) தொழில் வாய்ப்பும் மனிதவளவிருத்தியும் சில அவதானிப்புக்கள் 1
2) வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும் பற்றிய கண்ணோட்டம் 7
3) சமனிலை தேசியவருமான நிர்ணயிப்பு - வரைபட விளக்கம் 14
4) இலங்கையில் பெறுமதி கூட்டிய வரியின் பயன்பாடு 17
5) வறுமைக் குறைப்புக்கான கொள்கைகளும் உபாய அறிக்கைகளும் 19

**வணிக கல்வி**

6) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள் 22
7) இலத்திரனியல் வணிகமும் அதன் அபிவிருத்தியும் 26
8) தகவல் தொழில் நுட்பத்தின் அறிமுகம் இலங்கையில் சமூக அபிவிருத்தியில் தகவல் தொழினுட்பத்தின் பங்கும் 30
9) முகாமைத்துவத்தில் ஐந்து S எண்ணக்கரு 33
10) இலங்கையின் கைத்தொழில் துறையின் அண்மைகால போக்குகள் 36

**கணக்கீடு**

11) உள்ளடக்க கிரயவியலும் எல்லைக் கிரயவியலும் 39
12) அறவிடமுடியாக்கடன், ஐயகடன் ஏற்பாடு, கடன்பட்டோர் கழிவு ஏற்பாடு 49
13) இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 3 55
14) நிறுவனங்களின் கணக்கீட்டு முறைகள் 61
15) கணக்கியல் பெறுமானத் தேய்வு தொடர்பில் MS-Excel மென்பொருளின் பங்களிப்பு 65

**ஏனையவை**

16) இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வும் உள்ளக சுயநிர்ணயமும் 69
17) Some Observations on our Educational system 78




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் தாயக வைப்பகத்துடனான இந்து மைந்தர்களின் சந்திப்பு

"யாழ் இந்துக் கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தினரின் ஒருமித்த தீர்மானத்துக்கமைவாக தமிழீழ வைப்பகத்தின் கிளிநொச்சி தலைமை அலுவலகத்தில் இடம் பெற்ற நேர்வி காணல்"

**நேர் காண்பவர்:-** நீங்கள் இவ் வைப்பகத்தினை எப்போது, எந்நோக்கத்துக்காக ஆரம் பித்தீர்கள்?

**முகாமையாளர்:-** தமிழ் மக்களின் பொருண்மியத்தை வலுப்படுத்த வேண்டும். தமிழரது சேமிப்பை ஊக்குவிக்க வேண்டும். அதற்காக வைப்பகம் எமது தேசியத் தலைவரின் கருத்துக்கு செயல் வடிவம் கொடுத்து 1994இல் தமிழீழ வைப்பகம் உதயமானது. தமிழ்மக்களின் சிதைந்து போன பொருளாதார வலுவை மீண்டும் சீர்ப்படுத்த தமிழ் மக்களின் காப்பகமாக விளங்க வேண்டும் என்பதே இவ்வைப்பகம் ஆரம்பிக் கப்பட்டதன் நோக்கமாகும்.

**நேர் காண்பவர்:-** தமிழீழ வைப்பகம் முதன் முதலில் எப்பிரதேசத்தில் யாரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது?

**முகாமையாளர்:-** எமது வைப்பகமானது 1994ஆம் ஆண்டு வைகாசி 23ஆம் நாள் யாழ் கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் எனும் இடத்தில் தமிழீழ கல்விக் கழக பொறுப்பாளர் இளங்குமரனால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. தமிழீழ வைப்பகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு, செயற்பாடு என்பன ஏற்றுக்கொள்ளப்பட்ட வைப்பக நடைமுறைகட்கு அமையவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**நேர் காண்பவர்:-** தற்காலத்தில் ஏனைய அரச, தனியார் வங்கிகள் பல வைப்புத் திட்டங்களையும் கடன் திட்டங்களையும் அறிமுகப்படுத்தி வருகின் றன. அந்த வகையில் தமிழீழ வைப்பகத்தின் வளர்ச்சி பற்றியும் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**முகாமையாளர்:-** தமிழ் மக்கள் நீண்ட காலமாகவே வறுமையின் மத்தியிலும் சேமிப்பு பழக்கத்தை உடையவர்கள் என்பது யாவரும் அறிந்த விடயமாகும். இத்தகைய பண்புகளுக்கமைய நிறுவனமயப்படுத்தப்பட்ட சேமிப்புப் பழக்க வழக்கத்தை எற்படுத்துவதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் நாட்டின் முதலீட்டுத் துறையை மேம்படுத்துவதற்கான கடன் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

★ ஏனைய வங்கிகளுடன் ஒப்பிடும்போது எமது வட்டி வீதங்களில் பெருமளவு வித்தியாசங்கள் காணப்படவில்லை. ஏனைய வங்கிகள் விவசாயத் துறைக்கோ அன்றி ஏழைகளின் சிறு தொழில் முயற்சி களுக்கோ கடன் வழங்கும் அளவு மிக குறைவாக உள்ளது. ஆனால் எமது வைப்புத் திட்டங்கள் கூடுதலாக விவசாயிகளுக்கு கடன் வழங்கி அவர்களை ஊக்குவித்து தமிழீழத்தை பொன் விளையும் பூமியாக மாற்றி விவசா யத்துறையை மேம்படுத்துவதே எமது வைப்பகத்தின் எண்ணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நேர் காண்பவர்:-** இதுவரை காலமும் உங்களால் அறிமுகம் செய்யப்பட்ட வைப்புத் திட்டங்கள் எவை?

**முகாமையாளர்:-**
★ வளர்ந்தோர் தேட்ட [Saving] வைப்புத் திட்டம்
★ சாதாரண நிலையான வைப்புத் திட்டம்
★ வெளிவரவு நிலையான வைப்புத் திட்டம்
★ "சிறார்" உண்டியல் தேட்ட வைப்புத் திட்டம்
★ "ஊற்றுக்கண்" பெண்கள் வைப்புத் திட்டம்
★ "அமுதம்" சிறார் தேட்ட வைப்புத் திட்டம்
★ "தாயக ஒளி" வதியாதோர் நிலையான வைப்புத் திட்டம் போன்றவை
★ நகையடைவு கடன் திட்டம்
★ வாணிப கடன் திட்டம்
★ மேம்பாட்டு கடன் திட்டம்
★ சுழற்சி முறை வாணிப கடன் திட்டம்
★ சுய தொழில் முயற்சி கடன் திட்டம்
★ சமூக பொருண்மிய மேம்பாட்டு கடன் திட்டம் என்பன முக்கியம் வாய்ந்தவை.

**நேர் காண்பவர்:-** தற்போதைய சமாதான சூழலுடன் இணைந்தவாறு தமிழீழ வைப்பகத்தின் வளர்ச்சி தொடர்பின் எதிர்காலத் திட்டங்களை எடுத்தியம்ப முடியுமா?

**முகாமையாளர்:-** இன்று நிலவி வரும் மோதல் தவிர்ப்பு சூழலால் பல்வேறு நாடுகளில் இருந்தும் வருகைதரும் புலம் பெயர்ந்தவர்களுக்கான "தாயக ஒளி" என்ற வைப்புத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளோம். இதன் மூலம் திரட்டப்பட்ட நிதி, வேளாண்மை, கடல்தொழில் கைத்தொழில் ஆகிய துறைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டமானது வெளிநாட்டில் வதியும் புலம் பெயர்ந்தவர்களின் வேண்டுகோளுக்கு அமையவே தோற்றம் பெற்றது. இதன் மூலம் தமிழீழ பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் புலம் பெயர்ந்த எமது உறவுகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றன.

**செவ்வி காண்பவர்:-** இலங்கை அரசின் இராணுவக் கெடுபிடிகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உங்கள் வைப்பகத்தின் புனர்வாழ்வு உதவிகள் பற்றி கூற முடியாது?

**முகாமையாளர்:-** ★ இடம் பெயர்ந்த மக்களுக்கு நாம் பல்வேறுபட்ட உதவிச் செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறோம். அந்த வகையில் புலம் பெயர்ந்தவர்களுக்கான வீடமைப்பு கடன் வழங்கல் மற்றும் விவசாய உதவிகளுக்கு ஊக்குவிப்பு வழங்கல் என்பனவற்றைக் கூறலாம்.

**நேர் காண்பவர்:-** இறுதியாக எமது "வரவு" வர்த்தக சஞ்சிகை மூலம் உங்கள் வாடிக் கையாளருக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**முகாமையாளர்:-** எமது வைப்பகம் தமிழரது பொருண்மீய வளத்தை மேம்படுத்தும் நோக்குடனேயே தலைவரால் உருவாக்கப்பட்டது. எனவே தமிழீழ மக்கள் அனைவரும் தமிழீழ வைப்பகத்தில் இணைந்து தமிழரது பொருண்மீய வலுவை உலகதரத்துக்கு அமைவாக உருவாக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துவின் வணிக மன்றம் நீடூழி வாழ வாழ்த்துவோம்!

உங்கள் நலனில் அக்கறை உள்ள மருந்தகம்.



# MEDI AIDS





MEDI AIDS
*Dispensary*





182, செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவே நீ வளமாய் வருக.

Dealers in Reynolds pen

இன்றே விஜயம் செய்யுங்கள்




# எஸ். வீ. முருகேசு

154, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

---

வணிக மலர் "வரவு" காலமெல்லாம் மலர்ந்திருக்க காத்திருப்போம்

# குலம் கிறீம் ஹவுஸ்





சுகாதார முறைபடி தயாரிக்கப்பட்ட நாவினிக்கும்

- ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
- சொக்லட் ஐஸ்கிறீம்
- நட்ஸ் ஐஸ்கிறீம்



- ஜெலி ஐஸ்கிறீம்
- புரூட்சலாட் ஐஸ்கிறீம்
- வெனிலா ஐஸ்கிறீம்

மற்றும்

மிச்சர், மட்டன் றோல், லட்டு, மஸ்கட், அங்கர் பட்டர், ஸ்பெஷல்பீடா, பட்டர், கேக் வகைகள். ஐசிங் கேக் வகைகளையும் சுவைத்து மகிழ்ந்திட நீங்கள் நாடவேண்டிய குளிர் அகம்

*Hulam Cream House*

*226, Hospital Road, Jaffna.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் வாய்ப்பும் மனிதவள விருத்தியும் - சில அவதானிப்புகள்

## அறிமுகம்

எல்லா நாடுகளினதும் பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி என்பன தொடர்பாக அதிக முதன்மைப்படுத்தும் இலக்கு - அம்சம் தொழில் வாய்ப்பு வழங்கும் ஆற்றலேயாகும். அபிவிருத்தியை உருவாக்குவோர் தொடர்பாகவும், அபிவிருத்தியின் பயன்களை அனுபவிப்போர் தொடர்பாகவும் தொழில் வாய்ப்பு முக்கியத்துவமுடையன.

நாடுகளின் பொருளாதார செழிப்பு நிலை, பொருளாதார மந்தநிலை என்பன தொழில் வாய்ப்பு நிலையினூடா கவே மதிப்பிடப்படுகின்றன. செல்வந்த நாடுகள் மற்றும் வறிய நாடுகளிடையி லான வேறுபாடுகளை இனங்காட்டுகின்ற பல்வேறு மாறிகள் உள்ளபோதிலும் அவற்றுள் தொழில் வாய்ப்பு என்பதே முதன்மையானது.

இத்தொழில் வாய்ப்பு நாடுகளின் மனித வளவிருத்தி நடவடிக்கைகளுடன் தொடர்புபடுத்தி ஆராயும் போக்கு அதிகரித்துவருகின்றது. தேசிய பொருளாதார திட்டமிடல் இரண்டையும் அடியொற்றியதாக பெரிதும் தயாரிக்கப்பட்டு வருகிறது. மனித வளங்களை விருத்தி செய்யும் செயன்முறைகள் தொழில் வாய்ப்புக்களுடன் ஒத்துச் செல்வதாக அமைய வேண்டும் என்பதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் தொழில் வாய்ப்பு, மனித வளவிருத்தி என்பவற்றிடையிலான தொடர்புகள் பற்றியும், அவை அபிவிருத்தியில் கொண்டுள்ள தாக்க விளைவுகள் பற்றியும் சுருக்கமாக ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## தொழில்வாய்ப்பு எண்ணக்கரு

பொருளாதார ரீதியில் தொழில் வாய்ப்பு என்பது எதைக் குறிப்பிடுகிறது என்பது தெளிவாக விளங்கிக் கொள்ளப் படல் வேண்டும்.

நாட்டில் விவசாயத்துறை விவசாய விளை பொருட்களை வெளியீடா கத் தருகிறது. தானியங்கள், காய்கறி, இறைச்சி வகை, பழவகை, கடலுணவுகள் போன்றவையும் பல்வேறு அகழ்வு மூலம் பெறப்படும் கனிமங்களும் வெளியீடாகப் பெறப்படுகின்றன. இயற்கையின் கொடைகளில் மனிதன் தனது சக்தியையும் நேரத்தையும் திட்டமிட்டு, அதிக ஒழுங்குடனும் கவனத்துடனும் பிரயோகிக்கும் போது தனது உடல் மற்றும் மூளைச் சக்தியைப் பயன்படுத்தும் போது உற்பத்திகள் கிடைக்கின்றன. ஒழுங்கு படுத்தப்படாத நிலையில் பழம் பொறுக்குதல், வேட்டையாடல் என்றிருந்த தொழில் வாய்ப்பு பின்பு ஒழுங்குமுறைப்பட்ட பொருளாதார முறையில் வேளாண்மை, சுரங்கம், மீன்பிடி, மிருக வளர்ப்பு, காட்டுத் தொழில் என்ற பல படிமுறைகளிலானதாக வளர்ச்சி பெற்றது.

விளக்கப்படம் 2

*இயற்கை வளங்கள் →மனிதன்→பொருளாதார வெளியீடுகள்*

என்ற தொடர்பு முறையில் இணைந்ததாகிறது. மனிதனின் உற்பத்தி சார்ந்த ஈடுபாடு தொழில்வாய்ப்பு என்பதாக இது விளக்குகிறது. தேசங்களின் கொடைகளைக் கண்டு இரசிப்பதற்கானதாக மாத்திரம் பயன்படுத்துவதில்லை. அவற்றின் இயலுமைகளை இனங்காணவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைப் பயன்படுத்தி, உற்பத்தியைப் பெருக்கவும் தனது ஆற்றலைப் பயன் படுத்துகிறான். அதுவே தொழில் வாய்ப் பாகிறது.

தொழில் வாய்ப்பு உருவாக்கம் பொருளாதார ரீதியில் பின்வரும் கருத்துக் களை வெளிப்படுத்துகிறது.

* மனிதன் இயற்கை வளங்களுடன் தொடர்பு கொள்ளும் முறை

* மனிதன் தனது மூளை (சிந்தனை) உடல் (தசைவலு) என்பவற்றை தனக் காகவும் சமூகத்துக்காகவும் பயன்படுத் தும் வழிமுறை.

* இயற்கை வளங்களின் தேசிய பயன் பாடுகளை வெளிக்கொணரும் முறை

* மனிதன் தனது தேவைகளையும் ஆசைகளையும் நிறைவு செய்வதற்கு உதவுகின்ற பண வருமானம் மற்றும் மெய் வருமானம் (Real Income) பெறுதற் கான மதிப்புடைய வழிமுறை.

தொழில் வாய்ப்பு உருவாக்கம் என்பதில் ஒரு நாடு வெற்றியடையும் போது இயல்பாகவே தேசிய உற்பத்திப் பெருக்கம், வருமான உயர்வு, விலை மட்ட வீழ்ச்சி, வாழ்க்கைத் தர உயர்ச்சி என்பவற்றைப் பெற்றுக்கொள்வதும் உறு திப்படுத்தப்படுகிறது.

தொழில் வாய்ப்பு வீழ்ச்சியடை யும் போதெல்லாம் வறுமையும், பொரு ளாதார மந்தமும் ஏற்படுகிறது. அரசின் மீதும் அறிவாளிகள் மீதும் பொது மக்கள் நம்பிக்கை இழந்து விடுகிறார்கள். இதனால் அரசியல் உறுதியின்மை ஏற்படு கிறது. சமூக அமைதியின்மைகள் பரவத் தொடங்குகின்றன.

இவ்வாறு தொழில் வாய்ப்பு தனி மனிதனுடனும் தனியொரு உற்பத்தி மூலத்துடன் தொடர்புடையது போல் தென்பட்டாலும் தேசத்தின் எல்லா அடிப் படைகளையும் தளர்ச்சியடையச் செய் யக்கூடியது. தொழில் வாய்ப்பு வலுமிக்க பொருளாதார மாறியாகும்.

விவசாயத்துறையைப் போன்றே கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளி லும் வெளியீடுகளுக்காக பல்வேறு பௌதீக நிதி வளங்களைப் பயன்படுத் தும் போது மனிதனுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கிறது. உற்பத்தி முனைப்பு அதிகரிக்கும் போதெல்லாம் உற்பத்தி களில் பெருக்கம் ஏற்படும் போதெல்லாம் நாடுகளில் தொழில் வாய்ப்பு கிடைக் கிறது. அதன் தொடர்பயன்களாக தேசிய வருமான உயர்ச்சியும், வாழ்க்கைத் தர உயர்ச்சியும் பெறப்படுகிறது. இதுவே நாடுகளின் அபிவிருத்தியாகின்றது.

## தொழில் வாய்ப்பும் தொழில் நுட்பமும்

இயற்கை வளங்களுக்கும் மனித னுக்கும் இடையிலான ஊடக அம்சம் இணைப்பு அம்சமாக தொழில் நுட்பம் இனங் காணப்படுகிறது. இயற்கையை எளிதாகவும், விரைவாகவும் வினைத் திறனுடனும் கையாள்வதற்கு பயன் படுத்திக்கொள்வதற்குரிய புதிய கருவி களையும், நுட்பங்களையும் முறைகளை யும் கண்டறிகின்றான். பின்பு பொருத்த மான சூழலில் வினைத்திறனுடன் கையாள்கிறான். அதாவது தொழில் மற் றும் உற்பத்திக்கான நுட்பங்களைக் கண் டறிவதில் மனிதனின் ஓய்வும், சிந்தனை ஆற்றலும் பங்களிப்புச் செய்கின்றன. பின்பு பொருத்தமான உற்பத்தி களில் அதனைப் பிரயோகித்துக் கொள்கின்றான். அப்போது தேவைக்கேற்ப நுட்பங்களையும் மாற்றிய மைக்கின்றான். தனது சக்திக்குப் புறம்பாக இயற்கையில் உள்ளடங்கியுள்ள சக்திக ளுக்கும் செயல்பாட்டு வடிவங்களை வழங்குகிறான். அங்கும் மூளை உழைப் பின் பங்கு பயன்படுகிறது.

தனி நபருக்காக சிறு அளவில் பல தடவை உற்பத்திகளில் தனிநபர் ஈடுபட்டபோது தொழில் நுட்பம் சிறிதா யும், எளிதாயுமிருந்தது. ஆனால் பின்பு கோடிக்கணக்கான மக்களின் தேவைக் காக பெரியளவில் ஒரே தடவையில் உற்பத்தி செய்ய மனிதன் கட்டாயப்படுத் தப்படும் போது தனக்கு உதவியாக தன்னை வலுவூட்டுவதற்கு ஏற்றதாக பாரிய இயந்திரங்களையும் நுட்பமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய இயந்திரங்களையும் நுட்பமான பொறிமுறைகளையும் அதிக சக்தி நுகர்வையும் சிக்கலான செயல் முறைகளையும் கொண்ட நவீன தொழில் நுட்பங்களை வடிவமைத்துக் கொள்கின்றான். இதிலும் நுட்பத் தொழில் வாய்ப்புக்கள் உருவாகின்றன.

விளக்கப்படம்: 2

*இயற்கைவளம் – மனிதன் – தொழில் நுட்பம் – பொருளாதார வெளியீடுகள்*

என்ற புதிய உற்பத்தி ஒழுங்கு முறை உருவாகின்றது. தொழில் நுட்பம் என்பதே ஒரு உற்பத்தி (Output) யாக வளர்ச்சி பெற்றது. ஆனால் அது ஒரு மூலதன வெளியீடாக மாறியது. வெளியீடுகளைச் செய்வதற்கான வெளியீடாகியது. நுட்ப அறிவும், நுட்பத்திறன்களும் ஒருங்கிணைக்கப்படும் போது புதிய தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட்டன. சில நாடுகள் தனித்தன்மையுடன் இத்தகைய தொழில் நுட்பங்களை வடிவமைத்து, தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து, பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதிக செலாவணிகளை உழைப்பதற்கு முயன்றன. வெற்றியும் பெற்றன. இதனால் புதிய மாதிரி தொழில் வாய்ப்புக்கள் உருவாகின.

* நுட்பங்களுக்கான ஆராய்ச்சிகள் - ஆய்வாளர்.

* நுட்பங்களுக்கான ஆராய்ச்சிகளுக்கு காட்சி வடிவம் - பிரயோக வடிவம் கொடுத்தல், நவீன பொறிகள், இயந்திரங்கள், கருவிகள் வடிவமைத்தல் - பொறியியலாளர்.

* பொறிகள், கருவிகளை இயக்குதல், பராமரித்தல், பழுதுபார்த்தல், மாற்றியமைத்தல் - தொழில் நுட்பவியலாளர்.

* பொறிகளை இயக்குதற்கான கல்வியையும் பயிற்சியையும் வழங்குதல் - தொழில் நுட்ப பயிற்றுநர், ஆசிரியர்.

* பொறிகளின் நாளாந்த செயற்பாட்டு ஒழுங்குகளைக் கண்காணித்தல் உரியவாறு வழிப்படுத்தல் - மேற்பார்வையாளர்.

* பொறிகளை இயக்குதற்கும் அதன்வழி உற்பத்தியைப் பெறுதற்குமான உடல், தசை வலு சார்ந்த வேலைகள் - பயிற்சி பெற்ற தொழிலாளர்.

இவ்வாறு தொழில் நுட்பம் தன்னளவில் பல்வேறு மட்டங்களில் தொழில் வாய்ப்பு வழங்கும் துறையாக வளர்ச்சியடைந்தது.

இது தொழில் வாய்ப்பு தொடர்பான புதிய நெருக்கடியை உருவாக்கியது. தன்னளவில் ஒரு தொழில் செய்தல் என்பதை தடைசெய்து ஒருவகைக் கல்வியும், குறிப்பான பயிற்சியும் பெற்று தகைமைப்படுத்தியதன் பின்பே தொழில் வாய்ப்பு என்ற புதிய நிலை உருவானது. இதில் மனித வளத்தை விருத்தி செய்தல் என்ற ஒரு புதிய தேவைப்பாடு அவசியம் உருவாயிற்று.

ஏர் மூலம் உழவு செய்தவர் டிறக்டர் மூலம் உழுவது என்ற நிலையில் டிறக்டரை இயக்குதற்கான பயிற்சி கட்டாயமாகிறது. இது மனித வளவிருத்தி என்ற புதிய தேவையை உருவாக்குவதாகும்.

தொழில் நுட்பம் - "நுட்பமான வேலை" என்ற புதிய பாகுபாட்டையும் வேலை உலகம் உருவாக்கிற்று. இங்கு நுட்பம் (Technology) என்பது ஒரு ஒழுங்குமுறையான கல்வியாகவும், பயிற்சியாகவும் மாறியது. இது காலத்துக்குக் காலம் மாற்றியமைக்கப்பட வேண்டியதாக, புதுப்பித்துக் கொள்ளவேண்டியதாக காணப்பட்டது. இத்தகைய ஒரு ஏற்பாடு மனிதவள விருத்தி (Human Resource Development) என்ற வகையில் தொழில் வாய்ப்பின் முன் நிபந்தனை (PreCondition) யாக மாறியது. கல்வியோடும் விஞ்ஞானத்தோடும், பொறியியலோடும் மனித உறவுகளோடும் ஒருங்கிணைந்ததாக மனித வளவிருத்திச் செயல்முறை வளர்ந்துள்ளது.

மனித வளத்தை விருத்தி செய்யும் கல்வி, தொழில்நுட்பம் போலவே சில நாடுகளின் ஏற்றுமதிப் பண்டமாகி, அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாக உலக மயப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் உலக ரீதியில் தொழில் வாய்ப்பு உருவாக்கம் என்பது தொழில் நுட்பத்துடனும் மனிதவள விருத்திக் கல்வியுடனும் நெருக்கமாகப் பிணைக் கப்பட்டு விட்டது. இதனால் மனிதன் நேரடியாக இயற்கை வளங்களைப் பயன் படுத்துதல் என்பதற்குப் பதிலாக "முன் தகுதிப்படுத்தல்" என்ற தகைமை நிலை யின் பின்பே தொழில் வாய்ப்பும் பெற வேண்டிய சிக்கலான வலையமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுவிட்டது.

## முதலாளித்துவமும் தொழில் வாய்ப்பும்

கைத் தொழிற்புரட்சியின் விளை வாக உருவான இருவர்க்கத்தினர் தான் முதலாளிகளும், தொழிலாளிகளும். விவ சாயக் கிராமங்களில் நில உரிமையில் மேலாதிக்கம் பெற்ற நிலப்பிரபுக்கள் கைத் தொழில் நகரங்களுக்கு வந்து முதல் (Capital) என்ற காரணியில் கட்டுப் பாட்டை வைத்திருப்போராக மாறியபோது தொழில் நுட்பமும், தொழில் நுட்ப பொறி களும் மூலதன அம்சங்களாகின. முதலா ளிகளின் கட்டுப்பாட்டுக்குரியதாகின. இத னால் தொழில் வாய்ப்பு மற்றொரு புதிய கட்டத்தை அடைந்தது.

விளக்கப்படம்: 3

*இயற்கை வளங்கள் → முதலாளிகள் →தொழில்நுட்பம் → மனிதவள கல்வி → தொழில் வாய்ப்பு → பொருளாதார வெளியீடுகள்.*

முதலாளிகள் தனி நபர்களாக இருந்த நிலை உலகின் தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்திப் பெருக்கம் என்பவற் றுடன் இணைந்த வகையில் கம்பனிகளா கவும் பின் பல்தேசிய கூட்டுத்தாபனங் களாகவும் (Multi National Corporations) வளர்ச்சி பெற்றன. கோடிக் கணக்கான டொலர்களை முதலீடாகக் கொண்டு மில்லியன் கணக்கிலான உற்பத்திகளைச் செய்து உலகின் எல்லா நாடுகளுக்கும் விற்பனை செய்யும் நிறுவ னங்களாக விளங்கிய இந்நிறுவனங்கள் உலகின் பல நாடுகளின் கிளைகளை நிர்வகித்தன.

இதனடிப்படையில் ஒரு நாட்டின் முதலாளிகள் நிறுவனங்கள் உலகின் பல நாடுகளில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கின. இதனால் சர்வதேச ரீதி யில் தொழில் வாய்ப்பு உருவாக்கம் என்பதுடன் சேர்ந்து சர்வதேச தொழில் வாய்ப்புக்கான மனித வளவிருத்தி பற்றிய கருத்துக்களும் வளர்ச்சி பெற்றன; வலிமை பெற்றன. நாடுகளிடையே மூல தனம் அசைந்தது. தொழில் நுட்பம் அசைந்தது. இதன் பின்னணியில் தொழில் வாய்ப்புக்களுக்காக ஊழியர் நகர்ந்தனர். தொழில் வாய்ப்பு குடியகல்வு குடிவரவுப் பிரச்சினையாகவும் அரசியல் குடியுரிமைப் பிரச்சினையாகவும் பரிமா ணம் பெற்று சர்வதேச சட்டங்களை சர்வதேச தொழில் வாய்ப்பு மற்றும் தொழிலாளர் நகர்வு தொடர்பாக உரு வாக்கும் நிலைமை உருவாயிற்று.

குடியேற்றவாத காலப் பகுதியி லும் தொழில் காரணமாக நாடுகளுக் கிடையே மக்கள் கூட்டம் கூட்டமாக நகர்த்தப்பட்டதையும் இதனுடன் தொடர்பு படுத்திப் பார்ப்பது பொருத்தமானது. இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புக்காக இலங்கை, மலேசியா, பர்மா, பிஜி, தென் ஆபிரிக்கா போன்ற பல நாடுகளுக்கு நகர்த்தப்பட் டனர். இது நீண்டகால அரசியல் பிரச் சினையாகிவிட்டமை குறிப்பிடத்தக்கது.

நவ குடியேற்றவாதத்தின் பின் னும் தொழில் வாய்ப்புக்காக தொழி லாளர் உலக ரீதியில் நகர்வது அதிகரித் தது. 1990 களிலிருந்து உலக மயமாத லின் கீழ் தொழிலாளர் சர்வதேச ரீதியில் அசைந்து செல்லுதல் உலக ஒழுங்க மைப்புக்களில் ஒன்றாகி விட்டது.

சர்வதேச தொழில் வாய்ப்பு தொடர்பாக சர்வதேச சட்டங்கள் உரு வாக்கப்பட்டுள்ளன. உழைக்கும் வருமா னங்களை தம் தாய்நாடுகளுக்கு அனுப் பும் உரிமை, நீண்ட காலம் பிற நாட்டில் வசிக்கும் உரிமை தொழில் புரியும் நாடுகளின் தொழிற் சட்டங்களுக்குக் கட்டுப்படுதல், நீண்டகால தொழில் சார் சேமநிதி ஏற்பாடுகள் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு புதிய சட்டங்களும் விதிமுறைகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன. சர்வதேச தொழில் நிறுவனம் (International Labour Organization- ILO) போன்றனவும் உலக ரீதியில் தொழில் விதிமுறைகள் தொழிற்பாதுகாப்பு பற்றிய சட்டங்களையும் நியமங்களையும் விதிமுறைகளையும் உருவாக்கி வருகின்றன.

முதலாளித்துவ நாடுகள் தொழிற் சங்கங்களை ஜனநாயக நிறுவனங்களாக அங்கீகரித்துள்ளன. இதனால் தொழில் உரிமைகள் ஜனநாயக உரிமைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் தொழில் வாய்ப்பு, தொழிலாளர் நல வசதி, தொழிலாளர் பாதுகாப்பு, தொழிலாளர் பதவி உயர்வுகள், இளைப்பாறுதல் போன்ற பல அம்சங்களும் தொழிற் சங்கங்களுக்கும் தொழில் வழங்குநருக்குமிடையில் தெளிவான தொடர்புகளையும் எல்லைகளையும் வரையறை செய்கின்றன. உலக ரீதியில் தொழிற் சங்க விதிமுறைகளும் நடைமுறைகளும் மாற்றமடைந்து வந்துள்ளன.

தொழில் வாய்ப்பு தனிநபர் சார்ந்த உள்நூர் நிலைமை என்பதிலிருந்து உலக ஊழியப்படை (Global Labour Force) சார்ந்த சர்வதேச அம்சமாக வளர்ச்சியடைந்திருப்பது, தொழில் வாய்ப்பின் அதீத பொருளாதார முதன்மையை வெளிப்படுத்தி நிற்கிறது.

## மனிதவள விருத்தி

தொழிலாளர்கள் தனியே உற்பத்தியில் உழைப்புச் சக்தியை உள்ளிடுபவர்கள் என்ற நிலைமை இன்றில்லை. உற்பத்தியில் பங்கு கொள்வதுபோல் அதன் நலன்களை அனுபவிக்கும் உரிமையும் கொண்டுள்ளனர். முகாமைத்துவத்தின் கட்டளைகளுக்கு உட்படுதல் என்ற நிலையிலிருந்து முகாமைத்துவத்தின் முடிவுகளை செழுமைப்படுத்துவதில் பங்களிப்புச் செய்யக் கூடியவர் என்ற நிலைமைக்கு மாறியுள்ளது. உற்பத்தியில் மூலதனம், முயற்சியாண்மை போல அல்லது அதனை விடவும் முக்கியமானதாக ஊழியம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் நிறுவனங்களின் முன்னேற்றத்திற்காக மாத்திரம் உழைக்க வேண்டியதில்லை. சமாந்தரமாக தனது தனிப்பட்ட முன்னேற்றம், தனது குடும்பத்தின் குறுகிய கால மற்றும் நீண்ட கால முன்னேற்றம் என்பதற்காகவும் உழைக்க வேண்டும்.

இத்தகைய கருத்துக்களை உலக ரீதியில் வற்புறுத்தி நடைமுறைப் படுத்துவதாக அமைவதே மனிதவள விருத்தி பற்றிய கோட்பாடுகளும், நடைமுறைகளுமாகும்.

மனிதவளமாக சாதாரண மனிதர்களை வளர்த்தெடுத்தால் மாத்திரமே தொழிற்றுறையினரின், தொழில் வழங்குநரின் தெரிவுக்கு அமைய தொழில் வாய்ப்பு பெறமுடியும். அல்லது தொழிலற்றோராகி துயருற வேண்டி ஏற்படும். மனித வளவிருத்தி என்பது பின்வரும் அம்சங்களை உள்ளடக்குகிறது.

* உடல், உள ஆற்றல், சமநிலை, என்பவற்றை உருவாக்கக் கூடிய நிறையுணவை உரியவாறு சிறுவயதிலிருந்தே வழங்குதல்.

* அடிப்படை அறிவை வழங்கக்கூடிய கலைத்திட்டத்தின்படி ஒழுங்கு முறையிலான கல்வியை வழங்குதல்,

* பல்வேறு கருவிகள், பொறிகளை உரியவாறு கையாளக்கூடிய திறன்களை விருத்தி செய்தல். இதற்கேற்ற பயிற்சியை வழங்குதல்.

* தொழில் ஈடுபாடு, தொழில் நிறுவனங்களில் விசுவாசத்தை ஏற்படுத்தக் கூடியவாறு தொழிலிடத்தில் பாதுகாப்பையும் புற வசதிகளையும் வழங்குதல்.

* தொழில் ஈடுபாடு, நீண்ட நேரம் உழைத்தல் என்பவற்றை ஊக்குவிக்கும் வகையில் குடும்ப உறுப்பினரின் நலன்களைப் பாதுகாத்தல்.

* உழைப்பின் நீண்டகால பயனை உத்தரவாதம் செய்யும் வகையில் ஓய்வூதியம், சேமநிதி, நலமேம்பாட்டு நிதி என்பவற்றை உருவாக்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தொழிலாளர் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் தொழிற்சங்க உரிமைக்கு இடமளித்தலும், முகாமைத்துவ தீர்மானங்களில் பங்கேற்பதற்கு அனுமதி வழங்குதலும்.

இத்தகைய முன்னேற்றகரமான கொள்கைகளும் நடைமுறைகளும் தொழில் வாய்ப்புடன் இணைந்த வகையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இது மனிதவள விருத்திச் சிந்தனை முன்னேற்றத்தின் விளைவேயாகும்.

## முடிவுரை

தொழில்வாய்ப்பு பற்றிய எண்ணக்கரு உலகின் பொருளாதார அரசியல், தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைந்து மாற்றமடைந்துள்ளது.

தொழில் வாய்ப்பு, விஞ்ஞானம், தொழில்நுட்பம், தொழிற்சங்க அரசியல் என்பவற்றுடன் நன்கு பிணைக்கப்பட்டும் விட்டது.

கிராமிய விவசாயத்தில் தனியொரு விவசாயியாக உழவுத் தொழிலில் ஈடுபடுதல் என்ற தளத்திலிருந்து உலகின் பெரிய நகரங்களில் நிபுணத்துவ அறிவும், நுட்பபயிற்சியும் கொண்டு தகவல் தொடர்பு மையங்களில் அருவ நிலையில் பணியாற்றும் நுட்பவியலாளர் (Virtual Labour-Experts) என்ற உயர்நிலைக்கு தொழில் வாய்ப்பு மாற்றமடைந்தது.

இன்று பொருளியலாளர், உற்பத்தி, செலாவணியுழைப்பு, நலப்பொருளியல், சர்வதேச வர்த்தகம், சர்வதேச முதலீடு என்பவற்றுடன் தொழில் வாய்ப்பை தொடர்புபடுத்துகின்றனர்.

மனித உரிமையாளர், பெண்கள், சிறுவர், உடல், உள குறைபாடுடையோர் வறியோர் போன்ற தீங்குறு ஊழியம் (Vulnerable Labour) தொடர்பாக அதீத கவனம் செலுத்த வேண்டுமென வற்புறுத்துகின்றனர்.

அரசியல் கட்சிகள் வாக்குத் தேவைக்காக தொழிலாளர் உரிமை பற்றிக் குரல் எழுப்பி வருகின்றனர்.

இவ்வாறு தொழில் வாய்ப்பு மனித வள விருத்திக் கோட்பாட்டுடன் இணைந்து தொழில் புரியும் உற்பத்திச் சக்தியை மேம்படுத்தி வருகிறது.

**மா. சின்னத்தம்பி** *M.A, M.Phill.*
தலைவர்,
கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும் பற்றிய கண்ணோட்டம்

# The View of Resources & Utilization

## அறிமுகம் (Introduction)

மனித தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பொருட்கள், சேவைகள் உற்பத்தி செய்வது மிக அவசியமாகும். உற்பத்தி செய்வதற்குரிய மூலவளங்களின் கிடைப்புத் தன்மை, அவற்றை பயன்படுத்தும் திறன், வளத்திரட்சி மிக மிக இன்றியமையாதது. இக்கட்டுரையாளரின் நோக்கம், மூல வளங்களின் கிடைப்பும், அவைகளின் பயன்பாடும், அவை தொடர்பான யதார்த்த நிலைமைகளை, தனியார்துறை அரச (பொது)த் துறை, கூட்டுறவுத் துறை, வெளிநாட்டுத் துறை ஆகிய துறைகள் சார்பாக ஆராய்வதாகும்.

## வளங்கள் பற்றி...

பொருளியலறிஞர்களது ஆராய்வின்படி, மூலவளங்கள், மனிததேவைகளுடன் ஒப்பிடுகையில் வரையறுக்கப் பட்டவை. (அருமையானவை). இதனால் பொருளியல் மூலதனப் பிரச்சினைகளான "அருமை" "தெரிவு" "பரிமாற்றம்" ஆகியவை பொதுவானவையாக இனங் காணப்பட்டுள்ளன. இந்நிலையில் இவ் வருமையான வளங்களை சிறப்பாக ஒதுக்கீடு செய்தல், பயன்படுத்தல் தொடர்பாக, வீட்டுத்துறை (தனியார்) அரச துறை, நிறுவனத்துறை, வெளிநாட்டுத் துறை என்பவற்றிடையே குறை, நிறைகள் காணப்படுகின்றன.

அரசியற் பொருளாதாரத்தின் தந்தையான அடம்ஸிமித் (Adamsmith) வளங்களை நான்காக வகைப்படுத்தினார். அவையாவன:

1. நிலம் (Land)
2. உழைப்பு (Labour/Labor)
3. மூலதனம் (Capital)
4. தொழில் முயற்சியாண்மை (Entrepreneurship)

என்பனவாகும். மேற்படி வகைப்படுத்தலை, நவீன பொருளியலாளர்கள் மூன்று வகைப்படுத்தினர். அவைவ்யாவன:

1. இயற்கை வளம் (Natural Resource)
2. மனித வளம் (Human Resource)
3. பொருள்சார் வளம் (Material Resource)

நான்கு வளங்களை மூன்றாக வகைப் படுத்தியமைக்குக் காரணம் உழைப்பு (L), தொழில் முயற்சியாண்மை (H) ஆகிய இரண்டினையும் ஒன்றாக இணைத்து "மனித வளம்" என்ற பிரிவுக் குள் அடக்கிய மையேயாகும். இருப்பினும் உழைப்பு காரணியிலிருந்து, தொழில் முயற்சியாண்மையை வேறுபடுத்தும் பல விசேட அம்சங்கள் காணப்படுகின்றன. ஆனால் மனித வளமானது இயற்கையாகவும், செயற்கையாகவும் உருவாக்கக் கூடிய வளமாகக் காணப்படுகின்றது.

## நிலம் (Land)

பொதுவாக தரைத்தோற்றத்தை நிலமாக கருதிய போதிலும் பொருளியலில், நிலம் என்பதில் இயற்கை தரைத் தோற்றம், காலநிலை, புவியியல் எல்லை, நீர்வளம், (ஆறு, கடல், குளம்) இயற்கை தாவரங்கள், கனிப்பொருள் வளங்கள் ஆகியன யாவும் அடங்குகின்றன. இவை இயற்கையின் கொடைகள் (Natural Gifts) ஆகும். நிலம் பல்லினத் தன்மை கொண்டது. இடம் பெயர்த்த முடியாதது. நிரம்பல் நெகிழ்ச்சி அற்றது. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதிக் குட்படுவது. உற்பத்தியிலீடுபடுத்துவதற்கு வாடகை/குத்தகை காரணி வருமானமாக பெறுகின்றது. தனியார் துறையைப் பொறுத்தவரையில் நிலப்பயன்பாடுகள் ஓரளவு உற்பத்தித்திறனுடன் பயன்படுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன. அரசு/பொதுத்துறையைப் பொறுத்தவரை நிலப்பயன்பாடு குறை இயலளவு நிலையிலேயே பயன்படுத்தப் படுகின்றன. (உ +ம்) அரச காணிகளில், தனியார் அத்துமீறி குடியேறும் சம்பவங் கள் இதனைப் புலப்படுத்துகின்றன. அத் துடன் அரச முகாமைத்துவம் திறனற்ற தாகவும் உள்ளது.

## உழைப்பு (Labour)

"பொருட்கள், சேவைகளின் உற் பத்திக்காக, பயன்படுத்தப்படும் மனித உடல், உள சக்தி உழைப்பு" எனப்படும். மனித உழைப்புக்காக, வழங்கப்படும் வெகுமதி கூலி/மூலதனம் எனப்படும். எந்தவொரு பொருட்கள், சேவைகளின் உற்பத்திக்கும் உழைப்புசக்தி அவசியம். உழைப்புக் காரணியும் இருவகைப்படும்.

1. மூளை உழைப்பு (Mental Work)
2. உடலுழைப்பு (Physical Work)

ஆகும்.

உழைப்பு சக்தியை, மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்கு சிறந்த கல்வித் திட்டங்களையும் தொழிற் பயிற்சித் திட்டங்களையும் வழங்குவது அரசின் பொறுப்பாகும். அத்துடன் கூட்டு றவு, தனியார் துறைகளையும் அரசு ஊக்குவித்தல் வேண்டும். உழைப்பு வழங்கலைத் தீர்மானிப்பவை வேலை நேரம், வேலை ஆட்களின் (ஊழியம் செய்யக்கூடிய வயதுப் பிரிவினர்) வேலை நிபந்தனை, தொழில் ஆபத்து, அரசாங்க கொள்கைகள். சட்டங்கள், குடிவரவு, அகல்வுச் சட்டங்கள் போர்ச்சூழல், கூலி சம்பள நிர்ணயம், ஆளணி முகாமைத் துவத்திறன், சனத்தொகை என்பனவா கும். உழைப்புக் காரணியின் பண்புக ளாக அமைபவை பின்வருவனவாகும்.

1. உழைப்பு ஆற்றலை மனிதனிலிருந்து பிரிக்க முடியாதிருத்தல்.
2. உழைப்பு ஆற்றல் மனிதனுக்கு மனிதன் வேறுபடுதல்.
3. உழைப்பு காரணி இடநகர்த்தக் கூடியது.
4. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதிக்குட்படுவது.
5. கல்வி, தொழிற்பயிற்சி வழங்கல் மூலம் வினைத்திறனை அதிகரிக்க முடிதல்.
6. தொழில்பகுப்பு முறைமூலம் உழைப்பு விசேட/சிறப்புத் தேர்ச்சி அடையக் கூடியது.

உழைப்பு வளம், நாட்டின் சமூக, பொரு ளாதார, அரசியற் காரணிகளால் இட நகர்த்தக்கூடியதாகவும், சில சந்தர்ப் பங்களில் இடநகர்த்த முடியாததாகவும் அமையும்.

(உ+ம்) 1983 கறுப்பு யூலை கலவரத்தின் பின்பு இலங்கையிலிருந்து மூளை சாலிகள் வெளியேற்றம் அதிகரித்தது. அத்துடன் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத உழைப்பு வளமும், உள்நாட்டிற்குள்ளே யும் வெளிநாடுகளுக்கும் இடம் பெயர்ந் தது. அத்துடன் அண்மைக் காலத்தில், மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ் திரேலியா போன்றன சிறந்த பெறுபேற றைப் பெற்ற மாணவர்களுக்கு, மாணவர் பிரஜாவுரிமையும், பகுதி நேர வேலை வாய்ப்புகளையும் வழங்குவதால் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் உழைப்பு மனிதவள அபிவிருத்தியில் பின்னடைவு காணப்படுகின்றது. சிறந்த மனித வளத்தை, வளர்ச்சியடைந்த நாடுகள் சுரண்டுகின்றன. குறித்த நாட்டின் மாணவர்களும் சுய பொருளாதார நலன் கருதி செல்வதை தடுக்க முடியாதுள்ளது. இருப்பினும் மாற்றுத் தீர்வாக அரசாங்கங் கள், சிறந்த உழைப்பு வளங்களை அந் நாடுகளிலிருந்து மீள வரவழைக்க ஊக்கு விப்பு வழங்குவது அவசியமாகும். அத்துடன் விசேட உயர்திறன் வாய்ந்து தொழில்களுக்கு சங்கம் (Union) அமைத்து அவ்வளங்களை வெளி நாடு களுக்கு நகராது தடுத்தல் வேண்டும். (உ+ம்) இங்கிலாந்து திறன் தொழிலாளர் சங்கங்களை (Vaft Unions) அமைத்து பேணுகின்றது. இவ்வாறு தடுக்காது விடின் குறித்த நாடு அபிவிருத்தியடைய முடி யாது. (உ+ம்) 1980க்களின் பின்பு, ஐக் கிய சோவியத் சமவுடமை குடியரசு தனித் தனி அரசுகளாகப் பிரிந்து பின்பு நிலை மாற்றங்கள் ஏற்பட்டபின்பு அங்கிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்திறன் தொழில் நுட்பவியலாளர், விஞ்ஞானிகள் வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்தனர். இது ருஷியாவிற்கு பின்னடைவாக அமைந்தது.

மேற்குலக நாடுகளில் குறைந்த பிறப்பு வீதம் காரணமாக மனிதவள பற்றாக்குறை காணப்படுகின்றது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கீழைத்தேச நாடுகளிலிருந்து சிறந்த மனதவளத்தைத் தெரிவு செய்து நிரந்தர பிரஜாவுரிமை, அகதி அந்தஸ்து, உயர்கல்விப் புலமைப் பரிசில் வழங்கல் ஆகிய சலுகைகள் மூலம் இறக்குமதி செய்கின்றன. இதனால் உழைப்பு வளம் வளர்முக நாடுகளிலிருந்து வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மலிவாக அசைகின்றது. இதனால் வளர்முக நாடுகளே பாதிக்கப்படுகின்றனர்.

## மூலதனம் (Capital)

மூலதனம் என்பது "வருமானம், உழைக்கும் நோக்கம் கருதி நீண்டகால பயன்பாடு கருதியும் உற்பத்தி வர்த்தக முயற்சிகளில் பேரளவாக பணத்தை ஈடுபடுத்துவது மூலதனம்" எனப்படுகின்றது. இதற்காக வழங்கப்படும் வெகுமதி சன்மானம் வட்டி (Rate & Interest) எனப்படுகின்றது.

மூலதனம் உருவாகுவதற்கு அடிப்படையாக அமைவது சேமிப்பு ஆகும். மக்கள் நிறுவனங்களின் வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடாத பகுதி சேமிப்பு ஆகும். சேமிப்பு உற்பத்தி நோக்கங்களுக்கு வர்த்தக நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் போது "மூலதனம்" ஆக கருதப்படுகின்றது. சேமிப்பு முதலீடு, மூலதனம் (முதல்) ஆகியவற்றுக்கிடையில் தொடர்பு காணப்படுகின்றது.

**"மூலதனம்"** இருப்புக் கருதுகோளுக்குரியது (Stock Concept)

"முதலீடு" பாய்ச்சல் கருதுகோளுக்குரியது. (Flow Concept)

**"மூலதன ஆக்கம் என்பது ஏற்கனவே ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்துடன், மேலும் மூலதன இலாபங்கள் ஒதுக்கங்கள் சேர்க்கப்படுவது" ஆகும்.**

இது **"மூலதன திரட்சிக்கு"** (Capital Accumulation) வழி வகுக்கும். இது வளத்திரட்சியின் ஒரு அங்கமாகும். மூலதனம் மெய் சொத்துக்களில் இடப்படும் போது நிலையான/மாறா மூலதனம் எனப்படுகின்றது.

(உ+ம்) காணி, காணி அபிவிருத்தி, பயிர்ச் செய்கை, மின் பயிர்ச்செய்கை (நீண்டகால பயிர்களுக்குரியவை), போக்குவரத்துச் சாதனங்கள். தொலை தொடர்பு சாதனங்கள், இயந்திரம், பொறித் தொகுதிகள், நீர்த்தேக்கங்கள், தளபாடங்கள், கணனிப் பொறிகள் என்பனவாகும். இவை பௌதீக மூலதனம்" Physical Capital எனப்படுகின்றன.

மூலதனம், ஒரு வருடத்திற்குள்ளே மாற்றமடையக் கூடிய தன்மையுள்ள சொத்துக்களில் ஈடுபடுத்தப்படும்போது அது சுழலும் மூலதனம் (Circulating Capital) எனப்படும். நடப்பு சொத்திலிருந்து நடப்பு பொறுப்பை (CA - CL = Wd) நீக்கவருவது தொழிற்படு மூலதனம் இயக்கு மூலதனம் (Working / Operating Capital) ஆகும். பொதுவாக மூலதனம் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் திரட்டப்படுகின்றது. (உ+ம்) இலங்கை தனது மொத்த முதலீட்டை 19% உள்நாட்டுச் சேமிப்புக்களிலிருந்தும் 7% ஐ வெளிநாட்டு முதலீடுகள், கடன்கள், உதவிகள் மூலமும் பெறுகின்றது. பொது மூலதனம் இடப்படும் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு இருவகைப்படுத்தப்படுகின்றது.

1. பொருளாதார மேந்தலைகள் (உ+ம்) வருமானம் உழைக்கக் கூடிய பொது முதலீடுகள் ஆகும்.
2. சமூகநல உட்கட்டமைப்பு வசதிகள் அல்லது சமூகநல மேந்தலைகள்.

(உ+ம்) சமூகநல அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குரிய வசதிகள் பாடசாலை, வைத்தியசாலை, பொது நூலகம், விளையாட்டு மைதானம், இளைஞர் சேவை மன்றங்கள், தொழிற் பயிற்சி கூடங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் நுட்ப கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் என்பனவாகும். இவை மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்யவும் (Human Capital Development) மனித வள அபிவிருத்திக்கும் (Human Resource Development வழி வகுக்கின்றன.

## 4. தொழில் முயற்சியாண்மை:-

நிலம், உழைப்பு, முதல், முயற்சி ஆகியவற்றை ஒன்றிணைத்து உற்பத்தி செய்து விநியோகிக்கும் முயற்சி யாண்மையாகும். இதனை "தொழில் முயற்சி தொழில் வினைமை" எனவும் அழைப்பர். இக்காரணி இல்லையேல், பண்டங்கள் சேவைகளின் உற்பத்தியும் இல்லை எனலாம். தொழில் முயற்சியாண்மைக்கு வழங்கப்படும் காரணிவருமானம் / கொடுப்பனவு "இலாபம் / நட்டம்" ஆகும். இது தொழில் முயற்சி யாண்மையின் ஆற்றலினால் தீர் மானிக கப்படுகின்றது. உழைப்பும், தொழில் முயற்சியாண்மையும் மனித வளம் ஆகும். ஆயினும் உழைப்புக் காரணி யிலிருந்து தொழில் முயற்சியாண்மை வேறுபடுவதற்குக் காரணம் பின்வரும் விசேட இயல்புகள் இருப்பதேயாகும்.

அவையாவன:

1. சிறப்பு தீர்மானம் எடுத்தல்
2. உயர் தொழிலனுபவம்
3. ஆபத்துக்களை ஏற்கும் துணிவு
4. எதிர்வு கூறல்
5. தலைமைத்துவம்
6. ஏனைய வளங்களை நெறிப்படுத்தும் ஆற்றல்.
7. மதிநுட்பம் உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், பண்டங் கள், சேவைகளை கருமம் தொழில்.
8. புதிய கண்டுபிடிப்பு
9. புத்தாக்கம்

என்பனவாகும். முயற்சியாண்மை, முகாமைத்துவத்திலிருந்து வேறுபட்ட தாகும்.

தொழில் முயற்சியாளன் அத்தொழிலின் உடமையாளனாவான். "தொழில் உடமையாளரின் சார்பில், அவரது இலக்குகளை எய்துவதற்காக, ஒப்பந்த கூலி/சம்பள அடிப்படையில் நியமிக்கப் படுபவரே "முகாமையாளன்" ஆவர். அதாவது உடமையாளரின் வளங்களை, அவரின் சார்பில் சிறப்பாக ஒதுக்கீடு செய்யும் கருமத்தை ஆற்றுபவர் ஆவர். ஆனால் அதனால் வரும் இலாப நட்டங் களுக்குப் பொறுப்பில்லை.

தொழில் முயற்சியாண்மையானது, வேறுபட்ட பொருளாதார முறைமை களில், வேறுபட்ட வடிவங்களில் காணப் படுகின்றது. (உ+ம்) முதலாளித்துவ/ சந்தைப் பொருளாதார முறைமைகளில் உச்சலாப நோக்குடன் தனியார் துறை சுதந்திர விலைப்பொறி முறைமை மூலம் வள ஒதுக்கீட்டு தீர்மானங்கள் எடுக் கின்றது. தனியார் துறையில் தனி வியா பாரம், பங்குடமை, வரையறுக்கப்பட்ட கம்பனி சுய முயற்சிகள் ஆகிய தொழில் முயற்சிகளூடாக மேற்கொள்ளப்படு கின்றது.

மத்திய திட்டமிடல் முறைமையில் அரசு, மத்திய திட்டமிடல் குழு ஊடாக சிறப்பு ஒதுக்கீடு தீர்மானத்தை மேற் கொள்ளுகின்றது. (உ+ம்) பொதுத்துறை, கூட்டுறவுதுறை ஊடாக கூட்டுப் பண்ணை முறை, கூட்டுறவு அரசசார்புடைய கூட்டுத் தாபனங்கள், அரசகம்பனிகள், உள்ளு ராட்சி மன்றங்கள் ஆகிய தொழில் முயற்சிகளுக் கூடாக மேற்கொள்ளப்படு கின்றது. அண்மைக் காலத்தில் (1980ன் பின்பு) இவை சந்தை தோழமைக் கொள்கையைகையாண்டு தனியார் மயப் படுத்தல் முறைக்குள் நிலைமாறி வருகின் றன. இருப்பினும் நடைமுறையில் மத்திய திட்டமிடல் சார் சமூக சேவை / நலன் கருதிய தொழில் முயற்சிகள் தொடர்ந்தும் நிலைத்திருக் கின்றன.

கலப்புப் பொருளாதார முறைமை யில் தனியார்துறை உச்சலாப நோக்கு டன் விலை பொறி முறை ஊடாக தொழில் முயற்சிகளை மேற்கொள்ளும் அதே வேளையில் பொதுத்துறை, கூட்டு றவுத்துறை என்பன சமூகநலன் நோக் குடன் திட்டமிடா அடிப்படையில் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார்துறை உச்சலாப நோக்கம் காரணமாக தொழிற்படுவதால் உற்பத்தித் திறனுடையவையாக இயங்கிய போதிலும் மக்கள் (நுகர்வோர்) சுரண்டப்படுகின்றனர். வருமான ஏற்றத் தாழ்வுக்கு வழி வகுக்கின்றனர்.

பொது/அரசதுறை, கூட்டுறவுத் துறை என்பன சமூகநலன் காரணமாக திறனற்றவையாக குற்றுயிருடன் இயங்குகின்றன. இதனால் இவ்வமைப்புக்கள் நட்டமடைவதுடன், அச்சுமை, பொது மக்கள் மீதே சுமத்தப்படுகின்றது. இதுவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்கின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் அரசதுறையின் ஊழல், காலதாமதமான தீர்மானம், ஊக்கமின்மை, திறனற்ற முகாமை, வன வீண்விரயம் என்பனவேயாகும்.

இவற்றை மறுசீரமைத்து வர்த்தகமயப்பட்ட, போட்டித் தன்மையான சந்தையை (Commercial & Competitive Market) உருவாக்கி புதிய பொருளாதார ஒழுங்கு முறைக்கு வழிவகுத்தல் வேண்டும். அத்துடன் அரசுகளின் கண்காணிப்புடன் இவை ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும்.

இதற்கு (உ+ம்) சக அரசதுறை சேவை உற்பத்தியிலீடுபட்டுள்ள பாடசாலைகள் மீது ஒரு கண்ணோட்டத்தைச் செலுத்துவோமாயின் அருமையான வளங்கள் எவ்வாறு பயன்படுகின்றன என்பதை அவதானிக்கலாம்.

பாடசாலைகள், அறிவு, திறன், மனப்பாங்கை வளர்க்கும் தொழில் முயற்சிகள் ஆகும். இவற்றின் இலக்கு/குறிக்கோள் சமுதாயத்திற்கு நற்பிரஜைகளை உருவாக்குவதாகும். இவ்விலக்கை எய்துவதற்குரிய உள்ளீடுகள் (வளங்களாக) ஆக அமைபவை நிலம், கட்டிடத்தொகுதி, ஆசிரியர்கள், வாகனாதிகள், கணணிப்பொறிகள், தளபாடங்கள், பாடசாலை நிர்வாகம் என்பனவாகும்.

இவ்வருமையான வளங்களை உள்ளீடு செய்து, வெளியீடாகப் பெறப்படுவது நல்ல கல்விப் பெறுபேற்றை உடையமாணவ சமுதாயத்தையேயாகும். அதாவது பாடசாலைகள், கல்விச் சேவையை உற்பத்தி செய்யும் கல்வித் தொழிற்சாலைகள் ஆகும். இங்கு புகை வெளியேறுவதில்லை. பதிலாக இரைச்சல் சப்தம் வெளிவருகின்றது.

பாடசாலைகள், அரசதுறை, கூட்டுறவுத்துறை, தனியார் துறை ஆகிய வற்றாலும், வெளிநாட்டு நிறுவனத்துறைகளாலும் கல்விச் சேவையில் உற்பத்தியில் ஈடுபடுகின்றன..

இவ் வேறுபட்ட துறைகளின் கல்விச் சேவை உற்பத்தி மேற்கொள்ளப்படுவதற்கு கிடைக்கும் வளங்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றனவா? என்பது கேள்விக்குரியதாகும். குறிப்பாக அரசதுறைப் பாடசாலைகளில் வளப்பயன்பாடு சார்பளவில், தனியார்துறையுடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும். (உ+ம்) கட்டிடத்தொகுதிகள் இருந்தும் பயன்படுத்த முடியாத நிலை இருத்தல், அவசியமான கட்டிடத்தொகுதிகள் தேவைப்படுகின்ற போதும் அதற்குரிய நிதி நிர்வாக தடைகளை எதிர்நோக்குகின்றன.

சில பாடசாலைகளில் அடிப்படை வசதிகள் இல்லாததாலும் குடிநீர், கழிப்பறை இல்லாத நிலையில் ஒருசில நகரப் பாடசாலைகளில், பல்வேறு பயன்பாடுடைய நவீன வசதிகள் வழங்கப்படுகின்றன. ஆசிரிய வளத்தைப் பொறுத்தவரையில், அண்மையில் செய்யப்பட்ட ஆய்வின்படி இலங்கையில் சிங்கள மொழி மூலம் பாடசாலைகளில் 9000ற்கும் அதிகமான ஆசிரிய வளம் மிகையாக (ஊழிய மிகைநிரம்பல்) இருப்பதாகவும், தமிழ் மொழி மூலம் பாடசாலைகளில் 9500ற்கும் மேலான ஆசிரிய பற்றாக்குறை (வெற்றிடம்) இருப்பதாகவும் கூறப்படுகின்றது. இது அருமையான வளங்கள், பாரபட்சமான தவறான வள ஒதுக்கீட்டுத் தீர்மானமாக உள்ளது. இதனால் இனங்களுக்கிடையே கல்வி, தரம், வேலை வாய்ப்பு, வருமானம், மற்றும் சமூக ஏற்றத் தாழ்வுகள் நிலைத்திருக்க வழிவகுக்கும். இறுதியில் சமூக பொருளாதார அரசியற் பிணக்குகளுக்கும் இட்டுச் செல்லும்.

அத்துடன் பொதுவாக ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படும் அதே வேளையில் பட்டதாரிகள், தொண்டர் ஆசிரியர்கள் ஆகிய வளங்கள் வேலையற்றிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் நிலை நீடிப்பதையும் அரசதுறை களில் காணலாம். தனியார்துறையில் ஆசிரியர்கள் தொழிலைவிட்டு, நிறுவனத் தைவிட்டு வெளியேறும் வீதம் உயர்வாக காணப்படுகின்றது. இதனாலும் கல்வித் தரம் வீழ்ச்சியடைய வாய்ப்பு ஏற்படுகின் றது.

இத்தகைய முரண்பட்ட வளவிர யங்களுக்கு அடிப்படையாக அமைவது அரச தலையீடுகள், திறனற்ற முகாமை, சிறந்த செயற்திட்டமின்மை, ஊழல் மோச டிகள், நாட்டுப்பற்று இன்மை, போதுமான-தொடர்ச்சியான பயிற்சிகள் இன்மை, கல்வித்திட்டத்திற்கு இடையே பொருத் தப்பாடின்மை, நவீன மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ள தாமதமாகுதல், குறிப்பிட்ட நிதி வளங்கள் கிடைத்த போதிலும், அவற்றின் செயற்திட்டங்கள் குறித்த கால எல்லையுள் நிறைவேற்றப் படாமையால், அந்நிதி வளங்கள், திரும் பிச் செல்லும் நிலைமை, யுத்தநிலை மையைக் காரணம் காட்டி குறிப்பிட்ட பிர தேசங்களில் செயற்திட்டங்கள் பிற் போடல் ஆகிய இன்னோரன்ன காரணங் களைக் கூறலாம்.

பொதுவாகப் பாடசாலை ஒன்றில் அவதானிக்கக்கூடிய வள விரயங்களாகக் கருதக் கூடியவை பின்வருமாறு:

01. குறித்த காலத்திற்குள்ளே பூர்த்தி செய் யப்படாத கட்டிடத் தொகுதிகள்.
02. பயன்படுத்தப்படாத வகுப்பறைகள்.
03. சேதமடைந்த தளபாடக் குவியல்கள்.
04. பயன்படுத்தப்படாத கணனிப் பொறி களும், அதற்கான கட்டிடத் தொகுதி யும்.
05. சரிவரப் பராமரிக்கப்படாத நூலகமும், நூல்களும்.
06. நன்கு பராமரிக்கப்படாத ஆய்வு கூடங் களும், ஆய்வு கூட உபகரணங்களும்.
07. கரும நேரங்கள் தவிர பிற நேரங்களில் நிறுத்தப்படாத மின் விசிறிகள், மின் குமிழ்கள்.
08. பழுதாக்கப்பட்ட நீர் குழாய்களிலிருந்து நீர் வெளியேறல்.
09. நீண்ட நேரம் தொலைபேசி உரை யாடல்கள்.
10. ஆசிரிய வளங்கள், மிகையாக இருப்ப தும்.
11. நேரங்கள் வீண் விரயம் செய்யப் படுதல்.
12. நன்கு பராமரிக்கப்படாத விளையாட்டு மைதானம்
நன்கு பராமரிக்கப்படாத விளையாட்டு உபகரணங்கள்.
13. செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் குறித்த கால எல்லையில் பயன்படுத்தப்படாமையால் திறை சேரிக்கு மீள அனுப்பப்படுதல்.
14. நன்கு பராமரிக்கப்படாத கழிவறைகள் என்பனவாகும்.
15. இதேபோன்று பொதுவாக அரசதுறை யில் அவதானிக்கக்கூடிய வளவிரை யங்களான, கால தாமதங்கள், ஊழல் கள் அரச சொத்துக்களை திருகுதல் மோசடிகள், ஆகியனவும் அடங்கும்.

## முடிவுரை:

வளங்கள் அருமையானவையாகக் காணப்பட்ட போதிலும் அவற்றைப் பயன் படுத்தும் போது வளவிரயம் ஏற்படு வதற்கு அடிப்படைக் காரணம் சிறந்த திட்டமிடலும், செயற்திறன் வாய்ந்த கட்டுப்பாடும்இன்மையேயாகும்.உற்பத்தித் திறன் உயர்ந்த நிலையில், உள்ளீடு களான இயற்கை வளம், மனிதவளம், பொருள்கள், வளங்கள் என்பன பயன் படுத்தப்படல் வேண்டும். இதற்கு பின் வரும் படிமுறைகளை கையாளலாம்.

01. குறிப்பிட்ட இலக்குகளுக்குரிய செயற் திட்டங்களை வகுத்தல். (உ+ம்) வறி யோருக்கான கல்வித்திட்டம்.
02. கால அடிப்படையில் செயற் திட்டங் களை வகுத்தல். (உ+ம்) நீண்டகால, நடுத்தர, குறுங்கால செயற்திட்டங்கள் என வகுத்தல் நேர சூசிகை அமைத் தல் செயற்பாடுகளுக்குரிய கலண்டர் அமைத்தல்.
03. பொருத்தமான செயலணிக் குழுக் களை உருவாக்கி அவற்றிடம் உப செயற் திட்டங்களை கையளித்தல்.
04. செயலணிக் குழுக்களிடையே தொடர்பு களை ஏற்படுத்தி அவற்றின் செயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு நிலைகளை அவ்வப்போது மதிப்பீடு செய்தல்.

05. குறித்த கால ஒழுங்கில் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மூலம் தகவல் பரிமாற்றம் செய்தல் கூட்டங்கள் பயனுடையவைகளாக (இருவழித் தொடர்புடையவையாக) இருத்தல். அறிவுறுத்தல்கள், கட்டளைகள் மேலிருந்தும், முறைப்பாடுகள், ஆலோசனைகள் கீழ் மட்டத்திலுலிருந்தும் பல மட்டங்களில் இருந்தும் செல்லக்கூடியதாக செயற்படல்.

06. குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை குறைப்பதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து செயற்படுத்துதல்.

07. உள்ளீடுகளை, இயன்ற வரை சிக்கனமாக பயன்படுத்தி வெளியீட்டை உயர்த்துதல் (உ+ம்) பாடசாலை ஆயின் கல்வி, ஒழுக்கம், அறிவு திறன் மனப்பாங்கு ஆகியவற்றில் உயர்ந்த பெறுபேற்றை உடைய மாணவர் பரம்பரையை உருவாக்கல்.

08. எதிர் காலச் சந்ததிக்கு இருக்கின்ற வளங்களைப் பேணலும், புதிய வளங்களைக் கண்டு பிடித்தலும் அவைபற்றி அறிவதற்கு ஆவணங்கள் தயாரித்தலும்.

09. வளங்களின் பயன்பாடு தொடர்பாக, ஆரம்ப கல்வி திட்டத்தில் பாடப் புத்தகங்களில் " வளங்களும் பேணலும்" என்ற தலைப்பில் பாடத்திட்டம் அமைக்கப்படல் வேண்டும்.

10. நாட்டுப் பற்றுடன் சிறந்த வளப் பயன்பாட்டிற்கு ஒவ்வொருவரும் தனித்தும் கூட்டமாகவும் செயற்படும் திட்டங்களை மேற்கொள்ளல். நிதி உதவிகளுக்காக அனைத்து துறையினரிடமும் பங்களிப்புப் பெறுதலும், நம்பகமான கணக்கு வைப்பு பதிவுகளை அறிக்கைகளாக நிதியாண்டில் (காலாண்டு, அரையாண்டு) வெளியிடல்.

இவற்றின் மூலம் வளங்களைத் தேடவும், திரட்டவும், பேணவும், எதிர்காலச் சந்ததியினருக்கு வளமான வாழ்வை அமைக்க, முன்னோர்கள் காட்டிய வழிமுறைகளுடன் நாமும் புத்தாக்கமும், புதிய விதிமுறைகளையும் புகுத்தி நல்வாழ்வுக்கு வழி சமைப்போமாக.

நன்றி.

*C. Thamilanpan*

**அண்மையில் இலங்கையில் உள்நாட்டு வங்கிகளால் கையேற்கப்பட்ட இரு வெளி நாட்டு வங்கிகளும் எவை?**
ஹபிப் பாங். ஏ.ஜி. சூரிஸ் வங்கி. ஹற்றன் நஷனல் வங்கி. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி. நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி.

**அண்மையில் நிதிநிலைமை முறிவடைந்தனால் மத்திய வங்கியால் உரிமம் இரத்துச் செய்யப்பட்ட வங்கி எது?**
பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமனிலை தேசிய வருமான நிர்ணயிப்பு வரைபட விளக்கம்

### தேசிய வருமான சமனிலை/சமனிலை தேசிய வருமானம்

### பேரின பொருளாதார சமனிலை
(Equilibrium of the Macro)

"ஒரு பொருளாதாரத்தில் தளம்பலற்ற நிலையில் ஏற்ற இறக்கமின்றி பேணிக் கொள்ளப்படும் வருமானம் சமனிலை தேசிய வருமானம்".

தேசிய வருமான சமனிலையின் இயல்புகளை பின்வருமாறு காட்டலாம்:

* மொத்த வருமானம் = மொத்தச் செலவு
  Yield = Expenditure
  Y = E
* மொத்த கேள்வி = மொத்த நிரம்பல்
  AD = AS
  Aggregate Demand = Aggregate Supply


வெளிப்பாய்ச்சல் = உட்பாய்ச்சல்
W = IJ
Withdrawals = Injections

Note;
தேசிய வருமானம் சமனிலை அடைவதற்கான பிரதான நிபந்தனை வெளிப்பாய்ச்சல்களும் உட்பாய்ச்சல்களும் சமனாக காணப்பட வேண்டும் என்பதாகும். வெளிப்பாய்ச்சல்களானது உட்பாய்ச்சல்களும் சமனாகக் காணப்படாத போது தேசிய வருமான சமனிலை பாதிப்படையும்.


### சமனிலை தேசிய வருமான கோடு

தேசிய வருமான சமனிலையின் போது ஒரு பொருளாதாரத்தின் மொத்த வருமானத்துக்கும் மொத்த செலவுக்கும் இடையிலான தொடர்பினைக் காட்டும் கோடு சமனிலை தேசிய வருமான கோடு எனப்படும். இக்கோட்டில் எல்லாப் புள்ளிகளிலும் மொத்த வருமானமும் மொத்த செலவும் சமனாக காணப்படும்.

Y = E




Y = E என்பது ஒரு கோட்பாட்டு ரீதியாக வரையப்பட்ட கோடு ஆகும். குறித்த ஓர் வருமானத்துக்கான மொத்த தேசிய வருமானமும் மொத்த தேசிய செலவும் சமப்படுவது ஓர் புள்ளியில் தீர்மானிக்கப்படும். மேலும் வருமானம் 0 ஆகும் போது செலவும் பூச்சியம் என கூறமுடியாது. மக்கள் உயிர் வாழ்வ தற்கு தேவையான பூச்சிய வருமான மட்டத்திலும் ஒரு செலவு காணப்படும். எனவே குறித்த வருடம் ஒன்றுக்கான செலவுகோடு பின்வருமாறு அமையும்.




Yக்கு வலது பக்கத்தில் எந்த ஒரு வருமான மட்டத்திலும் Y > E ஆக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தேசிய வருமானம் தேசிய செலவு சமனற்று இருக்கும் நிலையாகும். (Disequilibrium or Macro Economy). Yஇற்கு இடது புறத்தில் உள்ள எந்த ஒரு வருமான மட்டத்திலும் E>Y ஆகும். இதுவும் சமனற்ற நிலையாகும்.

Yஇற்கு வருமான மட்டத்தில் Y=E ஆகும். எனவே தேசிய பொருளாதார சமனிலையாகும். (Macro Economy Economic Equilibrium) இதில் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்படும்.

Y=E

C+S=C+I

S=I

AS=AD

Note: இம்முடிவுகள் அனைத்தும் வீட்டுத்துறை, நிறுவனத்துறை மட்டுமே உடைய மூடப்பட்ட ஒரு சிக்கனமுள்ள பொருளாதாரத்துக்கு மட்டுமே பொருந்தும்.


## வரைபட முறையில் எளிய பொருளாதாரத்தில் சமனிலை தேசிய வருமான நிர்ணயிப்பு

எளிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் வருமாறு:

C= 500+0.8y
I=300m

Note: மேற்படி தரவினை அடிப்படையாகக் கொண்டு வரைபடம் வரைவதற்கு விரும்பிய ஏதாவது இரு வருமான மட்டங்களை எடுத்து நுகர்வின் அளவைக் கணிப்பிட வேண்டும்.

| Y | C | C+I |
|---|---|---|
| 1000 | 1300 | 1600 |
| 5000 | 4500 | 4800 |




C = 500+0.8 x 1000    C = 500+0.8 x 5000
C = 500+800    C = 500+4000
C = 1300    C = 4500

Note: Y=E என்ற 45° கோடும் C+Y என்ற கோடும் சந்திக்கும் இடங்களில் அதாவது Y=E என்ற கோட்டை C=I கோடு வெட்டும் இடங்களில் சமனிலை தேசிய வருமானம் நிர்ணயிக்கப்படும். இதன்படி சமனிலை தேசிய வருமானம் 4000 ஆகம்.


## மூடிய பொருளாதாரத்தின் தேசிய வருமான நிர்ணயிப்பு

மூடிய பொருளாதாரம் தொடர்பான தரவுகள் வருமாறு:

C = 500 + 0.8y
C = 300m
G = 200m

மேற்படி தரவை அட்டவணையில் காட்டவும்.

| Y | C | C+I | C+I+G |
|---|---|---|---|
| 1000 | 1300 | 1600 | 1800 |
| 6000 | 5300 | 5600 | 5800 |




Note: மேற்போன்ற வரைபின் அடிப்படையின் சமனிலை தேசிய வருமானம் 5000 ஆகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறந்த பொருளாதாரத்தின் சமனிலை தேசிய வருமான நிர்ணயிப்பு

திறந்த பொருளாதாரம் தொடர்பான தரவுகள் வருமாறு:

$C = 500 + 0.8y$
$I = 300\,m$
$G = 200m$
$X = 200$
$M = 100$


| Y | C | C+I | C+I+G | C+I+G+(x-m) |
|---|---|---|---|---|
| 1000 | 1300 | 1600 | 1800 | 1900 |
| 6000 | 5300 | 5600 | 5800 | 5900 |




Note: மேற்போன்ற வரைபின் அடிப் படையின் சமனிலை தேசிய வருமானம் 12000 ஆகும்.

Omit:-

மேற்படி எளிய பொருளாதாரம் மூடிய பொருளாதாரம், திறந்த பொருளாதாரம் ஆகியவற்றின் சமனிலையான மட்டங் களை ஒரு படத்தில் விளக்கமாகக் காட்ட முடியும்.




Note:-

$y_0$- சேமிப்பு முதலீடு அற்ற எளிய பொரு ளாதார சமனிலை வருமான மட்டம். [இங்கு y=c]

$y_1$ சேமிப்பு முதலீடு என்பன காணப்படும் எளிய பொருளாதாரத்தின் சமனிலை வரு மான மட்டம் $Y = C+I$

$Y_2$ மூடிய பொருளாதார சமனிலை வரு மானமட்டம் $[Y = C + I + G]$

$Y_3$ திறந்த பொருளாதார மட்டம். $[Y=C+I+G+(x-m)]$


***Reference:***

1. Modern Economics, *J. Harvey*
2. Macro Economics, *Sandrasekaram*
3. Macro Economics, *V. Parameswaran*
4. A - Level Economics, *Ray Powell*


N. Krisnaraja
2003 A/L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம் எங்கும் வணிக மணம் பரப்பிட மலரும் 'வரவே' வருக!

# ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்

உங்கள் பண்டிகைகள் சிறப்புற .....
......விருந்தினர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடிக்க



- ✱ சகல விதமான கேக், ஐஸ்கிறீம், குளிர்பானங்கள் தயாரிப்பதற்கான பொருள்கள்
- ✱ கைத்தொழில் விருத்திக்கான மூலப்பொருட்கள்
- ✱ சகல வகைகளிலுமான வாசனைத் திரவியங்கள்
- ✱ ஆயுள்வேத மருந்துச் சரக்குகள் அனைத்தையும்

மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றிட.



யாழ். நகரில்

## ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்

161 A, K.K.S வீதி (சத்திரத்துச் சந்தி)
யாழ்ப்பாணம்
T.P: 2219


---

கஜமுகன் அருளால் வரவு நீ நீடூழி வாழ்க!

# Kajamugan Hardware

கஜமுகன் ஹாட்வெயார்

Hardware Merchants, Importers of Building materials, Cement, Paints, Electrical goods, Cycles, Cycle parts and Accessories



போன்றவற்றை

நியாய விலையில் பெற்றுக்கொள்ள



147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து நெஞ்சங்களும் அகமகிழ! அவனி எங்கும் வணிக மணம்
பரவ இன்று அரங்கேறும் "வரவே" உன்னை வரவேற்று வாழ்த்துகின்றோம்.



நவீன டிசைன்களிலான பல வகை சாறி வகைகள், சல்வார்கமிஸ் வகைகள்
கவுண் வகைகள், ரவுசர் வகைகள், ஜம்பர் வகைகள்,
சேட், ரிசேட், கோட், சூட், பட்டுச் சேலைகள்.



அனைத்தும் நிறைந்த அழகு லாவண்யச் சோலை



## மில்லேனியம் பெஷன் & பொம்பே பஸார்

இல. 10, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
(மலாயன் கபே முன்பாக)

---

இந்துவின் நாயகனே! ஆண்டு தோறும் வந்து அறிவு தாரீர்!!



**அவனிதனில் நன்மதிப்புடன் திகழ்ந்து உங்களை
காலங்காலமாக குளிர்ச்சிக் கடலில் மூழ்கடிக்க
உங்கள் அருகில்!**



## ராஜா கிறீம் ஹவுஸ்



நாவினிக்கும் ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள்,
சிற்றுண்டி வகைகள், தரம், சுவை, தூய்மை குன்றாது
அத்தனையையும் பெற தனித்துவம் மிக்கது.

38, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பெறுமதி கூட்டிய வரியின் பயன்பாடு

### அறிமுகம் (Introduction)

பொருட்கள், சேவைகளுக்கு தயாரிப்பு மற்றும் பகிர்ந்தளிப்பு ஆகிய ஒவ்வொரு கட்டத்தின் மீதும் பெறுமதி கூட்டிய வரியானது விதிக்கப்படுகின்றது. பொருட்கள் பணிகள் வரிகள் எனவும் குறிப்பிடப்படும். பெறுமதி கூட்டிய வரி யானது பொருட்கள், சேவைகளின் நுகர் வின் மீது விதிக்கப்படும் ஒரு மறைமுக வரியாகும். பெறுமதி கூட்டிய வரியானது நுகர்வின் மீது விதிக்கப்படும் வரியாகை யால் வரியின் பொருளாதார நிகழ்வானது அதாவது வரிப்பொறுப்பின் உண்மை யான கொடுப்பனவு நுகர்வோரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய வேளையில் தயாரிப்பு மற்றும் பகிர்ந்தளிப்பு ஆகிய வேளையில் ஒவ்வொரு கட்டத்திலும் வரி சேகரிக்கப்படும்போது சட்ட நிகழ்வானது வரியினைச் செலுத்தும் பொறுப்பினை வழங்குனர் மீது சுமத்துகின்றது.

### VAT இன் அனுகூலங்கள்

01. ஏனைய வரிகளை விட VAT ஆனது திரிபுகள் அற்றதாக காணப்படுகின்றது.

ஏனெனில் இது இறுதியான நுகர் வின் மீது மட்டுமே வரியை விதிப்பதோடு இடைநிலை கொடுக்கல் வாங்கல் மீது வரியினை விதிப்பதில்லை. இதனால் வரித்தாக்கம் குறைவாக காணப்படுகிறது.

02. VAT வரியானது இடையிணைப்பு அல்லது வரித்தாக்கத்தின் மீதான வரிவிதிப்பு பிரச்சினையை நிவர்த்தி செய் கிறது.

03. புரள்வு வரி ஒன்றில் பண்டமொன்றுக் கான உள்ளீடு மற்றும் வெளியீடு ஆகிய இரண்டின் மீதும் வரி விதிக்கப்பட்டு வரி யின் மீதான வரியை விளைவிக்கின்றது. ஆனால் VAT வரியின் கீழ் வெளியீட்டின் மீதான வரியை கணிக்கும் போது உள்ளீ டுகள் மீதான வரிச்சலுகை விதிக்கப்ப டுகிறது. இதனால் வரியின் மீதான வரி தவிர்க்கப்படுகின்றது.

### இலங்கையில் VAT இன் பண்புகள்

**01. வரிதளம்:** பெறுமதி கூட்டிய வரியா னது இலக்கு கோட்பாட்டின் அடிப்படையிலான நுகர்வு வரியாகும். எனவே அனைத்து இறக்குமதிகளுக் கும் வரி விதிக்கப்படுகின்ற அதே வேளையில் ஏற்றுமதி கள் வரியிலிருந்து நீக்கப் பட்டுள்ளன.

* சில்லறை வர்த்தகத்தின் பெறுமதி நீங்கலாக காலாண்டு ஒன்றுக்கு 500,000/= அல்லது ஆண் டொன்றுக்கு 1.8m/= பெறு மதியான பொருட்களும் சேவைகளையும் வழங்கிய எந்த ஒரு நபரும் கூட்டிய பெறுமதி வரியை செலுத்த பொறுப்புடையவராவர்.

Note: மொத்த அல்லது சில்லறை வர்த்தகர் தயாரிப்பாளராக அல்லது இறக்குமதியாள ராக இருப்பது தவிர்ந்த மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் தற்பொழுது பெறுமதி கூட்டிய வரியி லிருந்து நீக்கப்பட்டுள்ளன.

**02. வரி வீதங்கள் [Tax Percentage]**

VAT வரி தொடர்பாக இரண்டு வரி வீதங்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாவசிய பொருட்கள், சேவைகள் மீது 10% தாழ்ந்த வரிவீதமும் ஏனைய பொருட்கள், சேவைகள் மீது 20% விதிக் கப்படுகின்றது. ஏற்றுமதிகளுக்கும் வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். குறித்துரைக்கப்பட்ட பணிகளுக்கும் தொடர்ந்தும் பூச்சிய வீதமொன்று பிரயோகிக்கப்படுகின்றது.

## இலங்கையில் பெறுமதி கூட்டிய வரியை நடைமுறைப்படுத்தலில் காணப்படக்கூடிய சிக்கல்கள்

**விலை தாக்கம்:** நுகர்வோர் விலை சுட்டெண் ஒன்றினைப் பயன்படுத்தி விலை மட்டத்தின் மீது VAT இன் தாக்கத்தினை பகுப்பாய்வு செய்யும் போது சில பொருட்களின் சார்பு ரீதியான விலையில் மாற்றங்கள் காணப்பட்ட போதிலும் VAT இன் அறிமுகப்படுத்தலானது பொதுவாக விலை மட்டத்தின் சாதகமான தாக்கங்களைக் கொண்டிருப்பது குறித்து காட்டப்படும். இதற்கான முக்கிய காரணிகளில் ஒன்று யாதெனில் நுகர்வு கடையில் முக்கியமாக மொன்றான அரிசி, கோதுமை மா, மருந்துப் பொருட்கள் போன்ற அத்தியாவசிய பண்டங்கள் பொருட்கள், சேவைகள் வரி அல்லது VAT இலிருந்து விலக்களிக்கப்பட்டமையாகும். சாதகமான தாக்கத்துக்கு இன்னுமொரு காரணம் என்னவெனில் இறக்குமதியின் போது தேறிய பாதுகாப்பு தீர்வையின் அறவீட்டுக்காக உள்ளடக்கப்பட்ட 25% குறிப்பீடு இல்லா தொழிக்கப்பட்டன.

## மொத்த சில்லறை வர்த்தகத் துறைகளுக்கு VATஇன் விரிவாக்கம்

2002ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் 2003ம் ஆண்டு July இலிருந்து மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத் துறைகளுக்கு VAT வரியை விரிவாக்கும் எண்ணத்தை அறிவித்தது. வாழ்க்கைச் செலவை கருத்திற்கொண்டு இது பிற்போடப்பட்டுள்ளது. மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் மீதான VAT வரியானது தற்போது மாகாண சபைகளினால் சேகரிக்கப்பட்ட புரள்வு வரிக்கு மேலதிகமானதாகும். ஆகவே மேலதிக வரியொன்று அறிமுகப்படுத்தலானது விலைகளின் மீது பாதகமான தாக்கமொன்றினைக் கொண்டிருக்கும் என கருதிக் கொள்ள வேண்டிய தேவை காணப்படும். மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத் துறைகளுக்கு பெறுமதி கூட்டிய வரியை விரிவாக்கும் போது புதிதாக 30,000 வரிக்கோவைகள் ஆரம்பிக்கப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## முடிவுரை

கோட்பாடுகளின் படி அனைத்து நுகர்வு விடயங்களும் வரி அறவிடப்பட வேண்டிய விடயங்களாக இருந்த போதிலும் பலதரப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார நிகழ்வினால் பெறுமதி கூட்டிய வரியின் நடைமுறைப்படுத்தலானது வரி தளத்தில் இருந்து ஒரு சில பொருட்களினதும், சேவைகளினதும் விலக்களிப்புக்கு அல்லது வெளியீட்டுக்கு இட்டுச் சென்றதை மறுக்கமுடியாது. எனவே 2002 ஆவணியில் அறிமுகப்படுத்தப்பட்ட VAT வரியானது நியாயத்தினையும் அத்தியாவசியப் பொருட்கள் மீது தாழ்ந்த வீதம் ஒன்றுக்கான தேவையினையும் கருத்தில் கொண்டபடியால் அது சிறந்த வரிமுறையாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

***A. Ramanan***
2003 A/L 13 "F" com.

---

### பற்று வரி (Debit Tax)

**2002ம் ஆண்டு 16ம் இலக்க** பற்று வரிச்சட்டத்தின் 13ம் பிரிவின் பிரகாரம் வர்த்தக வங்கி ஒன்றில் பேணப்படும் கணக்கு நடைமுறைக் கணக்கு ஒவ்வொன்றுக்கும் அரிதாக ஒவ்வொரு பஞ்சாங்க மாதத்திற் செய்யப்பட்ட பற்றுக்களின் மொத்த தொகை மீதும் வைப்புச் சான்றிதழொன்றை or பிரயாணிகள் காசாக மாற்றுவதன் மூலம் தேறும் தொகைக்கு அல்லது பணமாக மாற்றப்பட்ட தொகையின் ஒரு நூற்று வீதத்தின் பத்தில் ஒன்று என்ற வீதப்படி பற்றுகள் வரி என அழைக்கப்பட வேண்டிய வரி ஒன்று விதிக்கப்படுதலும் அறிவிடப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமைக் குறைப்புக்கான கொள்கைகளும் உபாய அறிக்கைகளும்

## அறிமுகம் (Introduction)

"அடிப்படைத் தேவைகளைப் யேனும் மனிதன் பூர்த்தி செய்யமுடியாத நிலையே" வறுமை எனப்படும். அண்மைய தசாப்தங்களில் உலக பொருளாதாரத்தில் ஒரு பகுதி மக்கள் இன்னமும் நாளாந்தம் ஒரு டொலருக்கும் குறைவான வருமானத்துடனேயே வாழ்க்கை நடாத்துகின்றார்கள். இந்தப் பிரச்சினையை மேலும் அதிகரிக்கும் வகையில் அடுத்த 25 ஆண்டுகளில் உலக சனத்தொகை 2 பில்லியன் மக்களாக வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப் படுவதோடு அவர்களின் பெரும்பாலானோர் வளர்முக மற்றும் புதிதாகத் தோன்றும் பொருளாதார நாடுகளிடையே பிறக்கவுள்ளனர். வறுமை சம்பந்தப்பட்ட விடயங்கள் பயன்தரு வகையிற் கருத்திற் கொள்ளப்படா விட்டால் இவர்களில் பெரும்பாலானோர் வறுமையில் வாடுவர்.

பரவலான வறுமையின் கடுமையான நிலையை நீக்க சர்வதேச நாணய நிதியம் 1999இல் வறுமைக் குறைப்புக்கு புதிய அணுகுமுறை ஒன்றை அறிமுகப் படுத்தி உள்ளனர். நாட்டின் சுய முயற்சி மற்றும் பன்னாட்டு சமூகத்தின் ஆதரவு ஆகிய இரு முறைகள் மூலம் இது மேற் கொள்ளப்படும். நாடுகள் மிகச் சிறந்த வறுமை ஒழிப்புக் கொள்கைகளையும் உபாயங்களையும் மேற்கொள்வதற்கு தாமாகவே உறுதியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சுருக்கமாகக் குறிப்பிடப்படின் வறுமை சம்பந்தமான விடயங்களை கருத்திற் கொள்ளும் போது உள்நாட்டுக் கொள்கைகளையும் நிறுவனங்களையும் குறிப்பிடப்பட்டுள் ளது. மற்றும் வெளிநாட்டு உதவியை அதிகரித்தல் என்பன உறுதியாக வலியுறுத்தபடுகின்றது.

## வறுமைக் குறைப்பு உபாய அறிக்கை

வறுமை ஒழிப்பிற்கான வெளிநாட்டு உதவியின் உச்சப் பயன்பாட்டை உறுதிசெய்து கொள்வதற்கு உதவி பெறுநர்களை உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் வறுமைக் குறைப்பு உபாய அறிக்கைகளைத் தயாரிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளன. இதன்படி அவர்களது அனைத்து சலுகை கடன்களுக்குமான அடிப்படையாக வறுமைக் குறைப்பு உபாய அறிக்கைகள் அமையும். விரிவாகக் குறிப்பிடப்படும் போது நாட்டின் திட்டமிடப்பட்ட பேரண்ட பொருளாதாரம் அமைப்புமுறை மற்றும் சமூக கொள்கைகள் விரிவான அடிப்படை வளர்ச்சி மற்றும் வறுமையைக் குறைப்பதற்கான மூன்று அல்லது நீண்ட காலப்பகுதிக்கான பொது நடவடிக்கை நிகழ்ச்சி, வறுமைக் குறைப்பு உபாய நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவற்றை வறுமைக் குறைப்பு அறிக்கைகள் கொண்டிருக்க வேண்டும்.

## வறுமைக் குறைப்பு உபாய அறிக்கையின் முக்கிய மூலங்கள்

வறுமைக் குறைப்பு உபாய அறிக்கையின் தயாரிப்பானது நாட்டின் தனிப்பட்ட நிலமைகளையும் பண்புகளையும் பிரதிபலித்தல் வேண்டும். இதிற் பின்வரும் முழுமையான முக்கிய மூலங்கள் அடங்கும்.

### பங்கேற்பு செயன்முறை:-

நாட்டின் பங்கேற்பு செயன்முறையின் விளக்கம் ஒன்று அதாவது உபாயத்தின் உடமையை அரசாங்கம் நடாத்திச் சென்று வடிவமைத்து கட்டி எழுப்புதல். இதில் பின்வரும் நடவடிக்கைகள் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. அரசாங்கத்தின் பங்கேற்பு செயன் முறையின் ஏனைய ஈடுபாடு.

02. இருபடை மற்றும் பல்படை வெளி நாட்டு அபிவிருத்தி பங்காளர்களின் ஈடுபாடு.

03. வறியவர்களையும் அவர்களது பிரதி நிதிகளையும் கலந்துரையாடுவதற்குப் பயன்படுத்தும் பொறிமுறை

**வறுமை நிர்ணயம்:-**

வறுமை வெளிநாடுகளின் தன்மையும் தீர்மானிப்பவையும் வறுமையின் பல்வேறு பரிமாணங்கள். வறுமைக் குறைப்பிற்கான பொருளாதார சமூக மற்றும் நிறுவன ரீதியான கட்டுப்பாடுகளை இனம் காணல், கடந்தகால கொள்கைகளின் வளர்ச்சி என்பன கருப்பொருட்களாக அமைய வேண்டும்.

## இலக்குகள், குறிகாட்டிகள் மற்றும் கண்காணிப்பு:

வறுமைக் குறைப்பு வெளிநாடுகளின் குறுங்கால மற்றும் நீண்டகால குறிக்கோள்களை வறுமைக் குறைப்பு உபாய அறிக்கை வரைவிலக்கணம் செய்ய வேண்டும்.

## முன்னுரிமை வழங்கப்பட்ட பொது நடவடிக்கைத் திட்டம்

கால இலக்குகளுடன் நிகழ்ச்சித் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு என்பவற்றுடன் தெளிவான முன்னுரிமை அளிக்கப்பட்ட அரசாங்க கொள்கை நடவடிக்கை திட்டமொன்றால் வறுமைக் குறைப்பு உபாய அறிக்கைக்கு ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

## பேரண்ட பொருளாதாரக் கட்டமைப்பு

தாழ்ந்த பணவீக்கம், நடுத்தர காலத்தில் இருந்து நீண்ட நடுத்தர காலாத்தில் நிலைத்திருக்கக் கூடிய வெளிநாட்டு நிலைமை ஒன்று வறுமைக் குறைப்பு உபாய அறிக்கையிற் குறிப்பிடப்பட்ட வறுமைக் குறைப்பு குறிக்கோளுடன் இணைத்து செல்லும் வளர்ச்சி, வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சிக் குறிக்கோள்கள் என்பனவற்றுக்கு பொதுவான அரசியல் நிலைமை என்பவற்றை செய்வதற்கு உகந்த பேரண்ட பொருளாதார சட்டமொன்றினை வறுமைக் குறைப்பு உபாய அறிக்கை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

வறுமைக் குறைப்பு உபாய அறிக்கை அணுகு முறைக்கு எந்தளவிலான ஏற்றுக்கொள்ளல் காணப்படுவதோடு தாழ்ந்த வருமானம் கொண்ட வளர்முக நாடுகள் சிலவற்றில் இந்த செயல்முறைகள் இடம்பெறுகின்றன. இது நாட்டின் சுய ஆதரவு மற்றும் சர்வதேச சமூகத்திலான ஆதரவு ஆகிய இரு முறைகளின் அடிப்படையிற் காணப்படுவதால் உதவி வழங்குனர்களும் உதவி பெறும் நாடுகளும் அதனை பெருமளவில் ஏற்றுக் கொண்டுள்ளன.

## வறுமைக் குறைப்பு உபாய அறிக்கை தயாரிப்பின் அனுகூலங்கள்

வறுமைக் குறைப்பு உபாயங்கள் தொடர்பாக பெரும்பாலான அரசாங்கங்களிடையே குறைந்த பட்சம் உடமை சம்பந்தமான உணர்வும் அரசாங்கங்களுக்கிடையேயும் சிவில் சமூகத்தின் பிரிவுகளுக்கிடையேயும் பெருமளவில் திறந்த கலந்துரையாடல்களுடன் கொள்கை விவாதங்களிலும் ஈடுபட்டு வறுமைக் குறைப்புக்கு முக்கிய இடமொன்று வழங்கப்படுகின்றது.

## இலங்கையின் வறுமை ஒழிப்பு உபாய அறிக்கை

இலங்கை தனது வறுமை ஒழிப்பு உபாய அறிக்கையின் தொடக்க வரைபை 2002 May இற் பூர்த்தி செய்தல். உதவி வழங்குனர்களின் குறிப்பையும் உள்ளடக்க "எதிர்கால மீண்டெழும் இலங்கை" என்ற அரசாங்கத்தின் கொள்கை வரைபு சட்டத்தினையும் ஒருங் கிணைத்து 2002ம் ஆண்டு December இல் இந்த ஆவணம் திருத்தப்பட்டது.

இலங்கையில் வறுமைக் குறைப்பு உபாய அறிக்கையின்படி குடித்தொகையிற் கிட்டத்தட்ட 25-39 சதவீதமான மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறியவர்கள் என வகைப்படுத்தப்பட்டு உள்ளனர். இதனை குறைவடையச் செய்வதற்காக நடுத்தரகால பேரண்ட் பொருளாதாரவகைச் சட்டமானது பொருளாதாரம் பரிணாம வளர்ச்சியை (6-7) சதவீதம் எய்த வேண்டும் என குறிப்பிடப் பட்ட தோடு இது 2010ம் ஆண்டளவில் 2000$ தலைக்குரிய வருமான உயர்வுடன் 5-10% பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்லு மெனவும் எதிர்பார்க்கப்படும்.

**முடிவுரை:**


புத்தாயிரமாம் ஆண்டுக்கான அபி விருத்தி இழக்குகளின் மூலம் இலங்கை ஏற்கனவே கணிசமான முன்னேற்றங்களைக் காட்டியுள்ளது. (ஆரம்ப பாடசாலைகளில் சேர்ந்து கொள்ளும் அளவை அதிகரித்தல், சிசு மற்றும் குழந்தை மரண வீதத்தைக் குறைத்தல், மீன் உற்பத்தி, மகப்பேற்று மரணவீதத்தைக் குறைத்தல்). அத்துடன் நுகர்வு வறுமையை மேம்படுத்துவதற்கு பெருமளவு கவனம் செலுத்தப்படுகின்றது. வறுமைக் குறைப்பு உபாய அறிக்கையில் இனம் காணப்பட்டுள்ள வழிமுறைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியை விரைவு படுத்துவதற்கும் அதே நேரத்தில் வறிய மக்களை பொருளாதார அபிவிருத்தியின் முதன்மை சட்டத்துக் குள்ளும் எதிர்காலத்தில் இட்டுச்செல்லும் என்பதில் ஐயமில்லை.

***Reference***


1. Study Guide - II by *Shan*
2. Central Bank Report - 2002
3. Daily News


***C. Thamilanpan***

**சிலருரிமை நிறுவனத்தின் கேள்விகோடு முறிந்த கேள்விகோடாக அமைவது ஏன்? காரணம்** (Kinked - Demand curve)




இங்கு காட்டப்பட்ட சிலர் உரிமை சந்தையில் கேள்விகோடு முறிகோடாகக் காணப்படுகின்றது. அதாவது ABC என்ற முறிகோட்டில் இங்கு AB என்ற மேல் பகுதி நெகிழ்ச்சியுள்ள கேள்விகோட்டையும் BD என்ற கீழ் பகுதி நெகிழ்ச்சி அற்ற கேள்வி கோட்டையும் குறித்து நிற்கின்றது. இங்கு மேல்பகுதி நெகிழ்ச்சி உள்ளாக இருப்பதற்குக் காரணம் ஒரு நிறுவனம் விலையை அதிகரித்தால் மற்றைய நிறுவனம் விலையை அதிகரிக்காது. இதனால் விலையை அதிகரிக்கும் நிறுவனத்துக்கான கேள்விதொகை பெருமளவில் குறையும். இதனால் கேள்வி கோடு நெகிழ்ச்சி வாய்ந்ததாக காணப்படும்.

☆ எனவே சிலருரிமை நிறுவனத்தின் மேல்பகுதி நெகிழ்ச்சி உள்ளாகவும் கீழ்ப் பகுதி நெகிழ்ச்சி அற்றதாகவும் காணப்படுவதாலேயே கேள்வி கோடு முறிந்த கோடாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள்

# Consumer protection activities in Sri Lanka

## 1.0 அறிமுகம்

தற்கால வர்த்தக உலகில் "நுகர்வோரே அரசர்" என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவரும் கூற்றாகும். உலக மயமாக்கலைத் தொடர்ந்து சர்வதேச ரீதியில் போட்டி நிறுவனங்கள் உருவாகியிருப்பதுடன் நுகர்வோரது விருப்பத்தை நிறைவுசெய்து போட்டியில் வெற்றிபெற எல்லா நிறுவனங்களும் முயன்று வருகின்றன. இதனால் வர்த்தகத்தின் பிரதான கருமமான சந்தைப் படுத்தலானது நுகர்வோருடன் தொடங்கி நுகர்வோருடன் முடிவடைகின்ற கருமம் என வரையறுக்கப்படுகின்றது. அதாவது நுகர்வோர் தேவைகள் எவை என்பதை முன்னுணருகின்ற சந்தை ஆராய்ச்சிக் கருமத்துடன் முடிவடைய வேண்டியுள்ளது. இதன் அடிப்படையிலேயே நுகர்வு நோக்கிய சந்தைப்படுத்தல் என்கின்ற எண்ணக்கரு பிரபல்யமடைந்து வருகின்றது.

முன்னர் சந்தைப்படுத்தலிலே உற்பத்தி நோக்கிய சந்தைப்படுத்தல் என்கின்ற எண்ணக்கருவே பிரபலம் பெற்றிருந்தது. புகழ்பெற்ற பொருளியலாளரான ஜோண் கல்பிறைற் என்பவர் "நுகர்வோர் அரசர்" என்பது பேச்சளவில் மட்டுமே என்றும் பாரிய நிறுவனங்களே ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ளன என்பதுமான கருத்தை வெளியிட்டுள்ளார். இதன்படி எதை உற்பத்தி செய்ய வேண்டுமென பாரிய நிறுவனங்கள் விரும்புகின்றனவோ அவ்வாறே நுகர்வோரையும் நடாத்த விரும்புகின்றன எனலாம். இதன் காரணமாகவே நுகர்வோர் பாதுகாப்பு என்பது உலகளாவிய ரீதியில் பிரபலம் பெற வேண்டி ஏற்பட்டது. 1985ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பு நுகர்வோர் பாதுகாப்புக்கென வழிகாட்டல் தொகுப்பொன்றை வெளியிட்டதுடன் 1999 இல் உலகின் எல்லா நாடுகளும் நுகர்வோர் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையினையும் வலியுறுத்தியது. இருப்பினும் இலங்கை இதற்கு முன்னரே நுகர்வோர் பாதுகாப்புக்கென நடவடிக்கை எடுத்துவிட்டது. 1979ல் அரசாங்கம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் என்ற ஒன்றை இயற்றி நுகர்வோர் பாதுகாப்புக்கு சட்ட அங்கீகாரம் கொடுத்ததுடன் அதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பையும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு ஏற்றுக்கொண்டது.

## 2.0 நுகர்வோர் பாதுகாப்பின் அவசியம்

ஐக்கிய நாடுகள் அமைப்பு விதிகளின் பிரகாரம் 8 விடயங்களில் நுகர்வோர் பாதுகாப்பு வலியுறுத்தப்பட வேண்டியுள்ளது. அதாவது,

- நுகர்வோரின் அடிப்படைத் தேவைகள்
- நுகர்வோர் பாதுகாப்பு
- நுகர்வோரின் தெரிவு
- நுகர்வோர் அறிமுகம்
- நுகர்வோர் கல்வி
- நுகர்வோருக்கான பரிகாரம்
- நுகர்வோர் பிரதிநிதித்துவம்
- நுகர்வோருக்கான சூழல்

என்பன நுகர்வோர் பாதுகாப்பில் வரையறுக்கப்பட வேண்டியுள்ளன. இவை நுகர்வோரின் உரிமைகளைப் பேணுவதில் பிரதானமாக இடம்பெறும் விடயங்களாகும்.

இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான நாடுகளில் உலகமயமாக்கல் தொடர்பான போக்குகள் அதிகரித்த அளவில் காணப்படுவதுடன், அவை வளர்முக நாடுகளின் வர்த்தக முறைகளில் மிகக் கடுமையான தாக்கங்களை எடுத்து வருகின்றன. இந்த மாற்றங்கள் தலையிடாக் கொள்கைக்கு இடையூறாக இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த கட்டுப்பாட்டு நடைமுறைகள், வரிகள், தீர்வைகள் மற்றும் தீர்வை யல்லாத தடங்கல்கள் என்பன முற்றாக ஒழிக்கப்பட்டிருக்கும் ஒரு நிலைமையை எடுத்துக்காட்டுகின்றன. தங்குதடையற்ற தாராளமயமாக்கலின் விளைவாக எல்லாமே சுதந்திரமாக இடம்பெறக்கூடிய ஒரு நிலைமை தோன்ற முடியும். பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் உற்பத்தி விற்பனை மற்றும் விநியோகம் என்பன தங்குதடையற்ற விதத்தில் கேள்விக்குட்படுத்தாது இடம் பெற்று வருவதற்கு இட மளிக்கப்பட்டால் அபிவிருத்தியில் மிகவும் தாழ்ந்த மட்டத்திலிருந்து வரும் நாடுகள் பின்தங்கிவிட நேரிடும்.

நடைமுறையில் ஓரளவுக்கேனும் பாதுகாப்பு வழங்கப்படுவதனை உத்தர வாதமளிக்கக்கூடிய ஏதேனும் ஒழுங்கு விதிகள் தொடர்பான வழிமுறைகள் அவசியமாக இருந்து வருகின்றன என்பது தெளிவாகும். எந்த ஒரு வளர்முக நாடும் பொருளாதாரத்தை முற்றுமுழுவதும் தடைகளற்ற ஒரு பொருளாதாரமாக முன்னெடுத்துச் செல்ல முடியாது. சட்டத்திலும் ஒழுங்கு விதிகளிலும் நுகர்வோருக்கு பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அதேபோல உற்பத்தியாளருக்கும் வற்பனையாளருக்கும் வரையறையற்ற சுதந்திரத்தையும் வழங்க முடியாது. இலங்கையில் பண்டங்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி சாதாரணமாக நன்கு ஒழுங்கமைந்த விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்ற விடயம் யாவரும் அறிந்ததொன்றாகும். எனினும் உள்ஞூர் நுகர்வோர், சந்தை விவகாரங்கள் தொடர்பாக பொதுவான பயிற்சியைப் பெற்றிருக்கவில்லை. இந்தப் பின்னணியில் வணிகர்கள் தமக்குச் சாதகமான நியதிகளில் பண்டங்களை அல்லது சேவைகளை வாங்குவதற்கு நுகர்வோரைத் தூண்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் காரணத்தினாலேயே நுகர்வோருக்கு சட்டத்தின் பாதுகாப்பு தேவைப்படுகிறது.

உள்நாட்டு வர்த்தகத்தில் பொருட்கள், சேவைகள் என்பவற்றை ஒழுங்கு முறைப்படுத்துவதன் மூலம் நுகர்வோருக்கு சிறந்த பாதுகாப்பைப் பெற்றுக் கொடுப்பதும், நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக நடைமுறைகள் என்பவற்றுக்கு எதிராக வர்த்தகர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் பாதுகாப்பினை பெற்றுக் கொடுப்பதும் இலங்கை அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகின்றது. மேலும் பண்டங்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியாளர்களுக்கும் வர்த்தகர்களுக்குமிடையில் ஆரோக்கியமான போட்டியை உத்தரவாதப்படுத்துவதிலும் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது. போட்டிச் சந்தையில் நுகர்வோர் பாதுகாப்பு இலகுவாக இருக்கும். அத்துடன் இலங்கையில் நுகர்வோர் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் மூலம் சுரண்டப்படுவதனைப் பாதுகாக்கும் பொருட்டும் நுகர்வோர் பாதுகாப்பு முக்கியமாகின்றது.

## 3.0 நுகர்வோர் பாதுகாப்புக்கான சட்டங்கள்

நுகர்வோர் பாதுகாப்பானது இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பாகவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இதன் காரணமாக நுகர்வோர் பாதுகாப்புக்கான சட்டங்கள் ஐம்பதுகளிலிருந்தே நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கூறமுடியும்.

பின்வருவன இலங்கையின் நுகர்வோர் பாதுகாப்புடன் தொடர்புடைய சட்டங்களாகும்.

01. 1950ம் ஆண்டின் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்
02. 1960ம் ஆண்டின் இலங்கை கட்டளைகள் பணியகம்
03. 1974ம் ஆண்டின் 1ம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
04. 1979ம் ஆண்டின் 16ம் இலக்க தேசிய சுற்றாடல் போக்குவரத்து ஒழுங்குவிதிச் சட்டம்.
05. 1980ம் ஆண்டின் 27ம் இலக்க மருந்துகள், நறுமணப் பொருட் சட்டம்.
06. 1986ம் ஆண்டின் இலங்கை தரப்படுத்தல் சட்டம்.
07. 1987ம் ஆண்டின் 1ம் இலக்க நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே கூறப்பட்ட சட்டங்கள் காலத்துக்குக் காலம் திருத்தங்கள் செய்யப்பட்டு வந்துள்ளன. அவற்றுள் 1979ம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் பல திருத்தங்களைப் பெற்றுவந்துள்ளது. 1980இல் இச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு "நுகர்வோர் பாதுகாப்பு நிதியம்" என்ற ஒன்று ஏற்படுத்த வகைசெய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதி பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்படுவதுடன் இந் நிதியைப் பயன்படுத்தி நுகர்வோரது அறிவு வளர்ச்சிக்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியும்.

நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்த நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு உள்நாட்டு வர்த்தக ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக,

01. நுகர்வோருக்கும் வர்த்தகர்களுக்கும் இடையிலான தகராறுகளைத் தீர்த்து வைத்தல்.
02. வர்த்தகர்களின் தவறுகளுக்கு தண்டனை வழங்குதல்.
03. நுகர்வோரின் உரிமைகள், கடமைகள் தொடர்பாக அவர்களுக்கு கல்வியூட்டல்.
04. நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை விரிவாக்குதல்.
05. நுகர்வோர் சங்கங்கள் ஊடாக நுகர்வோரை ஒழுங்கமைப்புச் செய்தல்.
06. வர்த்தகர்களின் உரிமைகள், கடமைகள் தொடர்பாக கல்வியூட்டி நுகர்வோருக்கு பாதிப்பை ஏற்படுத்தாதிருக்க நடவடிக்கை எடுத்தல்.

என்பவற்றின் ஊடாக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தினால் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 4.0 நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புக்கள்

நுகர்வோர் பாதுகாப்பினை உறுதிப்படுத்த இலங்கையில் பல நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் நுகர்வோர் சங்கங்கள் என்கின்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. கிராம சேவையாளர் பிரிவு தோறும் உருவாக்கப்பட்டிருந்த இந்த அமைப்பு நுகர்வோரைப் பாதிக்கும் எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டி பரிகாரங்களைத் தேடிக்கொடுக்கும். இதற்கு மேலதிகமாக பின்வரும் அமைப்புக்கள் இலங்கையில் தொழிற்படுகின்றன.

**i) இலங்கை நுகர்வோர் சங்கங்களின் சம்மேளனம்**

நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் 1996 இல் உருவாக்கப்பட்டதே இந்த அமைப்பாகும். இது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 4000 க்கும் மேற்பட்ட நுகர்வோர் சங்கங்களை இணைத்து உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இதன் மூலம்,

- பாதுகாப்பான உணவு, நீர் ஆகியவற்றைப் பெறக்கூடியவாறு நுகர்வோருக்கு கல்வியூட்டுதல்.
- நுகர்வோருக்கு கிடைக்கும் பொருட்கள், சேவைகள் என்பவற்றின் தரத்தை உறுதிப்படுத்தல்.
- அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் நுகர்வோர் தொடர்பான அக்கறையை அதிகரித்தல்.
- நுகர்வோர் பிரச்சினைகளுக்கு சாத்தியமான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- நுகர்வோருக்கான தகவல்களைத் திரட்டி வழங்குதல்.
- நுகர்வோர் தேவைகள், பாதுகாப்புக்கள் தொடர்பான நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல்.
- நுகர்வோர் தொடர்பான கருத்தரங்குகள், செயலமர்வுகள் மகாநாடுகள், கண்காட்சிகள் என்பவற்றை ஒழுங்கு செய்தல்.
- நுகர்வோர் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல கருமங்களில் இலங்கை நுகர்வோர் சங்கங்களின் சம்மேளனம் ஈடுபட்டு வருகின்றது.

ii) **விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்**

இலங்கையில் பொருட்கள் நியாயமான விலையில் விற்கப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. வியாபாரிகள் கொள்ளை இலாபம் பெறுவதனைக் கட்டுப்படுத்தவும் பொருட்கள் நியாயமான விலையில் பெறப்படுவதனை உறுதிப்படுத்தவும் இந்த அமைப்பினால் கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயிக்கப்படும். எவ்வாறாயினும் கட்டுப்பாட்டு விலையினை விட வியாபாரிகள் கூடிய விலையில் பொருட்கள் விற்பது குற்றமான செயலாகக் கருதப்பட்டு நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே கட்டுப்பாட்டு விலையில் நுகர்வோர் பொருட்களைப் பெற்றுக்கொள்ள விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் உதவுகின்றது.

iii) **தரநிர்ணய சபை**

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உயர்ந்த தரத்தில் இருப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டதே தர நிர்ணய சபையாகும். இதன் மூலம் தரம் உறுதிப்படுத்தப்பட்ட பின் 'SLS' என்கின்ற அடையாளத்தைப் பொருட்களின் மீது இட முடியும். ஒரு பொருள் தரமானது என்பதை உறுதிப்படுத்தி அதனைக் கொள்வனவு செய்யவும், போலிப் பொருட்களால் ஏமாற்றப்படாதிருக்கவும், வாங்கப்படும் பொருளிலிருந்து உச்சப்பயனை அடையவும் தர நிர்ணய சபையின் தரப் பரிசோதனையும் அடையாளமும் வகை செய்வதனைக் காணலாம்.

iv) **நியாயமுறை வியாபார ஆணைக்குழு**

இலங்கையில் ஏகபோக உரிமையைக் கட்டுப்படுத்தவும், போட்டி நடவடிக்கைகளைத் தூண்டவும் என உருவாக்கப்பட்டதே இந்த ஆணைக்குழுவாகும். இது போட்டி நடவடிக்கைகள் ஊடே உயர்ந்த தரம் கொண்ட பொருளைக் குறைந்த விலையில் நுகர்வோர் கொள்வனவு செய்ய வகை செய்வதே இந்த அமைப்பாகும். இதன் நடவடிக்கைகள் மூலம் நுகர்வோர் தமது பயனை உச்சப்படுத்தி விட முடியும்.

v) **நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை**

நுகர்வோர் பாதுகாப்புக்காக எடுக்கப்படும் உச்சப் பாதுகாப்பு நடவடிக்கை இதுவாகும். அரசாங்கத்தினால் மிக விரைவில் உருவாக்கப்பட இருக்கும் இந்த நடவடிக்கையினால் நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கை மையப்படுத்தப்படும். இதன்படி எல்லா நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளும் இதன் கீழ்க் கொண்டு வரப்படும்.

## 5.0 முடிவுரை

நுகர்வோர் பாதுகாப்பானது இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளுக்கு மிக அவசியம் என்பதை மக்கள் நடைமுறையில் உணர்ந்துள்ளனர். கல்வியறிவில் குறைந்த நுகர்வோர் பாதுகாக்கப்படுவதற்கு அரசாங்கம் முன்வராவிட்டால் அவர்கள் பல்வேறு வழிகளில் பாதிப்புக்குள்ளாக வேண்டிவரும். இதன் காரணமாகவே நுகர்வோருக்குக் கல்வியூட்டவும் தகவல் வழங்கவும் நடவடிக்கை எடுப்பது நுகர்வோர் பாதுகாப்பில் முக்கியமாகின்றது. இலங்கை நுகர்வோர் உற்பத்திப் பொருளில் அச்சிடப்பட்டிருக்கும் உற்பத்தி செய்யப்பட்ட திகதி, காலாவதியாகும் திகதி, பாவனை முறை, விலை, வியாபாரக்குறி போன்றவற்றை அறிந்துகொள்ளும் தகுதிகூட நுகர்வோர் பாதுகாப்பினால் ஏற்பட்டிருக்கும் விளைவு எனக்கூறினால் அது மிகையாகாது. எனவேதான் நுகர்வோர் பாதுகாப்பானது இலங்கை மக்களை அறிவுள்ள நுகர்வோராக மாற்றியுள்ளது என்பதை எல்லோரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**க. தேவராஜா**
தலைவர்,
வணிகத்துறை,
பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலத்திரனியல் வணிகமும் அதன் அபிவிருத்தியும்
# Electronic Commerce and its Development

மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளியிடப்படுகின்ற பொருள், சேவை, எண்ணம், அலோசனை, இடம், செயற்பாடுகள் ஆகியவற்றினை வெளியிடுகின்ற செயற்பாடுகள் உற்பத்தி எனப்படுகின்றது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், சேவைகளை நுகர்வோரிடம் சேர்க்கின்ற பணியினை வர்த்தகம் மேற்கொள்கின்றது.

வியாபாரமும் அதன் துணை நிலைச் சேவைகளையும் உள்ளடக்கியதே வர்த்தகமாகும். துணைநிலைச் சேவைகள் என்னும் போது பணமும் வங்கியும், போக்குவரத்து, காப்புறுதி, தொடர்பாடல், ஏனைய சேவைகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

மனிதத் தேவைகள் விருப்பங்கள் ஆகியவற்றினை திருப்திப்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளும் வணிகம் ஆகும். இது உற்பத்தி, வியாபாரம், துணைநிலைச் சேவைகள் ஆகியவற்றினை உள்ளடக்கியதாக இருக்கின்றது. வணிகம் பரந்ததாகவும் அதில் ஒன்றே வர்த்தகமாகவும் காணப்படு கின்றது. வர்த்தகத்தின் ஒரு பிரிவே வியாபாரம் ஆகும்.

வியாபாரத்தின் நோக்கங்களாக இலாபம் உச்சப்படுத்துதல், விற்பனையை உச்சப்படுத்தல், வியாபாரத்தில் நிலைத் திருத்தல், பங்குகளின் விலையை உச்சப் படுத்தல், சேவைகளை வழங்குதல், ஊழியர் நலனை உச்சப்படுத்தல், சமூக நலன் பேணுதல், வியாபாரியின் சுய திருப்தி ஆகியன காணப்படுகின்றது.

வியாபாரமானது பல்வேறு படிமுறைகளில் பின்வருமாறு வளர்ச்சியடைந்து வந்திருப்பதனை அவதானிக்கலாம்:

- பண்டமாற்று முறை
- பணப்பரிமாற்றம்
- கைத்தொழில் புரட்சி
- தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி

வியாபாரத்தின் தற்போதைய பிரதான புதிய போக்குகளாக பூகோளமயமாக்கல், தொழில்நுட்ப முன்னேற்றம் சூழல் பிரச்சினையும் வியாபார ஒழுக்கமும் காணப்படுகின்றது.

## இலத்திரனியல் வணிகம் (E-Commerce)

இலத்திரனியல் வணிகம் தொடர்பாக ஒரு பொதுவான வரைவிலக்கணம் காணப்படவில்லை. எனினும் உலக வர்த்தக நிறுவனத்தின் மின் வணிகம் தொடர்பான வேலை நிகழ்ச்சித்திட்டத்தில் இதற்கு இலத்திரனியல் விதிமுறைகளுக் கூடாக பொருட்கள் மற்றும் சேவைகள் என்பனவற்றின் உற்பத்தி, விநியோகம், சந்தைப்படுத்தல், விற்பனை முதலியனவற்றைக் குறிக்கின்ற ஒரு பதமாக இது கருதப்படுகின்றது. இதை இலத்திரனியல் முறைக்கூடாக வியாபாரம் செய்தல் என சுருக்கமாக வரைவிலக்கணம் கூறலாம்.

இலத்திரனியல் தகவல் பரிமாற்றம், தரவுத் தளங்கள், மின்அஞ்சல் போன்ற தொடர்பு முறைகளுக்கூடாக இதில் தகவல் பரிமாற்றப்படுகின்றது. இத்தகைய நிலை செலவு, சேமிப்பு அதிகரித்த அளவிலான போட்டித்திறன், விருத்தியடைந்த வாடிக்கையாளர் உறவுகள், பாரம்பரிய செய்முறைகளை மீள வடிவமைத்தல் போன்ற வழிகளில் இது செயற்திறனுக்கு வழிவகுக்கின்றது. மின் வணிகத்தின் வளர்ச்சிக்கு இணையம் அதிக பங்களிப்பினை வழங்குகின்றது. மின் வணிக வளர்ச்சிக்கேற்ப இலத்திரனியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்திற்கான (E-Cash) புதிய உபாயங்களும் உருவாகிவருகின்றது. இது அட்டைகளை அடிப்படையாகக் கொண்ட பணத்தை உள்ளடக்குகின்றது. பொதுவாக இலத்திரனியல் வணிகத்திற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கூறலாம். தகவல் தொழில்நுட்பத்தின் வலைப்பின்னலின் ஊடாக (இணையம்) நடைபெறும் வர்த்தகம் இலத்திரனியல் வர்த்தகமாகும். கணனி, இணையம் மூலம் கடன் அட்டைகளைப் பயன்படுத்தி பொருட்கள், சேவைகளை கொள்வனவு செய்யும் வர்த்தகமாக இது காணப்படுகின்றது.

ஒரு வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் பின்வரும் 3 அடிப்படைகளில் ஏதாவது ஒன்றினை இலத்திரனியல் முறையில் மேற்கொள்ளும் போது அது மின் வணிகம் என்ற கருதுகோள்களுள் அடங்குகின்றது.

- விளம்பரம் செய்தலும் தேடுதல் நடத்தலும்
- கட்டளை வழங்குதலும் கொடுப்பனவை மேற்கொள்ளலும்
- விநியோகம் செய்தல்.

மின் வணிகத்தை பின்வருமாறு 3 பிரதான பிரிவுகளாக வகுக்க முடியும்:

வணிக நிறுவனங்களுக்கும் ஏனைய வணிக நிறுவனங்களுக்கும் இடையில் நடைபெறுதல்.

வணிக நிறுவனங்களுக்கும் நுகர்வோருக்கும் இடையில் நடைபெறுதல்.

வணிக நிறுவனங்களுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் இடையில் நடைபெறுதல்.

இதில் வணிக நிறுவனங்களுக்கு இடையில் நடைபெறுகின்ற மின் வணிக அளவே உயர்வானதாகக் காணப்படுகின்றது.

## இலத்திரனியல் வணிகமும் பொருளாதாரத் தாக்கமும்

இலத்திரனியல் வணிகமானது பல்வேறு பொருளாதாரத் துறைகளின் மீது மிக முக்கியமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுகின்ற வேகத்தை அதிகரிக்கின்றது. தகவல் தொடர்பு, தகவல் பரிமாற்றம் தொடர்பான நேரத்தையும் சிக்கனப்படுத்துகின்றது. அத்துடன் வலுவான செயற்திறனையும் ஏற்படுத்துகின்றது. மேலும் தீர்மானங்களை எடுப்பதற்கும் வியாபார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் புதிய கேள்விகளை நிறைவு செய்வதற்கும் புதிய தந்திரோபாயங்களை கடைப்பிடிப்பதற்கும் செயற்திறன் மிக்க செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. போட்டிச் சந்தையில் உற்பத்தி அளவு உயர்தல், தரம் உயர்தல், புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல், வேலைவாய்ப்புக்கள் அதிகரித்தல் போன்ற வழிகளில் பொருளாதாரத்துறையில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. மின் வணிகம் சார்ந்த விற்பனை அளவின் அதிகரிப்பினை பொரஸ்டர் ரிசேர்ச் இன் கோர்ப்பரேட்டர் நிறுவனத்தின் ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட முடிவுகளிலிருந்து பின்வரும் அட்டவணை மூலம் உணரக் கூடியதாக இருக்கின்றது.

## வர்த்தக ஊடகங்களின் சார்புரீதியான முக்கியத்துவம்

| ஊடகம் | சதவீதம் | |
|---|---|---|
| தொலைபேசி அல்லது தொலைநகல் | 51% | 32% |
| நேரடி விற்பனை | 22% | 17% |
| அஞ்சல் | 2% | 1% |
| இணையம் சாராத மின் வணிகம் | 10% | 8% |
| இணையம் சார்ந்த மின் வணிகம் | 15% | 41% |
| மொத்தம் | 100% | 100% |

## இலத்திரனியல் வர்த்தகம் துரிதமாக வளர்ச்சியடைந்தமைக்கான காரணங்கள்

1. உலகமயமாக்கல்
2. செலவு குறைவு
3. இருப்புக்களை களஞ்சியப்படுத்த வேண்டிய அவசியமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தெரிவுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
5. மேலதிக செலவு குறைவு
6. ஆவணப் பயன்பாடுகள் குறைவு
7. இடைநடுவர் தேவையில்லை
8. இலத்திரனியல் வர்த்தக அறிவு வளர்ச்சி ஏற்பட்டமை.

## இலத்திரனியல் வணிகத்தின் நன்மைகள்

1. வியாபார நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளலாம்.
2. செலவை இழிவுபடுத்திக் கொள்ளலாம்
3. பயன்பாட்டிலுள்ள வியாபார ஆவணங்களின் அளவு குறைவடைதல்.
4. தெரிவுகளின் எண்ணிக்கை அதிகம்
5. சம்பந்தப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைவடைதல் (நடுவர்கள் குறைவு)
6. சந்தையை அண்மித்தல் (பூகோள சந்தை மயமாக்கல்)

## இலத்திரனியல் வர்த்தகத்தில் பயன்படுத்தப்படுபவை

1. Electronic Data Interchange
2. Electronic Mail
3. Computer Pulltrtine Boards
4. Fax
5. Electronic Founds Transfer

## இலத்திரனியல் வர்த்தகத்தில் நடைபெறும் விடயங்கள்

1. களஞ்சியப்படுத்தல்
2. மொத்தக் கொள்வனவு
3. கொள்வனவுக் கட்டளை
4. ஏலம் கூறுதல்
5. ஆவணப் பரிமாற்றம்

## வலையமைப்புப் பணம்

வலையமைப்புப் பணம் என்ற பதத்திற்கு இணையம் போன்ற தொடர்பாடல் வலையமைப்புக்கு ஊடாக அனுப்பி வைக்கப்படும் மின் பணம் என வரைவிலக்கணம் கூறமுடியும். இது முன்னர் செலுத்தும் வகையைச் சேர்ந்த ஒரு கொடுப்பனவுக் கருவியாக இருந்துவருகிறது. மின் பண அலகுகள் பெற்றுக் கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து உண்மையான கொள்வனவு நேரத்திற்கு முன்னர் பணம் செலுத்துபவர் தனது பணத்தை மாற்று வட்டி உழைக்கும் வழி ஒன்றில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பினை இழந்து விடுகின்றார். பண்டங்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னரே பணம் கையைவிட்டுப் போகும் நிலை ஏற்படுமானால் கொள்வனவாளர் இழந்த வட்டி வருமானத்தின் வடிவில் சந்தர்ப்பச் செலவுகளை மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஏனைய கொடுப்பனவுக் கருவிகளைப் போலன்றி முன்னரே பணம் செலுத்தப்பட்ட ஒரு கருவி என்ற முறையில் வலையமைப்புப் பணத்தின் உபயோகம் இணையத்திற்கு ஊடாக செய்து வைக்கப்பட்டிருக்கும் பண அலகுகளின் வடிவில் கொள்வனவு சக்தியை நிலைமாற்றம் செய்வதனைக் குறிக்கின்றது. இக் கொடுக்கல் வாங்கல் களிலும் இழப்பு, களவு, மோசடி முதலியவற்றிற்கான நட்ட அச்சம் உள்ளது. வலையமைப்பு பணக் கொடுக்கல் வாங்கல்களில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்கள் இடம் பெறுவதில்லை. வலையமைப்புப் பணம் நாணயக் கொள்கைகளுக்கு சவாலாக அமைந்து வருகின்றது. இதனால் வெளியாட்களால் வெளியிடப்படும் பணத்தினை உள்நாட்டவரும் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பம் ஏற்படும். அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் கணிசமான முறையில் அதிகரித்து வெளிநாடுகளிலான, பண வைப்புக்களிலான அளவிலும் அதிகரிப்பு ஏற்பட்டால் உள்நாட்டுப் பணக் கையிருப்புக்கும் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களின் அளவுக்கும் இடையில் ஒரு வேறுபாடு தோன்ற முடியும். இதன் காரணமாக பணக் கூட்டுக்கள், வருங்காலப் பணவீக்க விகிதங்கள் தொடர்பான தமது உற்பத்தி ஆற்றலை இழக்கமுடியும். மேலும் வலையமைப்புப் பணச் சுற்றோட்டம் நாணயக் கொள்கைக்கு வெளியே இடம்பெறுவதற்கான வாய்ப்பும் இருந்து வருகின்றது.

மின் வணிகம் குறிப்பாக நிதித் துறைச் சேவைகள் போன்ற பெருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையான சேவைத் துறைகளிலும் ஒரு நிலைமாற்றத்தை எடுத்துவர முடியும். இன்று வங்கிகளில் வாடிக்கையாளர்களுக்கும் வங்கி ஊழியர்களுக்கும் நேரடித் தொடர்பு இல்லாத பணப் பரிமாற்றத்திற்கு இலத்திரனியல் ரீதியான கொடுக்கல் வாங்கல் உதவுகின்றது. இதனால் நிதித்துறை சார்ந்த செலவுகள் அதிகளவில் சேமிக்கப் படுகின்றது. இலங்கையில் கூட 1995 இல் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஸ்தாபிக்கப்பட்ட கணிப் பொறிமயமாக்கப்பட்ட வர்த்தக வலையமைப்பு இதன் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றது.

மின் வணிகம் உலகெங்கிலும் விரிவடைந்து வரும் பொழுது மின் பணத்தின் புதிய உபயோகங்கள் தோன்றுகின்றன. பொதுவாக இரண்டு வகைகளைச் சேர்ந்த மின் பண வகைகளை இனங்கண்டு கொள்ள முடியும். இதில் ஒன்று முன்னர் பணம் செலுத்தப்பட்டிருக்கும் அட்டைகளுடன் சம்பந்தப்பட்ட பண அலகு ஆகும். வாடிக்கையாளர் ஏற்கனவே பணம் செலுத்தியிருக்கும் உண்மையான கொள்வனவுச் சக்தியைக் கொண்டிருக்கும் பிளாஸ்டிக் அட்டைகளே என இவற்றுக்கு வரைவிலக்கணம் கூறுகின்றது.

இரண்டாவது வகை மின் பொருளை அடிப்படையாகக் கொண்ட வகையாகும். இது இணையம் போன்ற தொலைத் தொடர்பு வலையமைப்புக்கு ஊடாக இலத்திரனியல் முறையில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் பண அலகுகளை அனுப்பிவைக்கின்றது.

மின் வணிகம் இந்த இரு வகைகளையும் சேர்ந்த மின் பணக் கருவிகளை உபயோகித்துக்கொள்ள முடியும். எனவே, இணையத்திலிருந்து வரும் மின் பணத்தை வலையமைப்புப் பணம் அல்லது மின்வெளிப் பணம் என வர்ணிக்கலாம்.

***Reference:***


1. ***Bruce and Jewell*** - Business studies
   Pearso Education Ltd, Harlow
   England 2002
2. Gene crozies Business Skills
   Garetne Lewies 2001



***E. Ratnam***
B,Com(Hons),H.N.Dip in Acc.,MATT,M.Phill,
Senior Lecturer, Dept. of Commerce
University of Jaffna.



**இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்**

**கடன் வழங்கும் நிறுவனங்களின் கடன்பட்டாளர்கள் மீதான கொடுகடன் தகவல்களை சேகரித்தல், பணியகத்தின் பங்குடமையாளர்களான கடன் வழங்கல் நிறுவனத்துக்கு கொடுகடன் தகவல்களை வழங்கல் போன்ற பணிகளை மையமாகக் கொண்டு 1995ம் ஆண்டு 8ம் இலக்க சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1990ம் ஆண்டின் 18ம் இலக்க இலங்கை கொடுகடன் பணியக சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இது 2002 மேமாதம் பன்னிரண்டாவது ஆண்டு தொழிற்பாட்டை பூர்த்தி செய்துள்ளது. தற்போது உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற விசேட வங்கிகள் பிரிவுபெற்ற நிதி கம்பனிகள், பிரிவு பெற்ற குத்தகை நிறுவனம், மத்திய வங்கி ஆகியோர் இதன் பங்குடமையாளர்கள்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில் நுட்பத்தின் அறிமுகமும் இலங்கையில் சமூக அபிவிருத்தியில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கும்

## அறிமுகம் (Introduction)

தகவல் தொழில் நுட்பம் (Information Technology) என்ற சொற் பிரயோகம் இன்று நவீன உலகின் ஒரு தாரக மந்திரமாக இருந்து வருகின்றது. தகவல் தொழில் நுட்பம் என்ற புதியதுறை தொடர்பியல் தொழில்நுட்பம் (Communicating) Technology) மற்றும் கணணிப் பொறி தொழிற் நுட்பம் (Computer Technology) என்பவற்றின் ஒருங்கிணைந்த விளைவாக உருவாகியதாகும். இன்றைய உலகின் நவீன போக்குகள் அனைத்தும் தகவல் தொழில் நுட்பத்தின் ஆதிக்கத்தைக் கொண்டுள்ளன. நவீன உலகில் தகவல் தொழில் நுட்பத்தின் விருத்தி இரு துறைகளில் நிகழ்ந்துள் ளது. தகவல் பயன்பாட்டுக்கு எடுக்கப் பட்ட வன்பகுதிகளை மட்டுமன்றி, தகவல்களை வகைப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல், களஞ்சியப்படுத்தல் போன்ற தேவைக்குரிய மென் பகுதிகளையும் பயன்படுத்தல் வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் தகவல் தொழில் நுட்பத்தின் இரு பிரதான பகுதிகளான வன் பகுதியும் மென் பகுதியும் (Hardware and Soft ware) ஏற்பட்டன.

## வன்பகுதி (Hard Ware)

இப்பாகமானது கணணி பயன்பாட்டுக்கு அவசியமான பௌதீக தன்மை வாய்ந்த உபகரணங்கள் வன்பகுதி என அழைக்கப்படும். இலத்திரனியல் கருவிகளான Moniter, CPU, அச்சு, தட்டச்சு, பலகை, Mouse என்பன இவற்றுள் அடங்கும்.

## மென்பகுதி (Soft Ware)

கணணி தொழிற்பாட்டுக்கும் கட்டுப்பாட்டுக்கும் அவசியமான செயற்திட்டம் மென்பாகம் எனக் கூறப்படும். வன் பாகத்தை பயன்படுத்த வேண்டுமானால் மென்பாகம் அவசியமாகும். மென்பாகம் 3 பிரதான தொகுதிகளாக வகைப்படுத்தப் படும்.

* செயற்பாட்டு முறை
(The Operating System)
பயன்பாட்டு திட்டங்கள்
(Utility Programmes)
பிரயோகத்திற்கான மென்பாகம்
(Applications Soft Ware)

## தொடர்பியல் ஊடகம் (Communicating Media)

தொடர்பியல் துறையின் பரிணாம வளர்ச்சி அடிப்படையில் இரண்டு வகைகளின் கீழ் இடம்பெற்று வந்துள்ளது. வயர் அல்லது கம்பி இணைப்பு முறை மற்றும் கம்பியல்லாத இணைப்பு முறை என்பனவாகும். கம்பியல்லாத தொடர்பு முறை மின்காந்த அலைகள் மற்றும் நுண் அலைகள் என்பவற்றின் உபயோகத்தைக் குறிக்கின்றது. இந்த இரு ஊடக முறைகளும் மின்னலினால் தாக்கப்படக்கூடியவையாகும். நீண்ட தூர தொடர்பியல் துறைக்கு கண்ணாடி இழை பயன் படுத்தப்பட்டு வருவதுடன் அது பின்னர் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு பெறக் கூடியதாகவும் அமைந்துள்ளது. நாடளாவிய மற்றும் சர்வதேச தொலை தொடர்புகளுக்கென மின் காந்த அலைகளும் நுண் அலைகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## கணணி வலையமைப்பு தொடர்பியல்

தொடர்பியல் என்பது இரு ஆட்களுக்கிடையான தொடர்பு தொடக்கம் மக்கள் குழுக்களுக்கிடையான தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை வேறுபட்டுச் செல்கின்றது. குழுக் களுக்கிடையே தொடர்பு தொடர்பியலுக் கென வலையமைப்பினைப் பயன் படுத்தும் கருத்தை அடிப்படையாக கொண்டுள்ளது. உண்மையில் தொடர் பியல் வலையமைப்பு தொடர்பான யோசனை கணணி பொறி தொழில் நுட்பத்தில் உதவியுடனேயே வளர்ச்சிய டைந்தது. ஏனெனில் கணணி பொறிகள் தொடர்பியல் வலையமைப்பில் மிகவும் சக்தி வாய்ந்த ஊடகங்கள் இருந்து வருகின்றன. அவையாவன, குறுக பரவிய வலையமைப்பு (Local Area Net Work (Lan), நெடுக பரவிய வலையமைப்பு (Wide Area Net Work (Wan), நகர்ப்புற வலையமைப்பு என 3 வகைப்படும். குறுக பரவிய வலையமைப்பென்பது தனிப்பட்ட தொடர்பாடல் தேவை கருதி தனிப்பட்ட கணணிகளும் வேலை தளங்களும் இதன் மூலம் இணைக்கப்படும். எனினும் நகர்ப் புற வலையமைப்பு ஒரு பெரிய நகரம் போன்ற ஒரு பிரதேசத்தை இது உள்ளடக் குகின்றது.

Wan என அழைக்கப்படும் நெடுக பரவிய வலையமைப்பு மிக பரந்த அளவுக்கு தூரத்திலுள்ள கணணிகள் யாவும் வேலைத்தளங்கள் பலவும் தேசிய தொலைபேசி வலையமைப்பு மூலம் இணைக்கப்படுகின்றது.

## தகவல் முறைமை
(Information System)

தகவல் முறை என்பது தனிநபர்கள் (People), நடைமுறைகள் (Procedures), மென்பாகம், வன்பாகம் (Soft Ware & Hard Ware) தரவு என்பனவற்றின் ஒன்றி ணைப்பு ஆகும். இந்த ஐந்து பகுதிகளும் ஒன்றிணைந்து ஒழுங்கமைப்பொன்றை நடாத்திச் செல்வதற்குத் தேவையான தகவல்களை வழங்குகின்றன. நிறுவனம் ஒன்றுக்குள் தகவல்கள் கீழ்மட்டத்தில் இருந்து மேல்மட்டம் வரையும் திணைக் களங்களுக்கிடையிற் குறுக்காகவும் சென்றடையும்.

## முகாமை தகவல் முறைமை
(Management Information System)

கணணி தொழில் நுட்பம் முன் னேற்றமடைந்ததுடன் இது பல்வேறு மட்டங்கள் வரையிலான முகாமை கருமங்களுக்குப் பயன்படுத்தப்படுகின் றது. எல்லா முகாமையாளரும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் அக்கறை செலுத்துகின்றார்கள். அதற்காக முகாமை யாளரிடம் இருந்து பரந்த அளவிலான கேள்வி ஏற்பட்டு வருகின்றது. இத்தகைய பிரவேசம் முகாமை தகவல் முறை (Management Information System) என அழைக்கப்படும்.

## கணணிப் பொறிகள் செயற்படும் முறை

கணணிப் பொறிகள் என்பவை தொலைபேசி, வானொலி மற்றும் ஒளிப் பதிவு கருவிகள் போன்ற ஒரு மின்னியல் உபகரணமாகும். நாம் பல்வேறு நடவடிக் கைகளை மேற்கொள்ளும் படி கணணிப் பொறிகளுக்கு கட்டளை இட முடியும். இந்த பண்பானது கணணிப் பொறியை ஏனைய மின் உபகரணங்களில் இருந்து வேறுபடுத்துகின்றது. நவீன கணணிப் பொறிகள் மின்சார ஒழுக்குகளினால் இயங்கி வருவதனால் நாம் கணணிப் பொறிகளிடம் 0 மற்றும் 1 என்ற எழுத்துக் களை உபயோகிப்பதன் மூலம் உரை யாட முடியும். இங்கு 1 என்ற குறியீடானது மின்சக்தி கிடைக்கின்றது என்பதனையும் குறிக்கின்றது. இன்று ஆங்கிலம் அல்லது சிங்களம் போன்ற மொழிகளைப் பயன் படுத்துபவர்கட்கு எளிதான கணணிப் பொறிகட்கு கட்டளைகள் வழங்குதற்கு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் இம்மொழிகள் 0 மற்றும் 1 என்பவற்றின் உபயோகத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. கம்பியூட்டர்களின் எளிமையான செயல் பாட்டு கோட்பாடு வன்பொருளை மென் பொருள் இயக்கி வருகின்றது என்பதா கும். கணணிபொருள் உபயோகிப்பாளர் தொடர்பு முறையை கீழ்வரும் விளக்கப் படம் மூலம் காட்டலாம்.

Computer Machine Soft ware

*உபயோகிப்பவர் → பிரயோக மென்பொருள் →*

*தொகுதி மென்பொருள் → வன்பொருள்*

## Use Net

குறிப்பிட்ட ஒரு குழுவைச் சேர்ந்த மக்களிடையே தகவல் தொடர்பினை மேற் கொள்வதற்காக இந்த வசதி பயன்படுத் தப்பட்டு வருகின்றது. இது மின் அஞ்சலுக்கு மாறாக உடனே பதிலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொடுக்கின்றது. எனவே இந்நிலையில் குழு உறுப்பினர்கள் ஓரிடத்தில் அமர்ந்திருப்பது போல நபர்களும் கலந்துரையாடல்களை நடாத்த முடியும். FTP; File Transfer Protocol என்று அழைக்கப்படும் இந்த கோர்ப்புக்களை பரிமாறிக் கொள்ளும் முறை பெரும்பாலும் ஆராய்ச்சித் துறையினரால் இணையத்தைப் பயன்படுத்தி பல்வேறு இடங்களுக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை அனுப்பி வைப்பதற்கும் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

## வையக விரிவு வலை (World Wide Web)

வையக விரிவு வலை என்பது இணையத்தின் மிக அற்புதமான ஒரு தொழில் நுட்பமாகும். இது இணையத்துடன் ஒருவர் பரஸ்பரத் தொடர்பு கொள்வதற்கான இடை முகத்தை வழங்குகின்றது. இணையத்தின் பல்லூடக ஆற்றல் வையக விரிவு வலையிற் பொதிந்துள்ளது. இந்த வெப்தள தொழிற் நுட்பம் 90 களின் தொடக்கங்களில் இணையத்துடன் இணைக்கப்பட்டது.

## நாம் எவ்வாறு இணையத்தில் அங்கத்தவராகலாம்?

இணையத்துக்கு உரிமை சொல்ல உலகில் யாரும் இல்லை. எனினும் எந்த நபரும் நேரடியாக அதனுடன் தொடர்பைப் பெறமுடியாது. ஏனெனில் Herbal கள் மின்காந்த அலைகள், துணைக் கோள்கள் போன்ற இணைய ஊடகங்களை நாம் இலவசமாகப் பெறமுடியாது. நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு நாட்டிலும் இணையத்தைப் பெற்றுத்தரும் முகவர் நிலையங்கள் உள்ளன. இந்த முகவரகங்கள் இணைய சேவை வழங்குனர்கள் (ISP) என அழைக்கப்படுவர். இலங்கையில் 10 முகவரகங்கள் இந்த இணைய சேவையை வழங்கி வருகின்றன. இவை தாம் வழங்கும் இணைய சேவையைப் பொறுத்து கட்டணங்களை அறவிடுகின்றனர். எமக்கு ஒரு முகவரகத்தில் இருந்து இணைப்புக் கிடைத்தவுடன் ஒரு மொடத்தைப் பயன்படுத்துவ தன் மூலம் சாதாரண தொலைபேசி ஊடாக வீட்டில் கணணிப் பொறியை இணையத்துடன் இணைக்கலாம்.

## சமூக அபிவிருத்தியில் தகவல் தொழில் நுட்பம்

இணைய வசதியினைக் கொண்ட ஒரு கணணிப்பொறியை ஒரு நபர் வைத்திருந்தால் முழு உலகத்துடனும் நினைத்த மாத்திரத்தில் அந்நபர் தொடர்பு கொள்ள முடியும். அந்த நபருக்கு கணக்கற்ற சுதந்திரம் பெற்றது போன்றாகிவிடும். பூகோள கிராமமானது இணையத்துக் கூடாக இப்பொழுது பிணைப்புற்றுள்ளது. இணையம் உலகில் உள்ள எவருக்கும் சொந்தமானதல்ல. அது உபயோகிக்கும் அனைவருக்குமே சொந்தமானது. இன்றைய மூன்றாம் மண்டல உலகின் சமூகத்தின் மீது மறைமுகமான கட்டுப்பாடுகளை எடுத்து வரும் அரசியல் மற்றும் அதிகார அமைப்பு போன்றவை இணையத்தில் காணப்படுவதில்லை. சமூகத்தில் வாழும் பெரும்பாலான மக்களுக்கு இணைய வசதிகளும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய தொழில் நுட்பங்களும் கிடைப்பதாக இருந்தால். சமூகமானது நிச்சயமாக அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லப்படும் என்பதில் ஐயமில்லை.

*C. Thamilanpan*
13'F' Com
2003 A/L

**ஸ்ராநெற் {STANET} இணையதளம்**

திணைக்களம் முக்கிய தரம் மற்றும் பத்திரிகை வெளியீடுகளை அடையும் வழிமுறைகளையும் திணைக்களத்தின் வேலை பற்றிய பொதுவான தகவல்களையும் மத்திய வங்கியின் உள்ளக வலையமைப்பு மீதான Stanet இணையதளம் மூலம் தொடர்ந்து வழங்கியது. ஒருங்கிணைக்கப்பட்ட வலையமைப்பு முறை வங்கியின் பிரிவுகளுக்கிடையேயும் ஏனைய திணைக்களங்களிற்கிடையேயும் மற்றும் பாரிய வங்கியின் இணையத்தளத்திலும் தரவுத் தளத்தினை அடையவும் பகிர்ந்து கொள்வதற்கும் வழிவகுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னகை அணியும் நங்கையரை சொக்க வைக்கும்
சொர்க்கபுரி!

# வீ. எம். கே. ஜூவலர்ஸ்





# V. M. K. Jewellers

கண்டி வீதி - சாவகச்சேரி

---

நவநாகரிக **Dress Point**

- ☆ மங்கையரின் திருமணப் பட்டு புடவைகளுக்கும், சல்வார் செற் மற்றும் சோளி கிற் வகைகளுக்கும்.
- ☆ ஆடவரின் பட்டு வேட்டி, சூட், சேர்ட், ரீசேட், டெனிம் ஜீன்ஸ் வகைகளுக்கும்.
- ☆ சிறுவர், சிறுமியருக்கான சூட் வகைகள் மற்றும் றெடிமெட் ஆடைகளுக்கும்.

யாழ். நகரில் முதன்மை வகிக்கும்
அதி உன்னத ஜவுளிச் சமுத்திரம்



# DRESS POINT



றெஸ் பொயின்ட்
இல: 23A, நவீன சந்தை,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

T.P - 0777745511

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமலர் "வரவு" நாமம் நிலை பெற வாழ்த்துகின்றோம்!

# JEZEEMA

★ அலுமினிய வார் வகைகள், *ALUMEX* வார் வகைகள்,

★ மலேஷியன் *Bour* வகைகள், *NIYAM BAR* வகைகள்


★ கண்ணாடி வகைகள்,

★ பலவர்ணங்களிலான போமிக்கா வகைகள் போன்றவற்றை


தரத்துடன் பெற்றுக் கொள்ளவும்

தரமான பிட்டிங் ஓடரை செய்து கொள்ளவும்

நீங்கள் நாடும் இடம்



★



# ஜெஸீமா

308. K.K.S வீதி. யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவத்தில் ஐந்து S எண்ணக்கரு [Five S Concept]

அண்மைக் காலமாக வணிக அமைப்புக்களிடையே கடுமையான போட்டி நிலவிவருவதைக் காணலாம். ஒரு வணிக அமைப்பு இவ்வகைப் போட்டியின் மத்தியிலும் தப்பிப் பிழைப்பதற்கு நுகர்வோரைத் திருப்திப்படுத்தும் வகையில் அதன் வெளியீடுகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. அதே வேளையில் செலவீனங்களையும் அதிகரிக்காது பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் விளக்குவதாயின் வெளியீடுகளை அதிகரிக்கின்ற அதே வேளையில் வினைத்திறனையும் பயன்பாட்டையும் தரத்தையும் அதிகரிக்க வேண்டும். இதற்கு வழி வகுக்கும் வகையில் யப்பானியர்கள் 5 S எண்ணக்கருவைப் பின்பற்றுகின்றனர். இது 1990ம் ஆண்டில் யப்பானில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஆரம்பத்தில் யப்பானில் உள்ள தொழிற்சாலைகளில் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது எதிர் பார்த்த வெற்றியைப் பெற்றுத் தந்தமையினால் காலப்போக்கில் அலுவலகங்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த எண்ணக்கருவில் வருகின்ற பதங்கள் யப்பானிய மொழியில் உச்சரிக்கப்படுகின்றன. அவற்றை ஆங்கிலத்தில் எழுதும் போது அவை ஐந்தும் S என்ற முன் எழுத்தில் உச்சரிக்கப்படுவதனால் அவற்றை 5 S எண்ணக்கரு என அழைப்பர். அவையாவன:-

1. Seiri - செய்ரி
2. Seiton - செய்றொன்
3. Seiso - செய்சோ
4. Seiketsu - செய்கெட்சு
5. Shitsuke - செயிட்சுகே

இந்த எண்ணக்கருவில் அடங்குகின்ற ஒவ்வொரு பதமும் எவற்றை விளக்குகின்றன என்பதை அவதானிப்போம்.

## Seiri - தேவையற்றவற்றை அகற்றுதல்

ஒரு நிறுவனத்தினுள் தேவையற்ற பல பொருட்கள் காணப்படலாம். உதாரணமாக தேவையற்ற கடிதக்கோவைகள், பயன்படுத்த முடியாத தளபாடங்கள், புதுப்பிக்கமுடியாத இயந்திர சாதனங்கள், பழுதடைந்த வேறும் பொருட்கள் காணப்படலாம். இவை நிறுவனத்தினுள் இடவசதியைப் பாதிப்பதுடன் நிறுவன அகச் சூழலுக்கும் அச்சுறுத்தலாக அமைந்து விடுகின்றன. எனவே நிறுவனத்தில் காணப்படும் தேவையற்ற பொருட்கள் ஆராய்ந்து அறிந்து அகற்ற வேண்டும் என்பதையே Seiri எனும் பதம் விளக்குகின்றது. இதன் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெறலாம்.

* நிறுவனத்தினுள் இடப்பிரச்சினையை நீக்கலாம்
* சூழல் மாசுபடுதல், நோய்கள் பரவுதலைத் தவிர்க்கலாம்.
* ஊழியர்கள் மத்தியில் வேலைத் தளம் தொடர்பான திருப்தி ஏற்பட வழி வகுக்கும்.

## Seiton - தேவையானவற்றை தேவையான இடத்தில் வைத்தல்.

ஒரு நிறுவனத்தில் பலவகைப் பொருட்கள் பயன்படுத்தப்படும். அது நிறுவனத்தின் அளவையும், தன்மையையும் பொறுத்து வேறுபடும். உதாரணமாக தளபாடங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள், களஞ்சியப் பொருட்கள், கடிதக் கோவைகள், சுற்றுநிருபங்கள், பதிவேடுகள் போன்றவை காணப்படலாம். ஒவ்வொரு பொருளிற்கும் அதை வைத்திருக்க வேண்டிய சரியான இடம் காணப்படவேண்டும். அந்த உரிய இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பொருளை வைத்திருக்க வேண்டுமென்பதே Seiton எனும் பதத்தின் கருத்தாகும். இதன் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

* ஒவ்வொரு பொருளும் அதற்கென உரிய இடத்தில் வைக்கப்படுவதன் மூலம் நிறுவனத்தின் சூழல் கவர்ச்சியாக அமையும்.

* நிறுவனத்தில் உள்ளவர்களாலும், வெளியார்களாலும் விரும்பப்படும்.

* வேலையில் தாமதங்கள், நேரவிரயம் என்பவற்றைத் தவிர்க்கலாம்.

**Seiso - சுத்தமாக வைத்திருத்தல்**

ஒரு நிறுவனத்தினுள் பலவகைப் பொருட்கள் காணப்படும். இவை அனைத்தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இயந்திரங்கள், உபகரணங்கள் மீது படியும் தூசுகள், அழுக்குகள், கட்டிடத்தில் படியும் தூசுகள், அழுக்குகள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும். அதே போல் பணியாளர்களும் சுத்தமாக காணப்படவேண்டும். இவ்விதமாக நிறுவனம் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதே Seiso என்பதன் கருத்தாகும். யப்பானியர்கள் நிறுவனத்தை சுத்தமாக வைத்திருப்பதில் பெயர் பெற்றவர்களாக உள்ளனர். பல நிறுவனங்களில் ஒவ்வொரு நாளும் தமது வேலையில் குறித்த சில நிமிடங்கள் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபடுகின்றனர். இதற்காக அவர்கள் சிற்றூழியர்களை எதிர்பார்த் திருப்பதில்லை. இதற்காக அவர்கள் பிரத்தியேகக் கொடுப்பனவையும் எதிர்பார்ப்பதில்லை. இந்த முறையின் பயன்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

* நிறுவனத்தினுள் ஊழியர்கள் மனத் திருப்தியுடன் பணிபுரிவர்.

* நிறுவனத்தை நுகர்வோர் அதிகம் விரும்புவர்.

**Seiketsu - உயர் தரத்தைப் பேணல்**

நிறுவனத்தை உயர்ந்த தரத்தில் பாதுகாப்பான முறையில் திட்டமிட்டு தொடர்ந்து நடத்திச் செல்ல வேண்டுமென்பதே Seiketsu என்பதன் கருத்தாகும். யப்பானிய நிறுவனங்கள் உயர் தரத்திற்குப் பெயர் பெற்றவையாக உள்ளன. அவர்களின் உயர் முகாமைதர நியமங்களைப் பேணி தரமான பொருட்கள், சேவைகளை வெளியிட நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. தகுந்த திட்டமிடுதல், நெருங்கிய மேற்பார்வை, சிறந்த வழிகாட்டல் என்பன உயர்தரத்தைப் பேண உதவுகின்றன. உயர் முகாமைத்துவம் ஒத்துழைக்காவிட்டால் உயர் தரத்தைப் பேண முடியாது. அவர்கள் ஏனைய ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெறும் வகையிலும் வழி நடத்த வேண்டும். இதைப் பின் பற்றுவதன் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெறலாம்.

* வெளியீடுகளின் தரம் அதிகரிக்கும்

* வீண் அழிவுகள், சேதங்களைத் தவிர்க்கலாம்.

**Shitsuke -**
**பயிற்சியும் ஒழுக்கக் கட்டுப்பாடும்**

நிறுவனம் சிறந்த முறையில் வினைத்திறனாகச் செயற்படுவதற்கு ஊழியர்களை திட்டமிட்டு, பயிற்றுவித்து அவர்களுக்கிடையே ஒழுக்கக் கட்டுப்பாட்டையும் பேணிவர வேண்டும் என்பதே Shitsuke என்பதன் கருத்தாகும். ஊழியர்களிடையே உள ரீதியான மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் இந்த நிலையைப் பேணலாம். அதனால் ஊழியர்கள் தாம் பணிபுரியும் நிறுவனத்தை சொந்த நிறுவனம் போல் கருதி ஒத்துழைப்புடன் செயற்படுவார்கள். இந்த முறையைப் பின்பற்றுவதன் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

* நிறுவனத்தினுள் ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெறலாம்.

* நிறுவனத்தின் வெளியீடுகள் அதிகரிக்கும்.

இன்று ஜப்பானிய தொழில் நிறுவனங்களில் மட்டுமல்லாமல் அலுவலகங்களிலும் கூட இவ்வெண்ணக்கரு மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல்யம் பெற்று விளங்குகிறது. இந்த எண்ணக்கரு தொழில் தருநர்களுக்கும், தொழிலாளர்களுக்குமிடையில் சிறந்த மன நிலையை ஏற்படுத்த வழிவகுக் கிறது. இந்த எண்ணக்கருவை அறிமுக படுத்துவது மிகவும் எளிதானதெனக் கொள்ள முடியாது. நிறுவனம் ஒன்று இதை அமுல்படுத்தும் போது பல பிரச்சி னைகளும் தோன்றக்கூடும். எனினும் முகாமையாளர் உறுதியாக நின்று இவற்றை நடைமுறைப்படுத்துவாரேயா னால் வெற்றியைக் கண்டு கொள்ளலாம். இவ்வெண்ணக்கருவை வெற்றிகரமாகச் செயற்படுத்த பின்வரும் அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும்:

* நிறுவனத்திலுள்ள சகலரினதும் ஒத்து ழைப்பு அவசியம்.
* உயர் முகாமையில் உயர்ந்த சேவை அவசியம்.
* பிரதம நிறைவேற்று உத்தியோகத்த ருடைய சரியான தலைமைத்துவம் அவசியம்.
* சரியான திட்டமிடுதல் அவசியம்.

*Reference:*


Business Studies, **P. Kotler**

Business Studies, **Jegath Bandaranayake**


## 5 S எண்ணக்கருவின் முக்கியத்துவம்

* வெளியீடுகளின் அளவை அதிகரிக்க உதவும்
* வெளியீடுகளின் தரத்தை உயர்த்த உதவும்
* செலவுகளைக் குறைப்பதற்கு உதவும்
* நிறுவனத்தினுள் பாதுகாப்பை ஏற் படுத்த உதவும்.
* சிறந்த வேலைச்சூழல் ஊழியர்களை ஊக்குவிப்பதாக அமையும்.

யப்பானியர்கள் பின்பற்றுகின்ற 5 S எண்ணக்கரு மிகவும் பயன்மிக்கது. இந்த எண்ணக்கருவை முழு அளவில் எமது நாட்டிலுள்ள நிறுவனங்களும் பின் பற்றினால் அதிக பயனைப் பெறலாம். அதற்கு எம்மவர்களுக்கு முயற்சியில் ஆர்வம் அவசியம்.


பா. கஜானன சர்மா

2004 - Com.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கைத்தொழில் துறையின் அண்மைக்கால போக்குகள்

கடந்த இரு தசாப்தங்களுக்கு முன் விவசாயத் துறையை நம்பியிருந்த இலங்கையில் அண்மைக் காலத்தில் இருந்து கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்கு ஊக்கமாக இருப்பதனைக் காண முடிகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைரீதியான சேர்க்கையை ஆராய்வதன் மூலம் இதனை அறியலாம். மொத்த தேசிய உற்பத்தியின் விவசாயத் துறையின் பங்களிப்பு 28% கைத்தொழில் துறையின் அளவு 22% சேவை துறையின் பங்களிப்பு 50% என்ற அளவிற் காணப்படுகிறது.

இலங்கையில் தொழிற்சாலை கைத்தொழில்களின் வெளியீடாக அளவிடப்பட்ட கைத்தொழில் வெளியீடு 2002 இல் 2.8% 2001 ஆண்டின் 3.9% கொண்ட வீழ்ச்சியிலிருந்து ஓரளவு மீண்டது. 2002 இன் இரண்டாம் காலாண்டில் இருந்து தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்த தொழிற்சாலை கைத்தொழில்களின் வெளியீடு 2001 இன் பின்னரை பகுதியில் மீண்டும் வேகமாக வளர்ச்சி அடையத் தொடங்கியது. இம் மீட்சிக்கு முக்கிய உதவு காரணிகளாக 2002இன் பின் அரை ஆண்டு காலப் பகுதியின் உலகளாவிய சந்தையில் காணப்பட்ட படிப்படியான முன்னேற்றத்தின் உதவியுடன் பெறப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த ஏற்றுமதிக் கட்டளைகள் நுகர்வோர் நம்பிக்கை மேம்பட்டமையை பிரதிபலிக்கின்ற வகையில் உள்நாட்டு கேள்வியில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் 2002 நடுப்பகுதியில் இருந்து மின்வெட்டு முடிவுற்றமை ஆகிய காரணிகள் அடிப்படையாக விளங்கின.

## கைத்தொழில் கொள்கை

## Industrial Policies

இலங்கையில் கைத்தொழில் கொள்கை ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட தனியார்துறை கைத்தொழிலாக விளங்குகின்றது. இக்கொள்கை பின்வரும் நோக்கங்களை உள்ளடக்கியதாக விளங்குகின்றது.

* கைத்தொழில் அடிப்படையை விரிவுபடுத்தல்
* பன்முகப்படுத்தலும் விரிவாக்கலும்
* பௌதீக, மனிதசக்தி வளங்களை சிறப்பாக முகாமை செய்தல்.
* புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதலும் வருமான மட்டத்தை உயர்த்தலும்.
* ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில்களை ஊக்குவித்தல்.
* பிரதேச மட்டத்திலும் கைத்தொழில்களை பரவாக்குதல்.

அரச கைத்தொழில் கொள்கை பிரதானமாக தனியார் துறை "வளர்ச்சி பொறி" என கருதப்பட்டது. இதனால் கைத்தொழில் துறை தொடர்பான கொள்கை வகுப்பதில், இணைப்பதில், தயாரிப்பதில் தனியாரும் கட்டாய பங்காளிகளாக்கப் பட்டனர். கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான ஆலோசனை துறையின் விமர்சன துறைகளில் அரசதுறை, தனியார் துறைகளில் அனுபவம் வாய்ந்தவர்களும் நியமிக்கப்பட்டனர்.

கொள்கை வகுத்தல், திட்டமிடல், பிரச்சினைகளைத் தீர்த்தல், அரசுக்கு ஆலோசனை வழங்குதல் செயல்திட்டங்களின் நடைமுறை செயற்பாட்டை, விமர்சனம் செய்தல் புதிய கொள்கைகளை சிபார்சு செய்தல், போன்ற விடயங்கள் இக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன.

## கைத்தொழில்களின் வகைகள்

## (Types of Industries)

ஆரம்பத்தில் முதன்நிலை, இரண்டாம் நிலை கைத்தொழில்கள் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைப்படுத்தலுக்கும் மேலாக தற்போது கைத்தொழில்களின் அளவை அடிப்ப டையாக கொண்டு கைத்தொழில்களை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்:

1. பேரளவு கைத்தொழில்கள்
   (Large Scale Industries)
2. நடுத்தர அளவு கைத்தொழில்கள்
   (Medium Scale Industries)
3. சிற்றளவு கைத்தொழில்கள்
   (Small Scale Industries)

மேற்காட்டப்பட்ட வகைப்படுத்தலுக்கு பொதுவாக பயன்படுத்தக் கூடிய அளவு கோல் எதுவும் இல்லை. இருந்த போதி லும் சர்வதேச அளவில் பல்வேறு நிறு வனங்களும் அமைப்புக்களும் சில அள வீட்டு முறைகளை முன்வைத்துள்ளன.

இவை அளவு ரீதியான காரணிகள், பண்பு ரீதியான காரணிகள் என இரு வகைப்படும்.

## அளவு ரீதியான காரணிகள்

* ஈடுபடுத்திய மூலதன அளவு
* பணியாற்றும் ஊழியர் எண்ணிக்கை
* நிலையான சொத்துக்களின் பெறுமதி
* உற்பத்தி இயலளவு
* வருடாந்த புரள்வு
* பயன்படுத்தபடும் சக்தியின் அளவு

## பண்பு ரீதியான காரணிகள்

* வணிக அமைப்பு முறைமை
* பயன்படுத்தபடும் தொழில்நுட்பம்
* வணிகத்தின் தன்மை
* பயன்படுத்தும் முகாமை தொழில் நுட்ப முறை
* சந்தையின் தன்மை

கைத்தொழில் கொள்கையின் அடிப்படையில் சலுகைகளை வழங்கும் நோக்கத்துடனேயே கைத்தொழில்கள் அளவின் அடிப்படை மூலம் சிற்றளவு, நடுத்தர அளவு, பாரிய அளவு என பாகு படுத்தப்படுகின்றன. நாடுகளின் அபி விருத்திக்கு சிறிய நடுத்தர அளவு கைத் தொழில்களே பெரிதும் உதவுகின்றன. இலங்கை பின்வரும் காரணங்களால் சிறிய, நடுத்தர கைத்தொழில் துறைக ளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

* பிரதேச ரீதியாக பரந்து காணப்படும் வளங்களைப் பயன்படுத்தல்.
* உழைப்பை அதிகமாகப் பயன்படுத்து வதன் மூலம் வேலையின்மையின் மட் டத்தை குறைத்தல்.
* குறைந்த மூலதன முதலீட்டுடன் ஆரம் பிக்க முடிதல்.
* சிற்றளவு மட்டத்தில் ஆரம்பிக்க முடிதல்.
* குறைந்த இலகுவான தொழில்நுட்பத் தில் ஆரம்பிக்க முடிதல்.
* இயந்திர உபகரணம், தொழில் நுட்பம் என்பவற்றுக்காக பெருமளவு வெளி நாட்டு செலாவணி அவசியமாயிருத் தல்.

## கைத்தொழில் துறையின் வளர்ச்சி (Industrial Growth)

இலங்கையின் கைத்தொழில் தொடர்பான செயற்பாடுகளை இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை மூலம் அறி யலாம். இலங்கை கைத்தொழில்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்க ளிப்பு அதன் வேலைவாய்ப்பு பங்களிப்பு கைத்தொழில் கொள்கை போன்றவை பற்றிய விளக்கங்களுடன் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுவதற்கும் விளக் கங்களை மேலும் தெளிவுபடுத்தவும் அவை உதவும். இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் கைத்தொழில் துறை பின்வரும் தலைப்புகளாக வகுத்து விளக் கப்பட்டுள்ளது.

* தனியார் துறை செயற்பாடு
* அரசதுறை செயற்பாடு
* கைத்தொழில் துறை வேலைவாய்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* முதலீடு
* கைத்தொழிலுக்கான கடன்
* கைத்தொழில் கொள்கை
* கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட நிதி உதவிகள்.

## தனியார்துறை கைத்தொழில்கள்

இலங்கையில் தனியார்துறை கைத்தொழில்களின் வெளியீடு 2001ம் ஆண்டின் 3.7% கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2002ம் ஆண்டு 2.5% இனால் வளர்ச்சி அடைந்தது. முதலீட்டு சபை கைத்தொழில்களின் வெளியீடு நேரெதிராக மாற்றமடைந்து 1% வளர்ச்சியைக் கொண்டிருந்ததாயினும் முன்னைய ஆண்டின் 7.5% கொண்ட வீழ்ச்சியில் இருந்து இன்னமும் சிறிதளவே மீட்சி அடைந்தது. உலோகமல்லா கனிபொருளின் உற்பத்திகள், இரசாயன இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், மற்றும் உருவமைக்க மட்ட உலோக உற்பத்திகள் ஆகிய கைத்தொழில் வகைகளின் உற்பத்திகள் 2002இல் விரிவடைந்துள்ளது.

## அரசதுறை கைத்தொழில்கள்

இலங்கையின் 2002ம் ஆண்டின் உண்மை நியதிகளில் அரசதுறை கைத்தொழில்களின் வெளியீடு 2001ம் ஆண்டின் 11.3% கொண்ட வீழ்ச்சியிலிருந்து ஓரளவிற்கு மீண்டு 7.5% வளர்ச்சியை எய்தியது. அரசதுறை கைத்தொழில் வெளியீட்டினால் 90% மேல் வகை கூறும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வெளியீடு 2002இல் 8.5% அதிகரித்துள்ளது.

## இலங்கையில் ஆடை கைத்தொழில்களின் எதிர்கால அறை கூவல்கள்.

இலங்கையில் கடந்த இரு தசாப்த காலங்களாக ஆடைக் கைத்தொழில் விரைவாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. இதற்கு

* அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தாராள சந்தை கொள்கைகள்:
* அனுமதி பங்கின் கிடைப்பனவு
* கைத்தொழிலில் வெளிநாட்டு பங்கேற்பு
* குறைந்த செலவில் தொழிலாளர் கிடைப்பனவு

போன்ற காரணங்களால் இலங்கைக்கு ஆடைக் கைத்தொழில் சாதகமாக அமைகின்றது. 2002இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.3% ஆக ஆடைக் கைத்தொழில் அமைந்ததுடன் இது 330,000 மேலதிகமான நேரடி தொழில் வாய்ப்புகளை வழங்குவதுடன் இதற்கு 1000க்குப் மேற்பட்ட பாரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளும் இலங்கையில் காணப்படுகின்றன.

கடந்த இரு தசாப்தங்களின் வளர்ச்சியின் பின்னர் கைத்தொழில் இப்போது பல அறைகூவல்களை எதிர்நோக்குகின்றது. 2005ம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட அனுமதி பங்கு முறை முடிவுக்குக் கொண்டு வரப்படுவதானது முக்கிய அறைகூவலாக அமைவதுடன் சீனாவிலிருந்தான அதிகரித்த போட்டி வர்த்தக திசை திருப்பலால் ஏற்படும். எதிர் வர்த்தக கூட்டமைப்புக்களின் விரிவாக்கம் சர்வதேச சந்தையில் தாழ்ந்த உற்பத்தி செலவு, தயாரிப்பாளர்களின் நுழைவு என்பன அமையும் என கூறமுடியும்.

***Reference:***

(1) Business Studies Part I - Jegath Bandarnayake

(2) Central Bank Report - 2002

(3) Study Guide - Part II

***R. Nirgehan***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கக் கிரயவியலும் எல்லைக் கிரயவியலும்
# Absorption Costing and Marginal Costing

**அறிமுகம்:**

நிறுவனங்கள் உற்பத்திப் பொருட் களை அல்லது சேவைகளை உற்பத்தி செய்யும் போது இரு வேறுபட்ட செலவு கள் ஏற்படுகின்றன. அவையாவன:

01. நேர் செலவுகள் Direct Costs
02. நேரில் செலவுகள் Indirect Costs

நேர் செலவுகள் என்பது உற் பத்தியின் பொருட்டு நேரடியாக ஏற்பட்டுக் கொள்ளும் செலவுகளாகும். அதனால் நேரில் செலவுகள் என்பது உற்பத்தி, விற் பனையின் பொருட்டு மறைமுகமாக ஏற் படும் செலவுகளாகும். ஒரு அலகு உற் பத்திப் பொருள் அல்லது சேவைகளின் கிரயத்தினை மதிப்பீடு செய்யும் போது இந்நேரில் செலவுகள் எவ்வாறு கணிப் பீட்டிற்கு உட்படுத்துவது என்பது தொடர் பாக விளக்கப்படும். இரு வேறுபட்ட கோட்பாடுகள் உள்ளடக்க கிரயவியலும் (Absorption Costing) எல்லைக் கிரய லியலும் (Marginal Costing) ஆகும். இக் கிரயவியல் கோட்பாடுகள் எவ்வாறு பின் பற்றப்படுகின்றன என்பதையும் இக் கோட் பாடுகளுக்கிடையிலான ஒப்பீட்டினையும் விளக்குவதாக இக் கட்டுரை அமை கின்றது.

## உள்ளடக்கக் கிரயவியல் (Absorption Costing)

உள்ளடக்கக் கிரயவியலானது ஒரு நிறுவனத்தில் ஏற்படும் மேந்தலைச் செலவுகளை அதாவது நேரில் செலவு களை அந்நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்கள், சேவைகளின் உற்பத்திக் கிரயத்தினுள் உள்ளடக்குவதை நோக்கமாகக் கொண் டது. இம் மேந்தலைகளை வெளியீட்டின் அலகுகளுக்குத் தாக்கல் செய்யும் போது பிரதானமாக மூன்று படிமுறைகள் பின்பற் றப்படுகின்றன.

01. ஒதுக்குதல் (Allocation)
02. பகிர்ந்தளித்தல் (Apportionment)
03. உள்ளடக்குதல் (Absorption)

### ஒதுக்குதல் Allocation

ஒரு செலவு நிலையத்திற்கு நேர டியாக ஏற்படும் செலவு ஆயின் அச் செலவு இந் நிலையத்திற்கே தாக்கல் செய்வதனை இப்படிமுறை குறிக்கின்றது. உதாரணமாக உற்பத்தி மேந்தலைகள் உற்பத்தித் திணைக்களத்திற்கும், நிர்வாக மேந்தலைகள் நிர்வாகத் திணைக்களத்திற்கும், களஞ்சிய மேந்த லைகள் களஞ்சியத் திணைக்களத் திற்கும் தாக்கல் செய்யப்படும்.

### பகிர்ந்தளித்தல் Apportionment

ஒரு செலவு நிலையத்திற்கு நேர டியாகத் தாக்கல் செய்யப்பட முடியாத மேந்தலைச் செலவுகள் ஆயின் பொருத் தமான சில அடிப்படையில் தொடர்புடைய செலவு நிலையங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படுவதை இப்படிமுறை குறிக்கின்றது.

ஒரு உற்பத்தி நிறுவனமானது உற்பத்தித் திணைக்களங்களையும், சேவைத் திணைக்களங்களையும் கொண் டதாக அமைந்துள்ள போதும், உற்பத்தித் திணைக்களங்களே உற்பத்தியுடன் நேரடி யாகத் தொடர்புபடுகின்றன. சேவைத் திணைக்களங்கள் அவ்வாறு தொடர்பு படுவதில்லை. எனவே உற்பத்தி மேந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைச் செலவுகள் பொருட்கள் சேவைகளினது அலகுச் செலவினுள் உள்ளடக்கப்படல் வேண்டும். எனவே இவை ஒரு பொருத்தமான அடிப்படையில் உற்பத்தித் திணைக்களத்திற்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இவ்வாறு சேவைத்திணைக்கள மேந்தலைச் செலவுகள் உற்பத்தித் திணைக்களத்தினுள் பகிர்ந்தளிப்பதற்கு இரு முறைகள் பின்பற்றப் படுகின்றன.

**முறை I**

ஒரு சேவைத் திணைக்களத்தின் மேந்தலைச் செலவுகளை உற்பத்தித் திணைக்களத்திற்கு மட்டும் பகிரப்படல் ஆகும். இம் முறையில் சேவைத்திணைக களம் ஒன்றிடமிருந்து இன்னோர் சேவைத் திணைக்களம் சேவை எதனையும் பெறவில்லை எனவும், தனியே உற்பத்தித் திணைக்களங்கள் மட்டுமே சேவையைப் பெற்றதாக எடுகோள் கொள்ளப்படும்.

**முறை II**

ஒரு சேவைத் திணைக்களத்தின் மேந்தலைச் செலவுகளை உற்பத்தித் திணைக்களத்திற்கும், ஏனைய சேவைத் திணைக்களத்திற்கும் பகிர்ந்தளிக்கப் படல் ஆகும். இம்முறையின் கீழ் சேவைத் திணைக்கள மேந்தலைச் செலவுகளைப் பகிரும்போது இரு முறைகள் பின்பற்றப் படுகின்றன.

i. மேந்தலைப் பகிர்வு கூற்று தயாரித்தல்
ii. அட்சர கணித முறை

## உள்ளடக்கம் (Absorption)

ஒரு உற்பத்திச் செலவு நிலையத்திற்குரிய மொத்த மேந்தலைச் செலவுகள் அச்செலவு நிலையத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், சேவைகளின் உற்பத்திக் கிரயத்தினுள் உள்ளடக்கப்படும். இங்கு பொருத்தமான மேந்தலை உள்ளடக்க வீதங்களை (Overhead Absorption Rates) அடிப்படையாகக் கொண்டு மேந்தலைச் செலவுகள் உள்ளடக்கப்படும். ஒவ்வொரு செலவு நிலையத்திற்கும் தனித்தனி மேந்தலை உள்ளடக்க வீதங்கள் பயன்படுத்தப் படும்.

வழமையில் மேந்தலைச் செலவுகள் உண்மைச் செலவுகளின் அடிப்படையில் உள்ளடக்கப்படுவதில்லை. மாறாக மதிப்பிடப்பட்ட அடிப்படையில் உள்ளடக்கப்படுகின்றன. அதாவது முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட மேந்தலை உள்ளடக்க வீதங்களே (Pre-determined Overhead Absorption Rate) பயன்படுத்தப்படும். இதனால் மேந்தலை உள்ளடக்க வீதங்கள் குறிப்பிட்ட நிதியாண்டின் தொடக்கத்திலேயே மதிப்பிடப்பட்டு மேந்தலைகள் உள்ளடக்கப்படும். ஏனெனில் உற்பத்தித் திணைக்களங்களுக்கு ஏற்படும் உண்மையான மேந்தலைச் செலவின் பெறுமதி குறித்த நிதியாண்டில் இறுதியிலேயே அறிந்து கொள்ள முடிவதால், அதுவரை காத்திருப்பது விலை நிர்ணயத்திற்கு கால தாமதத்தை ஏற்படுத்தும். முன்கூட்டிய மேந்தலை உள்ளடக்க வீதம் பின்வருமாறு கணிப்பிடப் படும்:

$$\text{முன்கூட்டித் தீர்மானிக்கப்பட்ட மேந்தலை உள்ளடக்க வீதம்} = \frac{\text{(பாதீட்டு அடிப்படையில் குறித்த உற்பத்தி செலவு நிலையத்துக்கான மொத்த மேந்தலை)}}{\text{(பொருத்தமான உள்ளடக்க பாதீட்டு அளவு).}}$$

பொதுவாக பின்வரும் அடிப்படைகளில் மேந்தலை உள்ளடக்கப்படும்.

01. இயந்திர மணிமுறை
(Machine House Method)
02. ஊழிய மணிமுறை
(Labour House Method)
03. உற்பத்தி அலகுமுறை
(Production Unit Method)
04. மூலப்பொருட் செலவின் விகிதாசார முறை
(Percentage of Direct Medical Cost Method)
05. நேர் கூலிச் செலவு வீதாசார முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Percentage of Direct Labour Cost Method)

06. மூலச் செலவின் வீதாசார முறை (Percentage of Prima Cost Method)

07. விற்பனையின் விகிதசார முறை (Percentage of Sates Method)

## மிகை உள்ளடக்கமும் குறை உள்ளடக்கமும்
## Over Absorption and Under Absorption

வழமையில் முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட மேந்தலை உள்ளடக்க வீதத்தை அடிப்படையில் கொண்டு மேந்தலைகள் உள்ளடக்கப்படும். ஆனால் உள்ளடக்கப்படும் மேந்தலைச் செலவுகள் குறித்த காலப்பகுதியில் உண்மையில் ஏற்பட்ட மேந்தலைக் செலவுகளை விட கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ காணப்படலாம். உள்ளடக்கப்பட்ட மேந்தலையை விட ஏற்பட்ட மேற்தலை குறைவு எனின் கூடுதல் உள்ளடக்கம் எனவும் உள்ளடக்கப்பட்ட மேந்தலையை விட ஏற்பட்ட மேந்தலை உயர்வாகக் காணப்படின் குறைவு உள்ளடக்கம் எனவும் அழைக்கப்படும். இலாப நட்டக் கணக்கினைத் தயாரிக்கும் போது இது தொடர்பான சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

## உள்ளகக் கிரயவியலின் நன்மைகள்
## Advantage of Absorption Costing

1. கால அடிப்படையில் விற்பனை தளம்பலாகும் போது அறிக்கையிட சிறந்த முறையாகக் காணப்படுகின்றது.

2. எல்லைக் கிரயவியலானது முழு உற்பத்தி இயலளவும் பயன்படுத்தப்படுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டத் தவறுகின்றது. உள்ளடக்க கிரயவியலில் உயர்ந்த உற்பத்தித் தொகையானது அலகிற்கான நிலையான கிரயத்தைக் குறைக்குமாதலால் அலகுச் செலவைக் குறைக்கின்றது. அத்துடன் விற்பனை விலையும் கிரயத்துடன் கூட்டிய விலையிடல் முறையாக இருப்பின், செலவுக்கும் விலைக்கும் விற்பனைக் கேள்விக்கும் வெளியீட்டு இயலளவு பொருந்தக் கூடியதாக இருக்க முடியும்.

3. எல்லைக் கிரயவியலை அடிப்படையில் கொண்ட விற்பனை விலைகள் நிறுவனத்தின் உற்பத்திப் பொருளின் ஒவ்வொரு அலகையும் விற்பனை செய்வதன் மூலம் பங்களிப்பை மட்டுமே உழைக்க முடியும். ஆனால் மொத்தப் பங்களிப்பானது நிலையான செலவை ஈடுசெய்யப் போவதாகக் காணப்படலாம்.

4. நீண்ட காலத்தில் எல்லைச் செலவுகளும் மாறும் செலவுகள் ஆகும். உள்ளடக்கக் கிரயவியலை அடிப்படையாகக் கொண்ட இருப்பு மதிப்பீடுகள் இத்தகைய நீண்டகால மாறும் செலவுகள் மீதான கவனத்தை ஈர்க்கும்.

உதாரணம்:-

சக்தி லிமிட்டெட் X,Y எனும் உற்பத்தித் திணைக்களங்களையும், A.B எனும் இரு சேவைத் திணைக்களங்களையும் கொண்டுள்ளது. 2002ம் ஆண்டின் ஆரம்பத்தில் அவ் ஆண்டுக்கான பாதீடு செய்யப்பட்டது X திணைக்கள மேந்தலைச் செலவு ரூபா. 18,000 ஆகவும், Y திணைக்கள மேந்தலைச் செலவு ரூபா. 15,000 எனவும் காணப்பட்டது. மேலும் X திணைக்கள மேந்தலைச் செலவுகள் இயந்திர மணி முறையிலும், Y திணைக்கள மேந்தலைச் செலவுகள் ஊழிய மணி முறையிலும் உள்ளடக்கப்படுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாதீட்டின்படி 2002ம் ஆண்டுக்கான இயந்திர மணித்தியாலங்கள் 600 மணித்தியாலங்கள் என மதிப்பிடப்பட்டது. 2002ம் ஆண்டு காலப் பகுதியில் திணைக்களம் 584 மணிகளுடன் இயங்கின. குறித்த காலப் பகுதியில் ஏற்பட்ட மேந்தலைகளின் விபரம் வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விபரம் | x திணைக்களம் | y திணைக்களம் | A திணைக்களம் | B திணைக்களம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நேரில் கூலி | 4000 | 6000 | 2000 | 400 | 12400 |
| நேரில் மூலப்பொருள் | 6000 | 1800 | 4000 | 6000 | 17800 |
| வாடகை | | | | | 4200 |
| நிலப்பரப்பு | 12000 | 8000 | 16000 | 6000 | 41000 |

பாதீடு தயாரிக்கும் போது சேவைத் திணைக்கள மேந்தலைகள் பின்வரும் அடிப்படையில் பகிரப்பட்டன.

| விபரம் | x திணைக்களம் | y திணைக்களம் | A திணைக்களம் | B திணைக்களம் |
|---|---|---|---|---|
| A திணைக்கள மேந்தலைகள் | 60% | 30% | | 10% |
| B திணைக்கள மேந்தலைகள் | 30% | 50% | 20% | |

மேந்தலை கூடுதல் / குறைதல் உள்ளடக்கங்களை ஒவ்வொரு திணைக்களங்கள் ரீதியாகவும் மொத்தமாகவும் மதிப்பிடுக.

**படிமுறை I**

மேந்தலை உள்ளடக்க வீதம் கணிப்பிடல்

| | | x திணைக்களம் | y திணைக்களம் |
|---|---|---|---|
| மேந்தலை உள்ளடக்க வீதம் (ஒரு மணிக்கு) | = | $\frac{18000}{600}$ | $\frac{15000}{6000}$ |
| | = | ரூ. 30 | ரூ. 2.50 |

**படிமுறை II**

உள்ளடக்கப்பட்ட மேந்தலை கணிப்பிடல்

| | | x திணைக்களம் | y திணைக்களம் |
|---|---|---|---|
| | = | 30 x 584 | 2.50 x 6200 |
| உள்ளடக்கப்பட்ட மேந்தலைகள் | = | 17520 | 15500 |

**படிமுறை III**

| செலவு | பகிர்வு அடிப்படை | மொத்தம் | x திணைக்களம் | y திணைக்களம் | A திணைக்களம் | B திணைக்களம் |
|---|---|---|---|---|---|---|
| நேரில் கூலிகள் | ஒதுக்கல் | 12400 | 4000 | 6000 | 2000 | 400 |
| நேரில் மூலப்பொருள் | ஒதுக்கல் | 17800 | 6000 | 1800 | 4000 | 6000 |
| வாடகை | நிலப்பரப்பு | 4200 | 1200 | 800 | 1600 | 600 |
| | | 34400 | 11200 | 8600 | 7600 | 7000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படிமுறை IV

M - B திணைக்கள செலவு தாக்கல் செய்த பின்னரான
A திணைக்கள மொத்த மேந்தலைச் செலவுகள்

H - A திணைக்கள செலவு தாக்கல் செய்த பின்னரான
B திணைக்கள மொத்த மேந்தலைச் செலவுகள்

$M = 7600 + 0.2H$ ................ (1)

$H = 7000 + 0.1H$ ................ (2)

(2) x 10   $10H = 70000 + m$

$m = 10H - 70m$ .............(3)

$10H - 70000 = 7600 + 0.2H$

$9.8H = 77600$

$H = 7918$

H = 7918 ஐ சமன்பாடு (1) இல் பிரதியிடின்

$m = 9184$

## படிமுறை V

| செலவு | பகிர்வு அடிப்படை | x திணைக்களம் | y திணைக்களம் | A திணைக்களம் | B திணைக்களம் |
|---|---|---|---|---|---|
| மேந்தலை | | 11200 | 8600 | 7600 | 700 |
| A திணைக்கள மேந்தலை மீள்பகிர்வு | உள்ளடக்கம் | 5510 | 2756 | (9184) | 918 |
| B திணைக்கள மேந்தலை மீள்பகிர்வு | உள்ளடக்கம் | 2376 | 3958 | 1584 | (7918) |
| | | 19086 | 15314 | ⊙ | ⊙ |

## படிமுறை VI

கூடுதல் / குறைதல் உள்ளடக்கம் கணிப்பிடல்

| | x திணைக்களம் | y திணைக்களம் |
|---|---|---|
| உள்ளடக்கப்பட்ட மேந்தலை | 17520 | 15500 |
| உண்மை மேந்தலை | 19086 | 15314 |
| | (1566) | 186 |
| | குறைவு உள்ளடக்கம் | கூடுதல் உள்ளடக்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லைக் கிரயவியல்
## (Marginal Costing)

எல்லைக் கிரயமும் மாறும் செலவும் ஒன்றுக்கொன்று பிரதியீடாகப் பயன்படுத்தப்படும் போக்குடையன. எல்லைக் கிரயவியலில் மாறும் செலவுகள் ஒரு காலப் பகுதிக்கான விற்பனையுடன் பங்களிப்பு எனும் ஒரு முக்கிய வினைத்திறன் அளவு கோலை வேறுபடுத்துவதற்காக தொடர்புபடுத்தப்படுகின்றன. எல்லைக் கிரயவியலை பின்வருமாறு வரையறுக்கலாம். மாறும் செலவுகள் கிரய அலகுகளுக்கு சாட்டுதல் செய்யப்படும். அதே வேளை நிலையான செலவுகள் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கான கிரயங்களாகக் கருதப்பட்டு குறிப்பிட்ட காலப் பகுதியின் பங்களிப்பிற்கெதிராக தாக்கல் செய்யப்படும் ஒரு கிரயவியல் முறைமை இதுவாகும்.

## பங்களிப்பு
## (Contribution)

பங்களிப்பு என்பது இலாபத்திற்கும் நிலையான செலவிற்கும் பங்களிப்புச் செய்வதாக கருதப்படுகின்றது. அதாவது பங்களிப்பிலிருந்து குறிப்பிட்ட காலப் பகுதிக்கான நிலையான செலவுகளைக் கழிப்பதன் மூலம் குறிப்பிட்ட காலப்பகுதிக்கான இலாபம் பெறப்படுகின்றது. பங்களிப்பு பின்வருமாறு பெற்றுக் கொள்ளப்படும்:

பங்களிப்பு = விற்பனைப் பெறுமதி - மாறும் செலவுகள்

Contribution = Sales Value - Variable Costs

## எல்லைக் கிரயம்
## Marginal Cost

ஒரு பொருளின் எல்லைக் கிரயம் என்பது அப்பொருளை உற்பத்தி செய்வதால் ஏற்படும் மாறும் செலவுகளான நேர் மூலப்பொருள் (Direct Material) நேர் கூலி (Direct Labour) நேர் ஏனைய செலவுகள் (Direct Other Cost) மாறும் மேந்தலைச் செலவுகள் (Variable Overheads) என்பவற்றின் கூட்டுத் தொகை யாகும்.

## எல்லைக் கிரயவியலுக்கும் உள்ளடக்கக் கிரயவியலுக்கும் இடையிலான வேறுபாடுகள்
## [The Differences between Marginal Costing and Absorption Costing]

1. எல்லைக் கிரயவியலானது நிலையான மற்றும் மாறும் செலவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதேவேளை உள்ளடக்கக் கிரயவியலானது இவ் வேறுபடுத்தலுக்கு முக்கியத்துவம் வழங்குவதில்லை.

2. எல்லைக் கிரயவியலானது உற்பத்திக் கிரயத்தினுள் மாறும் செலவினை மட்டும் உள்ளடக்கும் அதே வேளை உள்ளடக்கக் கிரயவியலானது நிலையான மாறும் செலவுகளை உற்பத்திக் கிரயத்தினுள் உள்ளடக்குகின்றது.

3. எனவே எல்லைக் கிரயவியல் மூலமான இருப்புக் கணிப்பீடு மாறும் செலவினைமட்டும் கொண்டிருக்கும். உள்ளடக்கக் கிரயவியல் மூலமான இருப்பு கணிப்பீடு மாறும், நிலையான செலவுகளையும் உள்ளடக்குவதால் குறிப்பிட்ட காலப்பகுதிக்கான இலாபமும் இவ் இரு கிரய முறையிலும் வேறுபடும்.

## எல்லைக் கிரயவியலின் நன்மைகள்
## Advantages of Marginal Costing

1. இக் கிரயவியல் முறையானது நிலையான மேந்தலைச் செலவுகள் தொடர்பில் உள்ளடக்க கிரயவியலில் பின்பற்றும் செய்முறைகளான ஒதுக்கீடு, பகிர்வு, உள்ளடக்கம் என்பவற்றை தவிர்க்கின்றது.

2. எல்லைக் கிரயவியலானது விற்பனை அளவில் ஏற்படும் மாற்றத்தால் இலாபத்தில் ஏற்படும் தாக்கத்தை தெளிவாகக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உள்ளடக்கக் கிரயவியல் முறைமையில், குறித்த காலப் பகுதிக்கான நிலையான செலவில் ஒரு பகுதி இறுதியிருப்பினுள் உள்ளடக்கப்படுவதன் மூலம் அச் செலவினை அடுத்த காலப்பகுதிக்கு மாற்றப்படுகின்றது. ஆனால் எல்லைக் கிரயவியலில் குறித்த காலப்பகுதியில் ஏற்பட்ட மொத்த நிலையான செலவும் அக் காலப் பகுதியிலேயே பதிவழிக்கப்படுகின்றது. இது ஓர் சிறப்பான அம்சமாகும்.

4. செயற்திறனின் ஒரு மதிப்பீடாகக் காணப்படும் பங்களிப்பின் பயன்பாடானது நிலையான செலவினது பகிர்ந்தளித்தல் பிரச்சனையால் ஏற்படும் சந்தேகத்தைக்களைகின்றது. அத்துடன் தீர்மானமெடுத்தலில் அதிக உண்மைத்தன்மை வாய்ந்த அளவீட்டை உள்ளடக்குகின்றது.

உதாரணம்:

ஒரு கம்பனி ஒரு அலகினை ரூபா 50ஐ விற்பனை விலையாகக் கொண்ட ஒரு பொருளை உற்பத்தி விற்பனை செய்கின்றது. அக்கம்பனியில் மே மாத இறுதியில் எந்த இருப்புகளும் இருக்கவில்லை. ஏனைய தகவல்கள் வருமாறு:

| நியமச் செலவுகள் (அலகிற்கு) | ரூபா |
|---|---|
| நேர் மூலப்பொருள் | 18 |
| நேர் கூலிகள் | 4 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 3 |

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உண்மையான செலவுகள் (மாதத்திற்கு)

| | |
|---|---|
| நிலையான உற்பத்தி மேந்தலைகள் | 99000 |
| நிலையான விற்பனை செலவுகள் | 14000 |
| நிலையான நிர்வாக செலவுகள் | 26000 |

மாறும் விற்பனைச் செலவுகள் விற்பனைப் பெறுமதியில் 10% ஆகும். நிறுவனத்தின் மாதாந்த சராசரி உற்பத்தி 11000 அலகுகள்.

குறிப்பிட்ட மாதத்தில் உற்பத்தி விற்பனை செய்யப்பட்ட அலகுகளின் விபரம் வருமாறு:

| | யூன்(அலகுகள்) | யூலை (அலகுகள்) |
|---|---|---|
| விற்பனைகள் | 12800 | 11000 |
| கொள்வனவுகள் | 14000 | 10200 |

## வேண்டப்படுவது:

(i) எல்லைக் கிரயவியல், உள்ளடக்கக் கிரயவியல் ஆகிய கொள்கைகளின் கீழ் யூன், யூலை மாத இலாபக் கூற்றை தனித்தனியே தயாரிக்கவும்,

(ii) இரு முறையிலும் ஏற்பட்ட இலாபங்களை இணங்காண வைக்கும் இணக்கக் கூற்றைத் தயாரிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லைக் கிரயவியலின் அடிப்படையில் இலாபக் கூற்று

| | யூன் | | யூலை | |
|---|---|---|---|---|
| விற்பனைகள் (12800X50) (11000 X 50) | | 640 000 | | 550 000 |
| கழி: விற்பனைக்கான மாறும் செலவுகள் | | | | |
| ஆரம்ப இருப்பு | | | 30 000 | |
| மாறும் உற்பத்திச் செலவுகள் | 350 000 | | 255 000 | |
| (14000 X 25) (10200 X 25) | 350 000 | | 285 000 | |
| இறுதி இருப்பு | | | | |
| (1200 x 25) (400 x 25) | (30 000) | | (10 000) | |
| | 320 000 | | 275 000 | |
| விற்பனைகளின் மாறும் உற்பத்திச் செலவு | | | | |
| மாறும் விற்பனைச் செலவுகள் | 64 000 | | 55 000 | 330 000 |
| விற்பனைகளின் மாறும் செலவுகள் | 384 000 | | | |
| பங்களிப்பு | 256 000 | | | 220 000 |
| கழி: நிலையான மேந்தலைச் செலவுகள் | | | | |
| நிலையான உற்பத்தி மேந்தலைகள் | 9 900 | | 99 000 | |
| நிலையான விற்பனைச் செலவுகள் | 14 000 | | 14 000 | |
| நிலையான நிர்வாகம் | 26 000 | | 26 000 | |
| | | 139 000 | | 139 000 |
| தேறிய இலாபம் | | 117 000 | | 81 000 |

## உள்ளடக்கக் கிரயவியலின் அடிப்படையில் இலாபக் கூற்று

| | யூன் | | யூலை | |
|---|---|---|---|---|
| விற்பனைகள் | | 640 000 | | 550 000 |
| கழி: விற்பனைக்கான முழு உற்பத்திச் செலவு | | | | |
| ஆரம்ப இருப்பு | | | 40 800 | |
| முழு உற்பத்திச் செலவு | 476 000 | | 346 800 | |
| (14000 X 34) (10200 X 34) | 476 000 | | 387 600 | |
| இறுதி இருப்பு | | | | |
| (1200 X 34) (400 X 34) | (40 800) | | (13 600) | |
| | 435 200 | | 374 000 | |
| மேந்தலை கூடுதல்/குறைதல் உள்ளடக்கம் | | | | |
| | (27 000) | | 7 200 | |
| | | (408 200) | | (381 200) |
| விற்பனைகளுக்கான முழு உற்பத்திச் செலவு | | 231 800 | | 168 800 |
| மொத்த இலாபம் | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கழி: விற்பனை நிர்வாகச் செலவுகள் | | |
| மாறும் விற்பனைச் செலவுகள் | 64 000 | 55 000 |
| நிலையான விற்பனைச் செலவுகள் | 14 000 | 14 000 |
| நிலையான நிர்வாகச் செலவுகள் | 26 000 | 26 000 |
| | (104 000) | (95 000) |
| தேறிய இலாபம் | 127 800 | 73 8000 |

நிலையான உற்பத்தி மேந்தலை (அலகுக்கு) = $\frac{99\ 000}{11\ 000}$ ரூபா 9

முழு உற்பத்திச் செலவு (அலகுக்கு) = மாறும் செலவு + நிலையான செலவு
= 9 + 25
= ரூபா 34

கூடுதல் அல்லது குறைவு மேந்தலை உள்ளடக்கம்
Over/Under Overhead Absorption

| | யூன் | யூலை |
|---|---|---|
| உள்ளடக்கப்பட்ட நிலையான உற்பத்தி மேந்தலை (14 000 X 9) (10 2000 X 9) | 126 000 | 91 800 |
| உண்மையாக ஏற்பட்ட நிலையான உற்பத்தி மேந்தலை | 99 000 | 99 000 |
| கூடுதல்/குறைவு உள்ளடக்கம் | 27 000 | 72 000 |

ii. இலாபங்களை இணங்க வைக்கும் கூற்று
Profit Reconciliation Statement

| | யூன் | யூலை |
|---|---|---|
| எல்லைக் கிரயவியலின்படி தேறிய இலாபம் | 117 000 | 81 000 |
| இருப்பினுள் காணப்படும் நிலையான மேந்தலைகளுக்கான சீராக்கம் | | |
| இருப்பு அதிகரிப்பு (1200 X 9) | 10 800 | |
| இருப்பு குறைவு (800 X 9) | | 7 200 |
| | 127 800 | 73 800 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எல்லைக் கிரயவியலை சுருக்கமாக பின்வருமாறு வெளிப்படுத்தலாம்:**

01. நிலையான செலவுகள் நிறுவனத்தின் உற்பத்தி விற்பனை அளவுகளுடன் தொடர்பற்றவை. எனவே நாம் ஒரு அலகினை மேலதிகமாக உற்பத்தி விற்பனை செய்யும் போது,

அ) வருமானமானது ஒரு அலகுக்கான விற்பனை விலையால் அதிகரிக்கும்.

ஆ). கிரயங்கள் ஒரு அலகுக்கான மாறும் கிரயத்தின் அளவால் அதிகரிக்கும்.

இ) எனவே இலாபமானது விற்பனை விலைக்கும் மாறும் கிரயத்திற்கும் இடையிலான வேறுபாட்டினால் அதிகரிக்கும்.

02. விற்பனை அளவு ஒரு அலகினால் வீழ்ச்சியடையுமாயின் இலாபம் ஒரு அலகுக்கான பங்களிப்பினால் வீழ்ச்சியடையும்.

## முடிவுரை

இக்கட்டுரையானது முகாமைக் கணக்கியலின் ஒரு பகுதியான கிரயக் கணக்கீட்டினுள் முக்கிய இடம் வகிக்கும் பகுதியான உள்ளடக்கக் கிரயவியல் மற்றும் எல்லைக் கிரயவியல் பற்றியும் குறிப்பாக அவற்றுக்கிடையிலான தொடர்புகள் அவை இலாபம் மீது கொண்டுள்ள தாக்கங்கள் பற்றியும் கூறியுள்ளது.

**உசாத்துணை நூல்கள்**


01. CIMA Management Accounting Fundamentals, First South Asian Edition 2003.

02. **Alan Pizzey** "Principles of Cost Accountancy" Fifth Edition, ELBS Edition Published 1987.

03. ரதிராணி ஜோகேந்திரராஜா "கிரயக் கணக்கியல் பாகம்" முதலாம் பதிப்பு, சங்கவி பதிப்பகம்.



**கி. அன்ரனி ஜோர்ஜ்ராஜன்**

உதவி விரிவுரையாளர்,
முகாமைத்துவக் கற்கைகள்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.



அன்பளிப்பு:

சிற்றி மெடிக்கல்ஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துவின் வரவிற்கு இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

தித்திக்கும் தின்பண்டங்களைத்

தினம்தினம்

சுவைத்து மகிழ்ந்திட



நாடவேண்டிய இடம்

**கல்யாண் கிறீம் ஹவுஸ்**

இல. 73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

வணிக மாணவர்களின் வளர்ச்சிக்காக வருகைதரும் வரவிற்கு இதமான நல்வாழ்த்துக்கள்!

**வெங்கடேஸ்வரா**

**VENKADESWARA**

சைக்கிள்



மற்றும்

சைக்கிள் உதிரிப்பாக

விற்பனையாளர்களின் முன்னோடிகள்

125.A, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

---

நாடு சிறக்க நவமலராக வெளிவரும் இந்துவின் 'வரவே' வளம் பெறுக!



யாழ்ப்பாணத்தில்

விளையாட்டு

உபகரணங்களின்

ஏக விநியோகஸ்தர்கள்

**யாழ் என்ரர்பிறைசர்**

516, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

---

நவமலர் "வரவு" மீண்டும் மீண்டும் மலரட்டும்!

சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகளிற்கும்

பருத்தி ஆடைகளிற்கும்

கைராசியான ஒரே ஸ்தாபனம்



**சீமாட்டி**

புடவைக் கடல்

இளஞ்சிட்டுக்களின் இதயம் கவர்ந்திடும்
இன்பமயச் சோலை

122, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணம் வீசும் வரவிற்கு மனமுவந்த நல்லாசிகள்

கோடை வெய்யிலின்



உஷ்ணத்தைத்

தீர்த்து

உங்களை உஷார்படுத்துபவள்

**மதுமி ஸ்நாக்**

அன்

**கூல் ஸ்பொட்**



133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சாதனை நாயகனாம் இந்துவின் வணிக மலர்
'வரவு' வளமாய் வருக!



இலங்கையின்

புத்தக சோலைகளின் ராஜா

**பூபாலசிங்கம் புத்தகசாலை**



44, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

வித்தாகி விருட்சமான இந்துவின் 'வரவிற்கு'
எங்கள் முத்தான நல்வாழ்த்துக்கள்!

நாள் முழுவதும்

சரீர புத்துணர்ச்சிக்கு



பக்க விளைவற்ற

ஒரே பானம்

இன்றே
வாங்கி அருந்துங்கள்

**சிறீஸ் கோப்பி**

133, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

With the best compliments from



**ARVEGIE MEDICALS**



**504, Hospital Road,
Jaffna.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறவிடமுடியாக்கடன், ஐயக்கடன் ஏற்பாடு, கடன்பட்டோர் கழிவு ஏற்பாடு

# BAD DEBITS, PROVISION FOR BAD DEBITS, PROVISION FOR DISCOUNT DEBTORS.

## 1.1 அறவிடமுடியாக்கடன்

அதிக வியாபார ஸ்தாபனங்களில் விற்பனைகள் கடன் அடிப்படையிலேயே பெருமளவில் நடைபெறுகின்றன. கடன் அடிப்படையில் பண்டங்களை விற்றவர் வாடிக்கையாளரிடம் இருந்து பணத்தை அறவிடமுடியாமையே அறவிடமுடியாக்கடன் ஆகும். இது ஓர் சாதாரண வியாபார அபாயமாதலால் அறவிடமுடியாக்கடன் ஓர் சாதாரண வியாபாரச் செலவுபோல் கருதப்பட்டு இலாப நட்டம் கணிப்பிடப்படும் காலத்தில் தாக்கல் செய்யப்படும்.

ஒரு கடன் எப்போது அறவிடமுடியாததாகக் கண்டுபிடிக்கப்படுமோ அப்போது அக்கடன் கடன்பட்டோர் கணக்கில் பெறுமதியற்றதாகிவிடும். அதற்கிணங்க சொத்துக் கணக்கில் இருந்து அக்கடன் நீக்கப்படவேண்டும். இது பின்வருமாறு செய்யப்படும். கடன்பட்டோர் கணக்கில் செலவுவைத்து அறவிடமுடியாத தொகையை நீக்கி அறவிடமுடியாக் கடன் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். சிலவேளைகளில் கடன்பட்டோரில் ஒரு பகுதி செலுத்தப்படுமாயின் செலுத்தப்படாத மீதிக் கடனை அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கவேண்டும். இறுதியில் அறவிடமுடியாக்கடன் கணக்கின். கூட்டுத் தொகை இலாபநட்டக் கணக்குக்கு மாற்றப்படும்

உதாரணம்

**பி. வஜி**

| | | | |
|---|---|---|---|
| 1.1 ஜனவரி | | | |
| விற்பனை | 50 | அ.மு.கடன் | 50 |

**கு. அருள்**

| | | | |
|---|---|---|---|
| செப் – 16 | | ஆகஸ்ட் – 17 | 200 |
| விற்பனை | 240 | டிசம் – 31 அ.மு.க | 40 |

**அறவிடமுடியாக்கடன்**

| | | | |
|---|---|---|---|
| பி. வஜி | 50 | அ/ந/க/கு | |
| கு. அருள் | 40 | மாற்றம் | 90 |
| | 90 | | 90 |

**31 டிசம் 20–3ல் முடிவடைந்த ஆண்டிற்கு இ/ந/க/கு**

| | | | |
|---|---|---|---|
| அ.மு.கடன் | 90 | | |

## ஐயக்கடன் ஏன் மேற்கொள்ளப்படுகின்றது?

வியாபாரக் காலத்தில் கடன் விற்பனையால் கடன்பட்டோரின் தொகை நீண்டகாலமாகவே பெறப்படாத சந்தர்ப்பத்தில் அது அறவிடமுடியாக் கடனாகக் கருதப்பட்டு ஏற்பாடு மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

எனவே, ஐயக்கடன் என்பது கடன்பட்டோரிடம் இருந்து பணத்தைப் பெறுவதில் சந்தேகிக்கப்படும் தொகையாகும். இதற்கு முன்கூட்டியே பதிவு மேற்கொள்வதே ஐயக்கடன் எற்பாடு ஆகும்.

கடன்பட்டோர் கணக்கின் கூட்டுத்தொகை ஐந்தொகையில் ஒரு சொத்தாகக் காட்டப்படும். இக்கடன்பட்டோர் முழுத்தொகையையும் செலுத்துவராயின் இக்கடன்பட்டோர் தொகை சரியான தொகையாகும். மாறாக சில கடன்பட்டோர் பணத்தைச் செலுத்தாவிடின் அத்தொகையால் ஐந்தொகையில் கடன்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோர் கூட்டிக்காட்டப்பட்டிருக்கும். கடன் பட்டோரில் யார் பணத்தை செலுத்தமாட் டார்கள் என்பதை அறிவதன் மூலம் நிறுவனம் சரியான கடன்பட்டோர் தொகையை பெறமுடியும். இந்த மதிப் பீட்டை பின்வருமாறு கணிப்பிட முடியும்:

1) ஒவ்வொரு கடன்பட்டோரையும் பார்த்து எது அறவிட முடியாக்கடன் எனத் தீர்மானித்தல்.

2) கடனின் என்ன வீதம் அறவிடமுடியாக் கடனாக ஏற்படும் என்பதனை நடை முறை அனுபவத்தைக் கொண்டு மதிப்பிடல்.

ஒரு கடன் நீண்டகாலமாக அற விடாது காணப்படின் அது பெரும்பாலும் அறவிடமுடியாக் கடனாக இருக்கலாம் என்பதை அறியலாம். சில நிறுவனங்கள் கால அடிப்படையில் அட்டவணையைத் தயாரித்து எவ்வளவு காலத்திற்கு கடன் கள் கொடுக்கப்படாதுள்ளது என்பதையும் அறியும். இதன்படி புதிய கடனிலும் பார்க்க பழைய கடனிற்கு கூடிய வீதத் தில் அறவிடமுடியாக்கடன் மதிப்பீடு மேற் கொள்ளப்படும்.

| உ+ம் | தொகை | அறவிடமுடியாக் கடன் வீதம் | ஐயக்கடன் ஏற்பாட்டு |
|---|---|---|---|
| மாதத்திலும் குறைந்தது | 5000 | 1 | 50 |
| 1மாதம் – 2மாதம் | 3000 | 3 | 90 |
| 2மாதம் – 3மாதம் | 800 | 4 | 32 |
| 3மாதம் – 1 வருடம் | 200 | 5 | 10 |
| 1வருடத்திலும் கூடியது | 160 | 20 | 32 |
| | 9160 | | 214 |

இவ்வாறு கணிப்பிடப்படும் ஐயக்கடன் எற்பாட்டுத் தொகையானது இலாபநட்டக் கணக்கில் வரவிலும் ஐயக்கடன் ஏற்பாட் டுக்கு கணக்கில் செலவிலும் பதியப்படும்.

31 டிசம்பர் 20 - 3 கடன்பட்டோர் தொகை 10000/= 2% மான கடன் (200/-) ஐயமாகும். இதற்கு ஏற்பாடு மேற்கொள்ளின் கணக்குகள் பின்வருமாறு அமையும்:

*ஐயக்கடன் ஏற்பாடு*

| | | | |
|---|---|---|---|
| | | *20–3 டிசம்பர்* | |
| | | *இ/ந/க/கு* | *200* |

*31 டிசம்பர் 20–3ல் ஐந்தொகை*

| | | | |
|---|---|---|---|
| | | *நடைமுறைச் சொத்து* | |
| | | *கடன்பட்டோர்* | *10 000* |
| | | *ஐ.க.ஏற்* | *(200)* |
| | | | *200* |

**31 டிசம்பர் 20-3ல் முடிந்தாண்டிற்கான**
**இலாபநட்டகணக்கு**

| | | | |
|---|---|---|---|
| *ஐ.க.ஏ* | *200* | | |

**1:2 ஏற்பாட்டை அதிகரித்தல்**

மேற்கூறப்பட்ட உதாரணத்தின் படி அதே நிறுவனம் 31 டிசம்பர் 20-4ல் ஐயக்கடன் ஏற்பாட்டை அதிகரிக்கத் தீர்மானித்தது. இந்த ஏற்பாடு 2% ஆகப் பாதுகாக்கப்படவேண்டும். ஆனால் கடன் பட்டோர் ரூபா 12000 ஆக உயர்த்தப்பட வேண்டும். முன்னைய ஏற்பாடு வருட ரூபா 200 ஆக கொண்டுவரப்பட்டது. தற் போது ஏற்பாட்டுகணக்கின் கூட்டுத் தொகை 240/- ஆகக் காணப்படவேண்டும் (2%x 12000). இதற்கு ரூபா 40 மேலதிக ஏற்பாட்டைச் செய்ய வேண்டியுள்ளது. இது இலாபநட்ட க/கில் வரவிலும் ஐயக் கடன் ஏற்பாட்டு கணக்கில் செலவிலும் காட்டப்படும்.

***ஐயக்கடன் ஏற்பாட்டு க/கு***

| | | | |
|---|---|---|---|
| *20–4டிசம்பர்* | | *ஜன / மீ/வ* | *200* |
| *31 மீ.செ* | *2 40* | *டிசம்பர் 31 இ/ந* | *40* |
| | *240* | | *240* |

***31 டிசம்பர் 20–4ல் ஐந்தொகை***

| | | | |
|---|---|---|---|
| | | *நடைமுறைச்சொத்து* | |
| | | *கடன்பட்டோர்* | *12000* |
| | | *ஐ.க.ஏற்* | *240* |
| | | | *11760* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**31 டிசம்பர் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்ட க/கு**

| | | | |
|---|---|---|---|
| ஐயக்கடன் ஏற்பாடு அதிகரித்தல் | 40 | | |

1.3 ஏற்பாடு எப்பொழுதும் செலவு மீதியாகவே காணப்படும். ஆகவே ஏற்பாட்டைக் குறைக்கும்போது ஏற்பாட்டுக்கணக்கில் வரவு வைக்கப்படவேண்டும். அத்துடன் இலாபநட்டக் கணக்கில் செலவு வைக்கப்படவேண்டும். 31 டிசம்பர் 20-5ல் கடன்பட்டோர் ரூபா 10500 ஆகக் குறைத்துக்காட்டப்பட்டது. ஆனால் ஏற்பாடு 2% ஆகவே காணப்பட வேண்டும். எனவே ஏற்பாடு 210/- ஆக இருக்க வேண்டும். இது ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கில் வரவிலும் இலாபநட்டக் கணக்கில் செலவிலும் வைக்கப்படும்.

**ஐயக்கடன் ஏற்பாட்டுக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| 20–5 டிசம்பர் 31 | | 20–5 ஜனவரி | 240 |
| இ/ந/க/கு | 30 | | |
| 31 டிசம்பர் மீ/செ | 210 | | |
| | 240 | | 240 |

**31 டிசம்பர் 20–5 ஐந்தொகை**

நடைமுறை சொத்து

| | | |
|---|---|---|
| க/ப | | 10500 |
| ஐ. க. ஏற் | (210) | 10290 |

**31 டிசம்பர் 20–5ல் முடிந்தாண்டிற்கான இலாபநட்ட க/கு**

| | | | |
|---|---|---|---|
| ஐ. க. ஏற்பாடு குறைத்தல் | 30 | | |

வஜி நிறுவனம் 1/1/2002ல் ஆரம்பமாகியது. அத்துடன் இந் நிறுவனம் நிதி வருடத்தை ஒவ்வொரு வருடமும் 31, 12ல் பூர்த்தி செய்கின்றது. கடன்பட்டோர் அட்டவணையில் கடன்பட்டோர் ஐயக் கடன், பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் கடன்பட்டோரின் ஐயக்கடன் ஏற்பாட்டு வீதம் என்பன தற்போது தரப்படுகின்றன. இரட்டைப்பதிவுக் கணக்குகளும் முடிவுகணக்குகளும் தரப்படுகின்றன.

| டிசம்பர் | கடன்படுநர் வருட இறுதியில் அ.மு.க | பதிவழிக்கப்பட்ட அ/முடியாக்கடன் | கடனால் பெ/முடியாதது என நினைத்து கடன்பட்டோரில் 2% |
|---|---|---|---|
| 200 - 2 | 6000 | 423 | 120 (2% ரூ 6000க்கு) |
| 20 - 3 | 7000 | 510 | 140 (2% ரூ 7000க்கு) |
| 20 - 4 | 7750 | 604 | 155 (2% ரூ 7750க்கு) |
| 20 - 5 | 6500 | 610 | 130 (2% ரூ 6500க்கு) |

**31/12 – 20 – 5ல் முடிவடைந்த வருட இ/ந/க/கு**

| | | | |
|---|---|---|---|
| 20–2 அ. மு. க | 423 | | |
| ஐ.க.ஏ உயர் | 120 | | |
| 20 – 3 அ. மு. க | 510 | | |
| ஐ. க. ஏ. உயர் | 20 | | |
| 20 – 4 அ. மு. க | 604 | | |
| ஐ. க. ஏ. உயர் | 155 | 20–5 ஐ. க. ஏற்பாடு | |
| 20 – 5 அ. மு. க | 610 | குறைதல் | 25 |

**ஐயக்கடன் ஏற்பாட்டுக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| 20–3 டிசம்பர் மீ/செ | 140 | 20–2 டிசம்பர் 31 | |
| | | இ/ந | 120 |
| | | 20 – 3 டிசம்பர் 31 | |
| | | இ/ந | 20 |
| | 140 | | 140 |
| | | 20 – 4 ஜனவரி | |
| | | மீ/வ | 140 |
| | | டிசம்பர் 31 20 – 4 | |
| | | இ/ந | 15 |
| | | மீ/வ ஜனவரி | 155 |
| | | | 155 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| அறவிடமுடியாக்கடன் | | | |
|---|---|---|---|
| 20–2 டிசம்பர் 31 | | 20–2 ல் | |
| க.ம | 140 | அ/ந/க/கு | 423 |
| 20 – 3 டிசம்பர் 31 | | 20 – 3ல் | |
| க.ம | 510 | இ/ந/க/கு | 510 |
| 20 –4 டிசம்பர் 31 | | 20 – 4 ல் | |
| க.ம | 604 | இ/ந/க/கு | 604 |
| 20 – 5 டிசம்பர் 31 | | 20 – 5ல் | |
| க.ம | 610 | இ/ந/க/கு | 610 |

| 31 டிசம்பரில் ஐந்தொகை | | |
|---|---|---|
| 20–2 கடன்பட்டோர் | 6000 | |
| (–) ஐ.க.ஏ | (120) | 5880 |
| 20 – 3 கடன்பட்டோர் | 7000 | |
| (–) ஐ.க.ஏ | (140) | 6860 |
| 20 – 4 கடன்பட்டோர் | 7750 | |
| (–) ஐ.க.ஏ | (155) | 7595 |
| 20 – 5 கடன்பட்டோர் | 6500 | |
| (–) ஐ.க.ஏ | (130) | 6370 |

## வரி வடிவத்தின் மூலமான விளக்கம்

சசி என்பவர் வியாபாரத்தினை ஆரம்பித்தார். அவரது முதல் வருட வியாபார நடவடிக்கை

1) அவர் ரூபா 50000 பொருட்களை கடனுக்கு விற்றார்

2) கடன்பட்டோரிடம் பெற்றது ரூபா 39 600

3) ஒரு கடன்பட்டோரிடம் இருந்து பெற வேண்டிய ரூபா 400க்கு அவரிடம் எவ்வித பணமும் இல்லாததால் முடிவுற்றதாகக் கருதப்பட்டது.

4) மேலும் ரூபா 1000 வருட இறுதியில் கடன்பட்டோரிடம் இருந்து வரவேண்டியிருந்தது.

5) (4)ல் கூறப்பட்ட ரூபா 1000ல் கொஞ்சத்தொகை அனேகமாகப் பெறமுடியாதுள்ளது. சசியினால் தொகையை சரியாகக் கண்டு பிடிக்க முடியாததால் அதில் ரூபா 100 ஐ (10000 x 1%) ஐயக்கடன் ஏற்பாட்டிற்கு ஒதுக்குகின்றார். அவர் ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு அறவிடமுடியாக்கடன் க/கு என்பவற்றை செய்வதாக தீர்மானித்தார். அவை தற்போது காண்பிக்கப்படுகின்றன.

| அறவிடமுடியாக்கடன் | | | |
|---|---|---|---|
| மீதி | 400 | இ/ந க/கு | 400 |

| ஐயக்கடன் ஏற்பாட்டுக் க/கு | | | |
|---|---|---|---|
| மீ/செ | 100 | இ/ந க/கு | 100 |
| | | மீ/வ | 100 |

| வருட இறுதியில் வியாபார இ/ந க/கு | | | |
|---|---|---|---|
| மொ. இலாபம் மீ/செ | | வி/னை | 50000 |
| பதிவழித்த அ.மு. கடன் | 400 | | |
| ஐ.க. ஏற்பாடு | 100 | மொ. இலாபம் மீ/வ | |

ஐந்தொகை

| நடைமுறை சொத்து | | |
|---|---|---|
| கடன்பட்டோர் (4) | 10000 | |
| ஐ.க. ஏற்பாடு (5) | (100) | (9900) |

### விளக்கங்கள்

| | |
|---|---|
| விற்பனை ரூபா 50000 இத் தொகையில் இ/ந க/கு அ.மு.க | 400 |
| செலுத்தாத தொகை ரூபா 400 (திடமானது)ற்கு மாற்றப்படும் ஐ.க.ஏ | 100 |
| + மேலும் ரூபா 100 = ரூபா 500 (மதிப்பீடு) | 500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணமாக்கக்கூடிய கடன்பட்டோர் 10000. இதில் ரூபா 100 கழிக்குக. பெறப்படாத மீதி ரூபா 9900. இது ஐந்தொகையில் ஸ்ரீ கடன்பட்டோர் ஐ.க.ஏற்பாடு

| | |
|---|---|
| கடன்பட்டோர் | 10000 |
| ஐ.க.ஏற்பாடு | (100) |
| | 9900 |

## அறவிடமுடியாக்கடன் மீளப்பெறல்

முன்னைய வருடங்களில் அறவிடமுடியாக கடனாகப் பதிவளிக்கப்பட்டது. எதிர்வரும் வருடங்களில் மீளப் பெறுவது ஒரு பொதுவான விடயமாகும். இதன்போது முதலில் மீளக்கடனாக வைப்பதற்கு கடன்பட்டோர் க/கில் வரவிலும் மீளப்பெற்ற அறவிடமுடியாக்கடன் க/கு செலவிலும் பதியப்படும்.

மீளவும் கடன்பட்டோர் பேரேட்டில் கடனாகப் பதிவதற்குக் காரணம் கடன்பட்டோர் சம்பந்தமான தகவல்களை அறிந்து எதிர் காலத்தில் கடன் கொடுப்பதற்கு வழி காட்டுவதற்கே ஆகும். ஒரு கடன் அறவிடமுடியாது எனக் கருதும் நேரத்தில் அதற்கான பதிவு கடன்பட்டோர்பேரேட்டில் பதியப்படும். அதனால் அப்படியான கடன் மீளப்பெறப்படும் போது (அறவிடமுடியாக்கடன் மீறப்பெறல்) அதற்கானபதிவு. கடன்பட்டோர் பேரேட்டில் பதியப்படும்.

கடன்பட்டோரை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ காசு அல்லது காசோலையைப் பெற்றுத் தீர்க்கும் போது பெறப்பட்ட தொகைக்கு காசு அல்லது வங்கிக் கணக்கில் வரவிலும் கடன்பட்டோர் கணக்கில் செலவிலும் பதியப்படும்.

வருட இறுதியில் மீளப்பெற்ற அறவிடமுடியாக்கடன் கணக்கின் மீதி அறவிடமுடியாக் கடன் கணக்கிற்கோ அல்லது இலாப நட்டக்கணக்கின் செலவுப்பக்கமோ பதியப்படும்.

## கடன்பட்டோர் கழிவு ஏற்பாடு

ஐந்தொகைத் திகதியில் கழிவு ஏற்பாட்டை உண்டு பண்ண சில நிறுவனங்கள் இடம் கொடுக்கின்றன. கடன்பட்டோரிடமிருந்து பணம்பெறப்படும் வேளையில் காசுக்கழிவு கொடுக்க வேண்டியிருப்பதால் ஐயக்கடன் ஏற்பாட்டை கழித்து வரும் கடன்பட்டோர் தொகை மிகவும் சரியான மதிப்பீடு அல்ல. இக் கழிவின் பெறுமதி விற்பனை செய்யப்படும் வேளையில் எடுத்துக் காட்டப்பட வேண்டும் என விவாதிக்கப்படுகின்றது.

கடன்பட்டோர் கழிவு ஏற்பாடு ஐயக்கடன் ஏற்பாட்டை ஒத்ததாகும். கடன்பட்டோர் கழிவு ஏற்பாடு அறவிடமுடியாக் கடனுக்கு வழங்குவதில்லை என்பதை தெளிவாக அறிந்து கொள்வதற்காகவே தேறிய கடன்பட்டோரிடமிருந்து ஐயக்கடன் ஏற்பாட்டைக் கழித்து வரும் தொகைக்கு கழிவு ஏற்பாடு மதிப்பிடப்படும் எண்ணம் தோன்றியது.

| டிசம்பர் 31 | கடன்பட்டோர் | ஐயக்கடன் ஏற்பாடு | கழிவு ஏற்பாடு% |
|---|---|---|---|
| 20 - 3 | 4000 | 200 | 2 |
| 20 - 4 | 5000 | 350 | 2 |
| 20 - 5 | 4750 | 250 | 2 |

**31டிசம்பர் முடிவடைந்த வருட க/கு**

| | | | |
|---|---|---|---|
| *20 – 3 க.ப கழிவு ஏற்பாடு (3800 X 2%)* | *76* | | |
| *20 – 4 க.ப கழிவு ஏற்பாடு உயர் (4650 X 2%)* | *17* | *20 – 5 க.ப கழிவு ஏற்பாடு குறைப்பு (4500 X 2%)* | *3* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்பட்டோர் கழிவு ஏற்பாட்டு க/கு

| | | | |
|---|---|---|---|
| 20–4 டிசம்பர்31 மீ/செ | 93 | டிசம்பர் 31 இ/ந | 76 |
| | | டிசம்பர் 31 இ/ந | 17 |
| | 93 | | 93 |
| 20 – 5 இ/ந | 3 | 20 – 5 ஜனவரி மீ/வ | 93 |
| மீ/செ | 90 | | |
| | 93 | | 93 |

31 டிசம்பரில் ஐந்தொகை

| | | | |
|---|---|---|---|
| 20 –3 கடன்பட்டோர் | | | 4000 |
| ஐயக்கடன் ஏற்பாடு | 200 | | |
| கடன்பட்டோர் கழிவு ஏற்பாடு | 76 | (276) | 3724 |
| 20 – 4 கடன்பட்டோர் | | | 5000 |
| ஐயக்கடன் ஏற்பாடு | 350 | | |
| கடன்பட்டோர் கழிவு ஏற்பாடு | 93 | (443) | 4557 |
| 20 – 5 கடன்பட்டோர் | | | 4750 |
| ஐயக்கடன் ஏற்பாடு | 250 | | |
| கடன்பட்டோர்கழிவு ஏற்பாடு | 90 | (340) | 4410 |

***Reference***


1. Business Accounting ***Frank Wood***
2. Accountancy - 1 ***D. Sam***
3. Modern Theory of Financial Accounting - ***D. Sam***



***P. Kajannath***
2003 A/L
Commerce


**யூரோ டொலர் சந்தை**
[Euro - Dollar Market]

ஒரு நாட்டு நாணயம் அந்த நாட்டு எல்லைகளுக்கு அப்பால் இன்னோர் நாட்டின் வங்கியில் கால வைப்பாக இடப்பட்டிருக்குமாயின் அந்த வைப்பினை யூரோ டொலர் நாணயம் என அழைப்பர்.

Eg:- இங்கிலாந்து நாட்டு நாணயம் இங்கிலாந்து நாட்டின் வங்கியில் கால வைப்பாக வைப்பு செய்யப்பட்டிருந்தால் அதனை யூரோ டொலர் வைப்பு என்பர்.

அதேபோல America நாட்டின் டொலர் இங்கிலாந்தில் ஒரு வங்கியிலும் இங்கிலாந்தின் ஸ்ரேலிங் பவுண் இத்தாலி நாட்டு வங்கியிலும் வைப்பு செய்யப்பட்டிருந்தால் அவை யாவும் யூரோ டொலர் நாணயங்கள் என அழைக்கப்படும். பெரும்பாலும் ஒருநாட்டின் எல்லைக்கப்பால் என குறிப்பிடப்படும் பொழுது பெருமளவு முதலீடுகள் ஐரோப்பாவில் இடம் பெறுவதால் Euro என்ற பதமும் முதலீடு இருப்பு செய்யப்படுகின்ற நாணயங்களின் Dollar இன் பங்கு அதிகமாக காணப்படுவதால் இந்த வகையான கால வைப்புக்களுக்கு Euro - Dollarஎன பெயரிட்டுள்ளனர். எனவே யூரோ டொலர் சந்தைக்கு இவ்வாறு வரைவிலக்கணம் கூறலாம். ஒரு நாட்டின் எல்லைக்கு அப்பால் முதலீடு / வைப்பு செய்யப்படும் அந்த நாட்டு நாணயங்களின் வைப்புகளை Euro - Dollar / Money Market என அழைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கணக்கீட்டு நியமம் 03

# SRI LANKA ACCOUNTING STANDARD - 3 (SLAS 03)

இலங்கை கணக்கீட்டு நியமம் 03 ஆனது 1995 ஆம் ஆண்டின் 15ம் இலக்க இலங்கைக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. முன்னர் கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்தல்" (Disclourse of Accounting Policies] என அழைக்கப்பட்ட நியமம் 03 ஆனது தற்போது நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்" (Presentation of Financial Statement] என மாற்றியமைக் கப்படுள்ளது.

(1.1)

I) **நோக்கம்** [S.L.A.S - 03]

Purpose of Financial Statements)

1. நிதிக்கூற்றுக்கள் ஒரு நிறுவனத்தின் நிதிநிலைமை, செயற்றிறன், காசுப்பாய்ச்சல் என்பவை பற்றிய தகவல்களை வழங்குவதால் பொருளாதார தீர்மானங்களை எடுக்கக் கூடியதாகவுள்ளது.
2. ஒப்படைக்கப்பட்ட வளங்கள் சார்பாக முகாமையின் சிறந்த தொழிற்பாட்டு விளைவினையும் காட்டுகின்றது.
3. நிதிக்கூற்றுக்களானது ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமை, வருமானம். செலவுகள் (இலாப நட்டங்கள் உள்ளடங்கலாக) காசுப்பாய்ச்சல் பற்றிய தகவல்களை வழங்குகின்றது. இதனால் எதிர்கால காசோட்டம், காசு காசுக்கு சமனானவற்றை உருவாக்குவதற்கான காலமும் அவை தொடர்பான நிச்சயத்தன்மையினையும் எதிர்வு கூற பயன்பாட்டாளருக்கு உதவுகின்றது.
4. வங்கி, காப்புறுதி நிறுவனங்கள், ஏனைய இலாப நோக்குடைய நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், இலாபநோக்கற்ற நிறுவனங்கள் யாவற்றிற்கும் பொருத்தமான தகவல்களை வழங்குதல்.

(1.2)

(II) **நிதிக்கூற்றுக்களுக்கான பொறுப்பு**

[Responsibility for Financial Statement]

ஒரு நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களை தயார் செய்தல், அவற்றை முன்னிலைப்படுத்தல், சமர்ப்பித்தல் என்பன பொறுப்புக்களாகும். இவற்றிற்கு இயக்குனர் சபை பொறுப்புடையவராகக் காணப்படுகின்றது. இத்தகைய பொறுப்பினை உள்ளடக்க வேண்டிய நிதிக்கூற்றுக்களில் இயக்குனர்கள் கையொப்பமிடுதல் வேண்டும். அல்லது அதிகாரமுடைய ஆள்கையினர் கையொப்பம் இடலாம்.

**1.3 கணக்கீட்டுக் கொள்கைகள்**

[Accounting Policies]

ஒரு முகாமையானது ஒரு நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கையினைத் தெரிவு செய்து பிரயோகித்தல் வேண்டும். நிதிக்கூற்றுத் தகவல்கள் ஆனது முகாமையில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மூலம் முக்கிய அம்சங்களை வெளிப்படுத்துவனவாக காணப்பட வேண்டும். இந்த வகையில் கணக்கீட்டுக் கொள்கைகள் என்பது ஒரு நிறுவனத்தால் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதிலும் அவற்றைச் சமர்ப்பிப்பதிலும் கையாளப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்ற தத்துவங்கள், அடிப்படைகள், வழமைகள், சட்டங்கள், நடைமுறைகள் என்பவற்றைக் குறிக்கின்றது.

ஒரு குறிப்பான கணக்கீட்டு நியமம் இல்லாத சந்தர்ப்பத்தில் முகாமையானது நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு பெருமளவு பயனுள்ள தகவல்களை வழங்கும் ஒரு கணக்கீட்டுக் கொள்கையை விருத்தி செய்வதில் கையாளப்படும் நிறுவன மதிப்பீடுகளை பயன்படுத்துகின்றது.

1) அதே மாதிரியான அல்லது அதனோடு தொடர்புபட்ட அம்சங்களை கையாளுகின்ற இலங்கை கணக்கீட்டு நியமங்களின் வேண்டுகைகளும் வழிப்படுத்தல்களும்

2) ஒரு கட்டமைப்பினுள் நிர்ணயிக்கப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவுகள் என்பவற்றிற்கான வரையறை. சிபார்சுகள், அளவீட்டுப் பிரமாணங்கள்.

3) வேறு நியமங்கள் குறித்த நிறுவனத்தினைப் பாதிக்காதவாறு இருத்தல்.

### 1.4 தொடர்ந்து செல்லும் தன்மை

(Going Concern)

நிறுவனமானது நீண்ட காலத்திற்கு தொடர்ந்து இயங்கும் தன்மை கொண்டது என்பதனையே இவ்எண்ணக்கரு கொண்டது. இது பின்வரும் விடயங்களைக் கொண்டது:

(i) நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது நிறுவனம் தொடர்ந்து செயற்படுவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளது. என்பதை முகாமை மேற்கொள்ள வேண்டும்.

(ii) முகாமையானது நிறுவனத்தினைக் கலைப்பதென உத்தேசித்தாலோ அல்லது வியாபாரத்தை நிறுத்துவதென உத்தேசித்தாலோ அன்றி நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் தயார் செய்யப்பட வேண்டும்.

(iii) நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் தயார் செய்யப்படாதபோது நிதிக்கூற்றுக்கள் தயார் செய்யப்பட்ட அடிப்படை நிறுவனம் தொடர்ந்து செல்லும் தன்மையினைக் கடைப்பிடிக்காமைக்கான காரணம் என்பதை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

(iv) நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் தயார் செய்யப்படாதபோது நிதிக்கூற்றுக்கள் தயார் செய்யப்பட்ட அடிப்படை நிறுவனம் தொடர்ந்து செல்லும் தன்மையினைக் கடைப்பிடிக்காமைக்கான காரணம் என்பவை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

### 1.5 கணக்கீட்டின் அட்டுறு அடிப்படை

(Accrual Basic of Accounting)

நிறுவனம் ஒன்று காசுப்பாச்சல் கூற்று தகவல்கள் தவிர்ந்த ஏனைய நிதிக் கூற்றுக்கள் யாவும் அட்டுறு முறையிலேயே வெளிப்படுத்த வேண்டும். அட்டுறு அடிப்படையிலான கணக்கீட்டின் கீழ் கொடுக்கல் வாங்கல்களும், நிகழ்வுகளும் காசாக கொடுக்கப்படும் அல்லது பெறப்படும் பொழுதன்றி அவை ஏற்பட்ட பொழுதே நிதிக் கூற்றுக்களில் பதியப்படல் வேண்டும்.

### 1.6 கொள்கைமாறாமை சமர்ப்பித்தல்

(Consistency of Presentation)

நிதிக்கூற்றுக்கள் தயார் செய்யப்படும் பொழுது ஒரு வருடத்தில் கடைப் பிடிக்கப்பட்ட கொள்கைகளே தொடர்ந்தும் பின்பற்றப்படுதல் வேண்டும் என்பதையே இவ் எண்ணக்கரு குறிப்பிடுகின்றது. இதன்படி பின்வரும் அம்சங்கள் தென்பட்டாலன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படும் அம்சங்களின் முன்னிலைப்படுத்தலும், வகைப்படுத்தலும் ஒரு வருடத்திலிருந்து அடுத்த காலப்பகுதிக்கும் அப்படியே வைத்திருக்கப்படல் வேண்டும்.

1) நிறுவனச் செயற்பாடுகளில், இயல்புகளில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டால் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் அல்லது நிகழ்வுகளின் முன்னிலைப் படுத்தலில் தகுந்த மாற்றங்கள் ஏற்பட்டால் அதற்கேற்ப நிதிக் கூற்றுக்கள் மீளாய்வு செய்ய வேண்டியிருந்தால்,

2) இலங்கை கணக்கீட்டு நியமத்தால் வேண்டப்படுகின்ற முன்னிலைப்படுத்தலில் ஏதாயினும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருந்தால்,

3) ஒரு குறிப்பிடத்தக்க கொள்வனவு, அல்லது விற்பனை அல்லது நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலின் மீளாய்வு, நிதிக்கூற்றுக்கள் வேறுபட்ட வகையில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்ற ஆலோசனைய வழங்கலாம். இங்கு மீளாய்வு செய்யப்பட்ட ஒரு கட்டமைப்பு அல்லது அம்சம் தொடர்ந்து பேணப்பட வேண்டியிருந்தால் நிறுவனம் தனது நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பித்தலை மாற்றவேண்டும். தவிர ஒரு முறை பின்பற்றபட்ட கொள்கையே தொடர்ந்தும் பேணப்படல் வேண்டும்.

### 1.7. பொருண்மையும் கூட்டு மொத்தமும்

(Materiality and Aggregation)

ஒவ்வொரு பொருண்மையான அம்சமும் நிதிக் கூற்றுக்களில் தனியாக முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும். பொருண்மை என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மதிப்பீடு செய்யப்பட்ட விடயத்தின் கூட்டு மொத்தம் பொருண்மையானதா என்பதனைத் தீர்மானிப்பதற்கு அதன் இயல்பும் அளவும் ஒன்றாக மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

உதாரணம்:- ஒரே மாதிரியான இயல்பு, தொழிற்பாடு என்பவற்றைக் கொண்ட ஒரு தனியான சொத்து பெரிய பெறுமதியைக் கொண்டிருந்தால் அது தனியாக முன்னிலைப்படுத்தப்படுதல் வேண்டும்.

### 1.8. ஒன்றிலிருந்து ஒன்றைக் கழித்துக் காட்டுதல்

(Off Setting)

இன்னொரு இலங்கை கணக்கீட்டு நியமத்தினால் ஒன்றிலிருந்து ஒன்று கழித்துக் காட்டுதல் என்பது வேண்டப்படும் போது அல்லது அனுமதிக்கப்படும் போது மட்டுமன்றி சொத்துக்களும், பொறுப்புக்களும் ஒன்றிலிருந்தொன்று கழிக்கப்படல் வேண்டியதில்லை. அதாவது சொத்திலிருந்து பொறுப்பைக் கழித்து தேறியதைக் காட்ட வேண்டியதில்லை.

பின்வரும் நிலைமைகளின் பொழுது மட்டும் வருமான விடயங்களும் செலவினங்களும் ஒன்றிலிருந்து ஒன்று கழித்துக் காட்டப்படல் வேண்டும்:

1. ஒரு கணக்கீட்டு நியமம் அதனை வேண்டினால் அல்லது அனுமதியளித்தால்.
2. வருமானங்கள், நட்டங்கள் ஒரே மாதிரியான அல்லது அதனையொத்த கொடுக்கல், வாங்கல்கள் நிகழ்வுகளிலிருந்து எழுகின்ற தொடர்புடைய செலவுகள் பொருண்மையிற்றிருந்தால்.

### 1.9. ஒப்பீட்டுத் தன்மை

(Comparative Information)

நிதிக்கூற்றுக்களில் உள்ள எண் ரீதியான தகவல்கள் எல்லாவற்றையும் முந்திய வருடத்தோடு தொடர்புபட்ட வகையில் ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இது பின்வரும் விடயங்களைக் கொண்டுள்ளது:

1) தகவல்கள் நடைமுறை காலப் பகுதியில் நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்வதற்கும் பொருத்தமானதாக இருக்கும் பொழுது ஒப்பீட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்கள் விபரமான மற்றும் விபரணரீதியான தகவல்களிலுள் உள்ளடக்கப்பட வேண்டும்.

2) சில சந்தர்ப்பத்தில் கடந்த காலப் பகுதிக்கான நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட விபரமான தகவல்கள் நடப்பாண்டுக் காலப்பகுதியில் பொருத்தமானதாக தொடர்ந்தும் இருக்கலாம்.

உதாரணமாக:- சட்டரீதியான அம்சங்கள் கடந்த ஐந்தொகைத் திகதியில் இருந்து இன்னமும் தீர்க்கப்படாத நிச்சயமற்ற தன்மைகள் நடப்பாண்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

3) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் முன்னிலைப் படுத்தல், அல்லது வகைப்படுத்தல் சிறுமாற்றத்துக்குள்ளாக்கப்படும் பொழுது ஒப்பீட்டுத் தொகைகள் மீள வகைப்படுத்தப்படுதல் வேண்டும் இச் சந்தர்ப்பத்தில் நடைமுறைக் காலப்பகுதியுடனான ஒப்பீட்டுத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு இயல்புகள், மீள வகைப்படுத்தப்பட்ட தொகை, அதற்கான காரணம் என்பன தெளிவாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

**1.10. ஐந்தொகையின் முன்பக்கத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்கள்**

ஒரு நிறுவனத்தின் ஐந்தொகையின் முன் பக்கத்தில் பின்வரும் விடயங்களும் தொகைகளும் வரிசைக்கிரமத்தில் உள்ளடக்க வேண்டும்.

1. ஆதனங்கள், இயந்திர சாதனங்கள், உபகரணங்கள்
2. உருவமற்ற சொத்துக்கள் (தொட்டு உணரமுடியாத சொத்துக்கள்)
3. நிதிச் சொத்துக்கள்
4. உரிமை முறையைப் பயன்படுத்துவதற்காக கணக்கிடப்பட்ட முதலீடுகள், இருப்புக்கள்.
5. இருப்புக்கள்
6. வியாபாரமும். வியாபாரமல்லா வருமதிகளும்
7. காசும், காசுக்குச் சமமானவையும்
8. வியாபாரமும், வியாபாரமல்லா கொடுப்பனவுகளும்
9. வரிப் பொறுப்புக்கள்
10. ஏற்பாடுகள்
11. நடைமுறை வட்டியற்ற பொறுப்புக்கள்
12. சிறுபான்மையினர் பங்கு
13. வழங்கப்பட்ட மூலதனமும், ஒதுக்கங்களும்.

மேலும் ஒரு நிறுவனத்தின் நிதி நிலைமையினை சரியான முறையில் முன்னிலைப்படுத்துவதற்கு அவசியமானது எனக் கருதப்படும் போது தொடர்புடைய தலைப்புக்கள் உட்தொகைகள் என்பன ஐந்தொகையின் முன்பக்கத்தில் முன்னிலைப் படுத்தப்படுதல் வேண்டும். மேலும் பந்தி மேல் குறிப்பிடப்பட்டவாறு தொட்டுணர முடியாத சொத்துக்களுக்கு நன்மதிப்பும், அபிவிருத்திக்கிரயமும் உள்ளடக்கப்படும்.

**மேலதிகமான விடயங்கள் வேறாக வெளிப்படுத்தல் வேண்டும். அவை பின்வருமாறு:**

அ) சொத்தின் தன்மை, திரவத்தன்மை என்பவற்றுக்கேற்ப வேறான வெளிப்படுத்தல்கள் அவசியம். நன்மதிப்பு, அபிவிருத்திக் கிரயம் என்பன நிதித் தன்மை, நிதித்தன்மையல்லாத சொத்து / நடைமுறை அல்லது நடைமுறையல்லாத சொத்து என்றவாறு வெளிப்படுத்தப்பட வேண்டும்.

ஆ) நிறுவன செயற்பாடுகள் அடிப்படையில் நிதிச் சொத்துக்கள், தொக்குகள், வருமதிகள், காசு காசுக்குச் சமனானவை வெளிப்படுத்தல் வேண்டும்.

இ) ஒதுக்கங்களும் பொறுப்புக்களும் நடைமுறை, நடைமுறையல்லா பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்து, பொறுப்பு தொழிற்பாடு / தன்மையடிப்படையில் வேறுபட்டிருக்கலாம். இலங்கை கணக்கீட்டு நியமம் 18ன்படி சொத்துக்களின் பெறுமானங்கள் மீள் மதிப்பீடு செய்யப்படலாம். இவை வேறாக நிதிக் கூற்றுக்களில் தனிவரிசையில் காட்டப்படல் வேண்டும்.

**1.11 ஐந்தொகையில் / குறிப்புக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்கள்**

நிறுவனமொன்றில் சில வகையான விடயங்களை ஐந்தொகையில் அல்லது குறிப்புவடிவில் வெளிப்படுத்திக்காட்ட வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இவை இலங்கை கணக்கீட்டு நியமத்தின் தேவைக்கு ஏற்ப அவற்றின் அளவு, தொழிற்பாடு என்பவற்றிற்கும் ஏற்ப வகைப்படுத்தப்படல் வேண்டும். அவை யாவன:

i) தொட்டு உணரக்கூடிய சொத்துக்கள் கணக்கீட்டு நியமம் 18ன்படி ஆதனங்கள், இயந்திர உபகரணங்கள் எவ்வாறு அமையலாம்?

ii) வருமதிகள் கடன்பட்டோரிடமிருந்து, ஏனையோரிடமிருந்து வேறுபடுத்தல்

iii) இருப்புக்கள் கணக்கீட்டு நியமம் 5ன்படி முடிவுத்தொக்கு, மூலப் பொருள், நடைபெறும் வேலை என வகைப்படுத்தலாம்.

iv) ஊழியர்களுக்கான நன்மைகள் அவற்றின் தன்மைக்கேற்ப வகைப் படுத்தப்படலாம்.

v) உரிமை மூலதனமும் ஒதுக்கங்களும் வேறுபட்ட வகைகளின் அடிப்படையில் செலுத்திய மூலதனம், பங்கு வட்டம். ஒதுக்கங்கள் என காட்டப்படல் வேண்டும்.

ஒரு நிறுவனம் பின்வரும் அம்சங்களையும் ஐந்தொகையில் அல்லது குறிப்புக்களில் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்.

(அ) பங்கு முதலின் ஒவ்வொரு வகைக்கும்

1) அனுமதித்த பங்கு மூலதன் எண்ணிக்கை

2) வழங்கப்பட்டு முழுமையாக செலுத்தப்பட்ட பங்குகள், மற்றும் வழங்கப்படும் முழுமையாகச் செலுத்தப்படாத பங்குகள்.

3) பங்கின் முகப் பெறுமதி

4) வருட ஆரம்பத்திலும், இறுதியிலும் நிலுவையாகவுள்ள பங்குகளின் எண்ணிக்கை பற்றிய இணக்கம்.

5) துணைக்கம்பனிகளது முதலீடு பற்றிய விபரம்

6) தெரிவு, மற்றும் விற்பனை ஒப்பந்தங்களுக்காக ஒதுக்கப்பட்ட பங்குகள்.

7) பங்கிலாபத்தை வழங்குதல். மூலதனத்தைத் திரும்ப இணைக்கப்படுகின்ற உரிமைகள் முன்னுரிமைகள் தடைகள்.

ஆ) உரிமையாளரின் உரிமை மூலதனத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஒதுக்கத்திற்குமான இயல்பு, நோக்கம் என்பவை பற்றிய ஒரு விபரணம்.

இ) பங்கிலாபம் சார்பாக பிரேரிக்கப்பட்ட திகதி, வழங்குவதற்கு அனுமதிக்கப் பட்ட திகதி, பங்குலாபம் சார்பான பொறுப்புக்கள்

ஈ) திரண்ட முன்னுரிமைப்பங்கிலாபங்கள் பற்றிய விபரம்

பங்கு மூலதனத்தினைக் கொண்டிராத பங்குடமை போன்ற நிறுவனங்கள் மேலே கூறப்பட்டவற்றுக்குச் சமமான தகவல்களை வெளிப்படுத்த வேண்டும்.

**1.12. வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும் தகவல்கள்**

வருமானக் கூற்றானது பின்வரும் அம்சங்களையும், அவற்றின் தொகைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும் பின்வரும் ஒழுங்கில் உள்ள டக்க வேண்டும்.

i) வருமானம்

ii) வியாபார செயற்பாட்டு விளைவுகள்

iii) நிதிச் செலவுகள்

iv) உரிமைமுறையைப் பயன்படுத்துவதற்காக கணக்கிலிடப்பட்ட இலாபப்பங்கு / நட்டம் / கூட்டு முயற்சிகள்

v) வரிச் செலவுகள்

vi) சாதாரண செயற்பாட்டு இலாபம் / நட்டம்

vii) அசாதாரண விடயங்கள்

viii) சிறுபான்மையினரின் பங்கு

ix) குறித்த காலத்திற்கான தேறிய லாபம் / நட்டம்.

இவற்றை விட செலவுகளின் இயல்பு, அவற்றின் தொழிற்பாடு என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட செலவுகளின் பகுப்பாய்வு, அவற்றின் உப வகைப்படுத்தல், முடிவுப் பொருளிருப்பு, குறைவேலை என்பவற்றில் ஏற்படும் மாற்றங்கள் என்பவை வருமானக் கூற்றிலும் குறிப்பிலும் காட்டப்படல் வேண்டும். அத்தோடு ஒரு பங்கிற்கான உழைப்பு, பங்கொன்றுக்கான உழைப்பு, பங்கொன்றுக்கான பங்கிலாபம் என்பனவும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். மேலும் உரிமையின் மீதான மாற்றங்கள், காசுப் பாய்ச்சல் சம்பந்தமான விடயங்களும் முன்னிலைப்படுத்தல் அவசியம்.

**முடிவுரை:-**

மாற்றம் செய்யப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியம 03ஐ அடிப்படையாகக் கொண்ட முக்கிய சில விடயங்கள் இக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.


***Reference:-***

i) The Institute of Chartered Accounts of Srilanka,
Sri Lanka Accounting and Auditing Standards Act No._ 15 of 1995

ii) கணக்கீட்டு எண்ணக்கரு சார்பான வழிகாட்டல்கள்.



***R. Kumaran***
2003 A/L
வர்த்தகப்பிரிவு


**உங்களுக்குத் தெரியுமா?**

1) உதடு ஒட்டாத குறள் எது?
"யாதெனின் யாதெனின் நீங்கியான்-நோதல்
அதனின் அதனின் இல"

2) பாரதியார் கவிதை எழுதும்போது வயது என்ன?
ஏழு வயது

3) உலகினில் உள்ள உளவு நிறுவனங்களில் பழமையானது எது?
***Intelligence Bureau***

4) பைபிளில் "and" என்ற ஆங்கில வார்த்தை எத்தனை முறை வருகிறது?
46,277 முறை

5) விமானப் பணிப்பெண்களை "Air Hostess" என்று அழைக்கின்றோம். அதுபோல் ஆண்களுக்கு என்ன பெயர்?
***Flight Pursers***

6) "France, Army, Josephin" என்பது யாருடைய இறுதி வார்த்தை?
உலகப்புகழ் பெற்ற மாவீரன் நெப்போலியனின் இறுதி வார்த்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவே நீ காலங்காலமாய் மலரவேண்டும்!

அழகு சாதனப்பொருட்களா? அன்பளிப்புப் பொருட்களா? மற்றும் அனைத்து வகை அலங்காரப் பொருட்களா? இதோ! புதியதோர் உதயம்!



# நியூ தர்சினி பான்சி ஹவுஸ்





133C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

---

எதிர்கால வணிக மேதைகளை உருவாக்கும் "வரவே" நீ வாழ்க!

**"பசுவதையை எதிர்ப்போம்"**



பாலை தருகிறோம், நெய்யைத் தருகிறோம்,
சிவசின்னங்களையும் தருகிறோம்,
தயவு செய்து எம்மை வதைக்காதீர்கள்.

# வேணி களஞ்சியம்

Wholesale and Retail Dealers

165, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- காலத்தால் அழியாத கற்பனைக்கும் எட்டாத
- எழில் குன்றா அற்புதப் படைப்புக்கள்
- பார்ப்பவர் கண்களில் பளிச்சிடும் அசல் ரகங்கள்



குறிப்பிட்ட தவணையில் தரமாகவும் நியாயமாகவும் பெற்றிட இன்றே நாடுங்கள்

## சாரங்கன் நகைமாடம்





## அருள் முருகன் நகைமாடம்

## சாரங்கா நகைமாடம்

சாரங்கன் நகைமாடம்
அன்ட் சென்ரர்
இல, 45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அருள் முருகன் நகைமாடம்
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

இசையால் வசமான உங்களுக்கு
இரைச்சலின்றி இசை கேட்டு மகிழ்ந்திடவும் மற்றும்
உங்கள் அபிமான திரைப்படங்களை தெளிவாகவும்
துல்லியமாகவும் பார்த்து ரசித்திட

## மம்மி டாடீஸ்

- தரமான VCD, DVD, Mp3 CD கள்
- ஓடியோ றெக்கோடிங்
- வீடியோ மிக்ஸிங்
- வீடியோ பிலிம்மிங்

மற்றும்

*Electrical Spore Parts* மற்றும்
*Fancy Items and Gift items*

போன்றவற்றுக்கும் நீங்கள் நாட வேண்டியது

# Mummy Daddy's Electronic

கொக்குவில் சந்தி, கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனங்களின் கணக்கீட்டு முறைகள் (Systems of Accounting)

வழமையாக நிறுவனங்களின் கணக்கீட்டுக்காக இரு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. காசு அடிப்படையிலான கணக்கீடு [Cash system Accounting]
2. அட்டுறு அடிப்படையிலான கணக்கீடு [Accrual system of Accounting]

இவற்றின் மூலம் நிறுவனங்கள் தமது வியாபாரத்தின் செயற்பாட்டு பெறுபேறுகளை [இலாபம் / நட்டம்] கணிப்பீடு செய்கின்றன.

### காசு அடிப்படையிலான கணக்கீடு
[Cash system Accounting]

காசு அடிப்படையில் நிறுவனங்கள் பெறுபேறுகளை கணிப்பீடு செய்வதென்பது பொதுவாக பின்பற்றப்படுவதில்லை இருந்த போதிலும் சந்தை வியாபாரிகள் உயர் தொழில் புரியும் சில அமைப்புக்கள் [சட்டத்தரணி நிறுவனம்] போன்றன காசு அடிப்படையில் தமது வியாபாரத்தின் பெறுபேறுகளை கணிப்பிடுகின்றன. இம்முறையில் காசு பெறும் போது அல்லது கொடுக்கும் போது மட்டுமே பதிவுகள் இடம் பெறும். வருமதியான வருமானங்கள் சென்மதியான செலவுகள் தொடர்பாக பதிவுகள் இடம்பெறுவதில்லை. அத்துடன் காசு மீதியின் அடிப்படையிலேயே இலாபம் அல்லது நட்டம் தீர்மானிக்கப்படும்.

இக்கணக்கீட்டு முறையில் வருமானம் எப்போது உழைக்கப்பட்டது என்பது பற்றியோ அல்லது செலவினங்கள் எப்போது உருவாகின என்பது பற்றியோ கவனத்தில் கொள்ளப்படாது. இதனை பின்வரும் கணக்கின் மூலம் தெளிவாக விளக்கலாம்.

Example:- Sachin நிறுவனத்தின் 2002 டிசம்பர் இல் முடிவடைந்த ஆண்டுக் கான தகவல்களை வருமாறு:

I ஆண்டுக்கான விற்பனைகள்
காசு விற்பனை 100. 000
கடன் விற்பனை 250. 000

II 2002 இல் கடன்பட்டோரிடம் இருந்து பெற்ற காசு
2001 இல் கடன் வி/னை இருந்து 25000
2002 இல் கடன் வி/னை இருந்து 200. 000

III 2002 இல் காசாக பெற்ற ஏனைய வருமானங்கள் 15000. இக்காசு பெறுவனவினுள் 2500 அடுத்த ஆண்டுக்குரியதாகும். அத்துடன் 2002 தொடர்பின் 3000 வருமதியாக உள்ளது.

IV 2002 ஆண்டில் காசாகக் கொடுக்கப்பட்ட செலவுகள் 90 000 இவ்வாண்டு குறித்த திகதியில் நின்ற செலவுகள் [அட்டுறு] 35000. அத்துடன் காசு கொடுப்பனவினுள் 2500 அடுத்த ஆண்டுடன் தொடர்புடையது.

V 2001 Dec - 31 இல் அட்டுறு 15000
2001 Dec- 31 முற்பண வருமானம் 10000

* மேற்கூறப்பட்ட தரவின் அடிப்படையில் 2002ம் ஆண்டின் பெறுபேற்றினை காசு அடிப்படையில் [Cash system] கணிப்பிட்டால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002ஆம் ஆண்டின் வருமானம்

| | |
|---|---|
| காசு விற்பனை | 100000 |
| கடன் விற்பனை | 225000 |
| ஏனைய வருமதி | 15000 |
| | 340000 |
| (–) செலவுகள் | 40000 |
| தேறிய வருமானம் | 250000 |

( Net Income)

Note:- இங்கு தரவில் குறிப்பிட்ட காசாக பெற்ற வருமானங்களிலும் காசாக கொடுத்த செலவுகளும் மட்டுமே கவனத்தில் கொள்ளப்படும். அட்டுறு செலவுகளோ முற்பண வருமானங்களோ காசு அடிப்படையிலான கணக்கீட்டில் இடம் பெறாது.

## அட்டுறு அடிப்படையிலான கணக்கீடு / நிதி அடிப்படையிலான கணக்கீடு [Accrual system of Accounting / Financial system of Accounting]

ஓர் கணக்காண்டுக்கான வருமானங்கள் செலவீனங்களை தொடர்புபடுத்துவதன் மூலம் நிறுவனத்தின் பெறுபேறுகளை கணிப்பீடு செய்வது அட்டுறு அடிப்படையிலான கணக்கீடு எனப்படும். இக் கணக்கீட்டில் கொடுக்கல் வாங்கல் ஒன்று இடம்பெற்றதும் அக் கொடுக்கல் வாங்கல்கள் பொருத்தமான கணக்குப் பதிவுக்கு உட்படுத்தப்படும். இம்முறையிலான கணக்கீட்டிலேயே நிறுவனத்தின் நிதிநிலமையினை திருத்தமாக மதிப்பிடக் கூடிய தகவலை பெற்றுக்கொள்ள முடியும். இக் கணக்கீட்டினை கணக்கீட்டு கொள்கைகள், கோட்பாடுகள், மரபுகள், எண்ணக்கருக்கள், நியமங்கள், கம்பனி சட்டவிதிகள் என்பன வழிநடாத்தி கட்டுப்படுத்துகின்றன.

* காசு அடிப்படை முறையில் செய்த கணக்கை அட்டுறு அடிப்படையில் மேற்கொள்ளும் போது

2002 ஆண்டுக்கான வருமானம்

| | |
|---|---|
| காசு விற்பனை | 100000 |
| கடன் விற்பனை | 250000 |
| ஏனைய வருமானம் | 15500 |
| | 365500 |

2002இற்குரிய செலவுகள்

| | |
|---|---|
| 2002 இல் காசு கொடுப்பனவு | 190000 |
| 31/12/02 அட்டுறு | 35000 |
| | 125000 |
| 31/12/01 அட்டுறு | (15000) |
| | 110000 |
| 31/12/01 முற்பணம் | 12500 |
| | 97500 |
| 31/12/01 முற்பணம் | 10000 |
| | 107500 |

நிதி அடிப்படையிலான தேறிய வருமானம்

$$365500 - 107500 = 255000$$

இங்கு காசு அடிப்படையிலான கணக்கீட்டையும் அட்டுறு அடிப்படையிலான கணக்கீட்டையும் ஒப்பிடும் போது வருமான கணிப்பீடும் செலவு கணிப்பீடும் வேறுபடுவதால் இரண்டினதும் தேறிய வருமானம் வேறுபட்டதாக அமைகின்றது.

காசு அடிப்படையிலான, அட்டுறு அடிப்படையிலான இலாப கணிப்பீட்டு தொடர்பினை கீழ்வரும் உதாரண விளக்கத்தின் மூலம் தெளிவாக விளக்கலாம்.

Cronjey நிறுவனத்தின் 31/12/02 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தரவுகள் வருமாறு:

1. ஆண்டு இறுதியின் இறுதி இருப்பு 50000 ஆக மதிப்பிடப்பட்டது.
2. கடன் கொள்வனவு சென்மதி 40000/-
3. கடனுக்கு விற்பனையில் 60000/= தருமதியாக உள்ளது.
4. நின்ற வாடகை 14000
5. அட்டுறு சம்பளம் 10000 முற்பண சம்பளம் 6000
6. பொதியிடலில் 6000/= முற்பணமாக காணப்படும், அதேவேளை வி/னை செலவு 4000/= காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாபார இலாபநட்ட க/கு [Cash system]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ. இருப்பு | 20000 | | விற்பனை | | 500000 |
| கொள்வனவு | 300000 | | [100000 + 400000] | | |
| | 320000 | | | | |
| இ. இருப்பு | (50000) | | | | |
| விற்பனை கிரயம் | 270000 | | | | |
| மொ. இலாபம் | 230000 | | | | |
| | 500000 | | | | 500000 |
| | | | மொ. இலாபம் | | 230000 |
| நி. நிர்வாக செலவு | | | பெ. பங்குலாபம் | 40000 | |
| சம்பளம் | 20000 | | பெற்ற வாடகை | 30000 | 70000 |
| வாடகை | 40000 | 60000 | | | |
| வி/னை வினியோகச் செலவு | | | | | |
| பொதி | 24000 | | | | |
| வி/னை செலவு | 16000 | 40000 | | | |
| தே. இலாபம் | | 200000 | | | |
| | | 300000 | | | 300000 |

*பரீட்சை மீதி*

| | | |
|---|---|---|
| ஆ. இருப்பு | 20000 | |
| கொ/வு – காசு | 60000 | |
| கடன் | 240000 | |
| விற்பனை காசு | 100000 | |
| கடன் | 400000 | |
| சம்பளம் | 20000 | |
| வாடகை | 40000 | |
| பொதி | 24000 | |
| பெ. பங்குலாபம் | | 40000 |
| பெ. வாடகை | | 30000 |
| விளை/செலவு | 1600 | |

Note:- இங்கு காசு அடிப்படையிலான கணக்கீட்டில் செலுத்தவேண்டிய செலவீனங்களோ பெறவேண்டிய வருமானங்களோ இடம்பெறமாட்டாது. அதாவது மேற்காட்டப்பட்ட உதாரணம் கணக்கில் காட்டப்பட்ட அட்டுறு செலவுகளுக்கோ அல்லது முற்பண வருமானங்களுக்கோ கணக்கில் பதிவுகள் எதுவும் இடம்பெற மாட்டாது.

மேற்காட்டப்பட்ட உதாரண கணக்கை அட்டுறு அடிப்படையில் மேற்கொள்ளும் போது,

## வியாபார இலாபநட்ட க/கு [Cash system]

| | | | |
|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 20000 | விற்பனை | 500000 |
| கொள்வனவு | 340000 | [100000 + 400000] | |
| | 360000 | | |
| (–) இறுதி இருப்பு | (50000) | | |
| விற்பனைக் கிரயம் | 310000 | | |
| மொ. இலாபம் | 250000 | | |
| | 560000 | | 560000 |
| நிலைய நிர்வாக செலவு | | மொ. இலாபம் | 250000 |
| சம்பளம் [20000+10000 – 6000] | 2400 | பெற்ற பங்குலாபம் | 44000 |
| வாடகை [40000+14000] | 54000 | [20000+2000] | |
| வி/னை வினியோகச் செலவு | | பெற்ற வாடகை | 24000 |
| பொதியியல் [24000 – 6000] | 18000 | [30000 – 6000] | |
| வி/னை செலவு [16000+4000] | 20000 | | |
| தே. இலாபம் | 202000 | | |
| | 818000 | | 818000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Note:- இங்கு அட்டுறு அடிப்படையிலான கணக்கீடானது ஒரு கணக்காண்டில் உழைக்கப்பட்ட முழுமையான வருமானத்தையும் அவ் வருமானத்தை உழைப்பதோடு தொடர்புபட்ட வகையில் எடுத்த செலவுகளும் தொடர்புபடுத்தப்பட்டு இலாபநட்டங்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இதன்படி இங்கு அட்டுறு செலவுகளும் முற்பண வருமானங்களும் சீராக்கப்பட்டு இங்கு கணக்கானது இடம் பெற்றுள்ளது.

* காசு அடிப்படையிலான கணக்கீட்டினையும் அட்டுறு அடிப்படையிலான கணக்கீட்டையும் ஒப்பீட்டு இணக்க கூற்றை மேற்கொள்ளும் போது,

## காசு அடிப்படை அட்டுறு அடிப்படையிலான இலாப கணிப்பீடு

| | | |
|---|---|---|
| காசு அடிப்படையிலான தேறிய இலாபம் | | 200000 |
| (+) கடன் விற்பனை | 60000 | |
| சம்பள முற்பணம் | 6000 | |
| பொதியிடல் முற்பணம் | 6000 | |
| வருமதியிலான ப. இலாபம் | 4000 | 76000 |
| | | 276000 |
| (–) கடன் கொள்வனவு | 40000 | |
| சென்மதி சம்பளம் | 10000 | |
| நின்ற வாடகை | 14000 | |
| அட்டுறு வி/னை செலவு | 4000 | |
| முற்பண வி/னை செலவு | 6000 | [74000] |
| நிதி அடிப்படையிலான மு. இலாபம் | | 202000 |

Note:- இங்கு காசு அடிப்படையிலான கணக்கீட்டில் பெறப்பட்ட தேறிய இலாபத்துடன் சென்மதி செலவீனங்கள் முற்பண வருமானங்கள் என்பவற்றை சீராக்கும் போது அட்டுறு அடிப்படையிலான தேறிய இலாபம் பெறப்படுகின்றது.

***Reference:***


1. Business Accounting - Reank Wood
2. Teachers Guide - Part I
3. Introduction for Financial Accounting - Kalaichelvan



வி. தமிழன்பன்
2003 A/L
வர்த்தகப்பிரிவு


உலகப் பகழ் வாய்ந்த பிறந்தநாள் பாடலை. Mildred, Patty Hill என்ற சகோதரிகள் 1893ம் ஆண்டு "Good morning to you" என எழுதினார்கள்.

இதுவே பிற்காலத்தில் "Happy Birthday to you" என்று மாற்றப்பட்டு உலகெங்கும் இன்று வரை பிரபல்யம் பெற்று விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவே உன் மலர்வே எங்கள் மகிழ்ச்சி



எங்கள் நிறுவனம் பற்றி உங்களுக்கு
சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

# E.S.P. & Co.

ஆம்!



மோட்டார் சைக்கிள்கள். மிதிவண்டிகள்.
நீர் இறைக்கும் இயந்திரங்களும் அவற்றின் உதிரிப்பாகங்கள்
மற்றும் அனைத்து இலத்திரனியல் கருவிகளையும்.
அழகு சாதன பொருட்களையும் இன்னும் உங்களுக்கு தேவையான
சகல பொருட்களையும் மலிவாகப் பெற நீங்கள் நாடும் ஒரே இடம் !

**PEPSI** மென்பானத்தின் ஏக விநியோகஸ்தர்கள்:-

# இ.ச. பேரம்பலம் சகோ நிறுவனம்

50, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

---

*With best wishes from*

# Rupa Versatile Traders

**Distributors for:-**

☞ Smith & line Bee cham Mack woods Limited

☞ *Gamma Pharmaceuticals (P.V.T) Ltd.*

☞ *Ceylon Biscuit (P.V.T) Ltd.*

*

*No: 104 A, Stanley Road,*
*Jaffna.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best wishes from*

நவநாகரிக
ஆடவர் மற்றும் நங்கையர் மனதில்
நீங்காத இடம் பிடித்த
முன்னணி ஸ்தாபனம்.

# T. Kumarasamy Textile




*44, 42, Grand Bazaar*
*Jaffna.*

*T.P: 2985*

வரவு எனும் மலரே வருக வருக

"கர கர மொரு மொரு"



## சன் விட்டா பிஸ்கட்களை

தனிச்சிறப்புடன் சுவைத்து
மகிழுங்கள்

*தயாரிப்பாளர்கள்:*
வெஸ்ரோரியண்ட் பூட்ஸ் (பிறைவேட்)
லிமிடட் ~கொழும்பு

சந்தைப்படுத்துவோர் -

## சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
*T.P 2567*

*With the best compliments from*

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு
வரை சகல பாடநூல்களையும் மற்றும்
பாடசாலை உபகரணங்களையும்
ஒரே கூரையின் கீழ்
பெற்று கொள்ள நாடுங்கள்.



## Aseer Vaniga Nilaiyam




*202A, K.K.S Road,*
*Jaffna*

வரவே நீ தேனாய் வருக!

## அல்பா மிக்சர்



144, பரமேஸ்வராச் சந்தி,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

பாக்கஸ் லேன்,
உடுவில் வீதி,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கியலில் பெறுமானத்தேய்வு தொடர்பில் MS - Excel மென்பொருளின் பங்களிப்பு

தகவல் தொழில் நுட்பப் புரட்சி மூலம் இன்று உலகம் ஓர் கிராமமாகச் சுருங்கி விட்டது. இதனால் விரும்பியோ, விரும்பாமலோ மக்கள் தகவல் தொழில் நுட்பத்தோடு தம்மைத் தொடர்புபடுத்த வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தமட்டில் தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் இன்று பெருமளவில் உணரப்பட்டுள்ளது. அதன் வெளிப்பாடே பாடசாலைகளின் பாடத்திட்டத்தில் பொதுத்தகவல் தொழில் நுட்பம் (General Information Technology - GIT) சேர்க்கப்பட்டுள்ளதெனலாம். இத் தகவல் தொழில் நுட்பத்தின் அபார வளர்ச்சிக்கு முக்கிய காரணம் கணனி (Computer) எனப்படுகின்ற சாதனத்தின் கண்டுபிடிப்பாகும். இக் கணனிகளின் உயிரோட்டமாக இருப்பது மென் பொருட்கள் (Software) எனப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகும். இன்று கணனி மென்பொருள் தயாரிப்பில் பல நிறுவனங்கள் ஈடுபட்டு வந்தாலும் முன்னணியில் திகழ்கின்ற நிறுவனம் அமெரிக்காவில் உள்ள Micro Soft எனப்படும் நிறுவனமாகும். இந்த நிறுவனத்தின் மென்பொருட்களில் ஒன்றான Office எனப்படும் தொகுப்பே இன்று உலகளாவிய ரீதியில் பெரும் வரவேற்பைப் பெற்று விளங்குகின்றது. சுருக்கமாக MS - Office என அழைக்கப்படும் இம் மென்பொருளானது கணனி சம்பந்தமாக அடிப்படை அறிவு இல்லாதவர்கள் கூட இங்கு இலகுவாகக் கல்வி பயின்று கொள்ள முடிவதுடன், ஒரு அலுவலகத்திலுள்ள பலவிதமான வேலைத்திட்டங்களையும் இத்தகைய மென்பொருள் ஊடாக அணுக முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இம் மென் பொருளானது MS - Excel, MS - Access, MS - Word, MS - Powerpoint, MS - Outlook எனப்படுகின்ற உப மென்பொருட்களாக வகைப்படுத்தப்பட்டு செயற்படுகின்றது. ஒவ்வொரு மென்பொருள் தொகுப்பும் வேறுபட்ட தன்மையைக் கொண்டதும் ஒன்றுடன் ஒன்று இணைந்து பயன்படுத்தக்கூடிய வசதியையும் கொண்டதாக விளங்குகின்றது. அந்த வகையில் MS - Excel என்பது கணக்கியல், கணிதவியல், புள்ளி விபரவியல் போன்ற துறைசார்ந்தவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது. இக்கட்டுரையின் நோக்கம் கணக்கியல் சார்பாக பெறுமானத்தேய்வு சார்பில் MS - Excel என்ற மென்பொருள் எவ்வகையில் பிரயோசனமாக அமையும் என்பதை வெளிப்படுத்துவதாகும். அந்த வகையில் கணக்கியலில் பெறுமானத் தேய்வு என்பது ஒரு முக்கிய விடயம். ஒரு நிறுவனத்தின் நீண்டகால பயன்பாட்டிற்கு வாங்கப்படும் சொத்தொன்று (உ+ம் கணனி) கால முதிர்ச்சி, அதன் உட்பாகங்கள், மேற்பாகங்கள் பழுதடைதல், தொழில் நுட்ப மாற்றம் போன்ற காரணங்களால், ஆண்டு தோறும் அதன் பெறுமதியானது குறைவடைந்து செல்லும். இவ்வாறு வருடந்தோறும் ஏற்படும் இழப்பே பெறுமானத்தேய்வு (Depreciation) என அழைக்கப்படுகின்றது. இப்பெறுமானத் தேய்வினைக் கணிப்பதற்குப் பல்வேறு வகையான முறைகள் பின்பற்றப்படுகின்றது. அவற்றில் சில,

A நேர்கோட்டு முறை

B ஆண்டு இலக்கங்களின் கூட்டுத்தொகை முறை

C ஒடுங்குபாக மீதி முறை

மேற்குறிப்பிட்ட 3 முறைகளும் எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பதையும், அதனை Excel மென்பொருள் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு தீர்ப்பனவு செய்யலாம் என்பதையும் இக்கட்டுரை வெளிப்படுத்து கின்றது. மாணவர்கள் தமது கணக்கியல் தேவைக்கு எவ்வாறு, எந்த சந்தர்ப்பத்தில் எந்த இடத்தில் இதனைப் பயன்படுத்த வேண்டும் என்பது Excel மென்பொருளைப் பூரணமாகக் கற்று அதனைப் பிரயோகிக்கும் ஆற்றலைப் பெற்றுக்கொள்வதில் தங்கியுள்ளது.

Excel மென்பொருளில் அதன் பாவனையாளர்களின் தேவைக்கேற்பப் பல்வேறு வகையான நிகழ்ச்சித்திட்டங்கள் (Program me) உள்ளடக்கப்பட்டுள்ளது. பொதுவாக அவை Functions என அழைக்கப்படுகின்றது. அத்தகைய Function களும் அதன் தன்மைக்கேற்ப ஒவ்வொரு வகையாக வகைப்படுத்தப்படுகின்றது. உதாரணமாக,

1. Statistical Functions
(புள்ளிவிபரவியல் சம்பந்தமான விடயங்களிற்கு)
2. Mathematical Functions
(கணிதவியல் சம்பந்தமான விடயங்களிற்கு)
3. Financial Functions
(கணக்கியல், நிதியியல் சம்பந்தமான விடயங்களிற்கு)

இக்கட்டுரையில் அணுகப்படும் பெறுமானத்தேய்வு சம்பந்தமான Function கள் யாவும் Financial Functions என்ற தலைப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட 3 பெறுமானத்தேய்வு கணிப்பீட்டு முறைகளுக்கும் உருவாக்கப்பட்ட 3 Functions களும் முறையே,

1. SLN (Straight Line Method) - நேர்கோட்டு முறை
2. SYD (Sum of the Years Digit Method) ஆண்டு இலக்கங்களின் கூட்டுத் தொகை முறை
3. DB (Fixed Declining Balance Method) ஒடுங்குபாக மீதி முறை

## A) நேர்கோட்டு முறை
## (Straight Line Method)

சொத்தில் ஏற்படுகின்ற பெறுமானத்தேய்வானது ஆண்டு தோறும் மாற்றமடைவதில்லை என்பதை அடிப்படையாகக் கொண்டு சொத்தின் கொள் விலையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடும் முறை இதுவாகும். இதனை கீழ் வரும் உதாரண விளக்க மூலம் காணலாம்.

சொத்தொன்றின் கிரயம்
(Cost of Asset) 10000/=
அதன் கழிவுப் பெறுமதி
(Salvage Value) 256/=
பயன்தரு ஆயுட்காலம்
(Estimated Useful Life time) 4 years

### கணிப்பீட்டு முறை

$$\frac{\text{சொத்தின் கிரயம் - கழிவுப் பெறுமதி}}{\text{ஆயட் காலம்}}$$

$$\frac{10000-256}{4}$$

$= 2436/-$

Note:-

* சொத்தின் கிரயம் என்பது அதனைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட சகல மூலதனச் செலவுகளையும் குறிக்கும்.

* சொத்தின் கழிவுப்பெறுமதி என்பது சொத்தின் ஆயுட்காலம் முடிவடையும் போது அதனால் தேறக்கூடிய பெறுமானத்தைக் குறிக்கும்.

* சொத்தின் ஆயுட்காலம் என்பது குறித்த சொத்தினால் பயன் கிடைக்கவுள்ள மதிப்பீட்டுக் காலமாகும்.

மேலே விளக்கப்பட்ட முறையினை Excel மென்பொருளில் உள்ள SLN என்ற Function மூலம் தீர்ப்பனவு செய்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Function Name

SLN

Returns the Straight Line depreciation of an asset for one period

Function Syntax

SLN (Cost, Salvage, Life)

Note:-

Syntax என்பது ஒரு பாவனையாளர் குறித்த Function ஐ Excel மென் பொருளில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற முறையை வெளிப்படுத்துவதாகும். மேற்குறித்த Function ஐ Excel மென் பொருளில் குறித்த or பொருத்தமான ஒரு செல்லில் (cell)= (Equal) எனப்படும் sign ஐ பொறித்து தரவுகளை உரிய ஒழுங்கில் வழங்குவதன் மூலம் விடைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

Example:

= SLN (10000, 256, 4)

= 2436/-

**B) ஆண்டு இலக்கங்களின் கூட்டுத் தொகை முறை**

(Sum of the years digit method)

கொள்வனவு செய்யப்படும் சொத்தானது வாங்கப்பட்ட காலத்திலிருந்து அதன் ஆயுட்காலம் வரை மொத்தமாகப் பயன்படும் காலத்தினைக் கூட்டி (இதுவே ஆண்டு இலக்கங்களின் கூட்டுத்தொகை எனப்படும்) அதனை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு கணிப்பிடப் படும் முறை இதுவாகும். இம்முறை மூலம் கணிக்கப்படும் பெறுமானத்தேய் வானது ஆரம்பத்தில் கூடுதலாகவும், பின்னர் இறங்கு வரிசையாக படிப்படி யாகக் குறைவடைந்து செல்லும் தன்மை யினைக் கொண்டிருக்கும். இதனை கீழ் வரும் விளக்க அட்டவணை மூலம் காண லாம்.

Note:-

தரவுகள் யாவும் நேர்கோட்டு முறையில் தரப்பட்ட தரவுகள் எனக் கொள்க

| ஆண்டு | ஆண்டுக்கானமொத்தபயன் | பெறுமானத்தேய்வு |
|---|---|---|
| 1ம் ஆண்டில் | 4 | (10000-256)*4/10=3897.60 |
| 2ம் ஆண்டில் | 3 | (10000-256*3/10=2923.20 |
| 3ம் ஆண்டில் | 2 | (10000-256)*2/10=1948.80 |
| 4ம் ஆண்டில் | 1 | (10000-256)*1/10=974.40 |
| | | 9744.00 |
| Sum of the years 10 | கழிவுப் பெறுமதி | 256.00 |
| | சொத்தின் மொத்தக் கிரயம் | 10000.00 |

மேற்படி அட்டவணையின் படி 1ம், 2ம், 3ம், 4ம் ஆண்டுக்கான பெறுமானத் தேய்வுகள் முறையே 3897.60 சதம், 2923.20 தசம், 1948.80 சதம், 974.40 சதம் பெறப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். இப்பெறுமான தேய்வுகளின் மொத்த பெறு மதியோடு (இதுவே பெறுமானத் தேய்வு ஒதுக்கமாக ஐந்தொகையில் காட்டப்படு கின்றது) கழிவுப் பெறுமானத்தைக் கூட்ட வரும் பெறுமதி சொத்தின் கிரயத்திற்குச் சமனாக இருக்கும்.

மேலே விளக்கப்பட்ட முறை தவிர கீழ்வரும் சமன்பாட்டின் மூலமும் இதற்குரிய பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

$$\frac{(Cost - Salvage) * [(Life - Per) + 1)] * 2}{(Life)\ (Life + 1)}$$

(2ம்) ஆண்டுக்கான பெறுமானத்தேய்வைக் கணிப்பிடுவோமாக இருந்தால்.

$$\frac{(10000 - 256)\ [(4-2) + 1] * 2}{(4)\ (4+1)}$$

$$= \frac{9744*6}{20}$$

= 2923.20/=

மேலே விளக்கப்பட்ட முறையினை Excel மென்பொருளில் உள்ள SYD என்ற function மூலம் தீர்ப்பனவு செய்து கொள் ளலாம்.

Function Name

SYD

Returns the sum of years digits depreciation of an asset for a specified period.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Function Syntax**
SYD (Cost, Salvage, Life, Per)

Example:

=SYD(10000,250,4,1)-3897.60 (1ம் வருடம்)
=SYD(10000,256,4,2)-2923.20 (2ம் வருடம்)
=SYD (10000,256,4,3)-1948.80 (3ம் வருடம்
= SYD (10000,256,4,4)-974.40 (4ம் வருடம்)

## ஒடுங்குபாக மீதி முறை (Fixed Declining Balance Method)

சொத்தின் தேறிய பெறுமதியில் பெறுமானத்தேய்வு கணிக்கப்படும் முறை இதுவாகும். தேறிய பெறுமதி என்பது சொத்தின் கிரயத்தில் இருந்து ஏற்கனவே செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கத்தினைக் கழிக்க வரும் பெறுமதியைக் குறிக்கும். தேறிய பெறுமதியில் இருந்து பெறுமானத்தேய்வினைக் கணிப்பதற்கு ஓர் நிலையான பெறுமானத்தேய்வு வீதமானது முதலில் கீழ்வரும் சமன்பாட்டின் மூலம் கணிக்கப்படல் வேண்டும்.

$R = 1 - \sqrt[n]{S/C}$

$= 1 - \sqrt[4]{256/10000}$

$= 1 - \frac{4^{4*1/4}}{10^{4*1/4}}$

$= 1 - 4/10$

$= 6/10$ இதனை வீதமாக்கினால் $6/10*100$

$= 60\%$

| ஆண்டு | கொள்விலை | பெறுமானத்தேய்வு | தேறிய பெறுமதி | பெறுமானத்தேய்வு |
|---|---|---|---|---|
| 1ம் ஆண்டு | 10000 | 0000 | 1000 | 10000*60/100=6000 |
| 2ம் ஆண்டு | 10000 | 6000 | 4000 | 4000*60/100=2400 |
| 3ம் ஆண்டு | 10000 | 8400 | 1600 | 1600*60/100=960 |
| 4ம் ஆண்டு | 10000 | 9360 | 640 | 640*60/100=354 |
| | | | Total provision of Asset | 9744 |
| | | | Salvage Value of Asset | 256 |
| | | | Cost of Asset | 10000 |

மேலே விளக்கப்பட்ட முறையினை Excel மென்பொருளில் உள்ள DB என்ற function மூலம் தீர்ப்பனவு செய்து கொள்ளலாம்.

Function Name

DB

SYNTAX
DB (Cost, Salvage, Life, Per)
Example

=DB(10000,256,4,1) 6000/-(1ம் வருடத்திற்குரியது)
=DB(10000,256,4,2) 2400/-(2ம் வருடத்திற்குரியது)
=DB(10000,256,4,3) 960/-(3ம் வருடத்திற்குரியது)
=DB(10000,256,4,4) 354/-(4ம் வருடத்திற்குரியது)

**முடிவுரை:**

இக் கட்டுரையில் கணக்கியல் தொடர்பாக பெறுமானத்தேய்வு எனும் ஒரு விடயத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இதே போல் பல்வேறு கணக்கியல் விடயங்களுக்கு Excel மென்பொருளை இலகுவாகப் பயன்படுத்த முடியும். மேலும் கணனி சம்பந்தமான சில ஆங்கில சொற் பதங்களுக்கு தமிழில் தேடல்கள் குறைவாக இருப்பதன் காரணமாக அப்படியே பயன்படுத்தப்பட்டுள்ளது.

***T. Aravinthan***
(Course Manager I.T Park)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசம் குன்றா "வரவு மலர்" வருகை கண்டு
அளவில்லா ஆனந்தம் அடைகின்றோம்!

போட்டோ பிரதி சேவை
VCD வாடகை, கொப்பி வாடகை,
தொலைபேசி




MILLENNIUM
*Audio, Video*
*CENTER*

பழைய, புதிய, பக்திப்பாடல்
றெக்கோடிங்.

238, Kasthuriar Road, Jaffna
T.P 021 - 222 3646

இந்துவின் இணையற்ற இம்மலர்
இடையறாது மலர இறைவனை
வேண்டுகின்றோம்.

DEALERS IN:- Building Meterials

SRI KUMARAN
HARD WARES

*[Asbestes sheets, Cements,*
*Round iron, Tore steel, Angle iron,*
*Flat iron, G.I.Pipes, Est.]*

Telephone:- 2798

83 Stanley Rd. Jaffna.

தங்க மகன் "வரவு" விறுநடை போட்டு
வருக வருக என வாழ்த்துகின்றோம்.

"புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும்
பொன்னகை பேரழகு"

ஆம்! அப்பொன்னாலான நகைகளை
உங்கள் எண்ணம் போல் அணிந்திட
நீங்கள் நாட வேண்டிய இடம்




அசோகா நகை அகம்



இல. 111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

எண் திசையும் திகட்டாத மணம்
பரப்பும் "வரவே" நீ வருக.

சகல விதமான பலசரக்குப்
பொருட்களையும் மலிவாக பெற்றுக்
கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்




ஸ்ரீ சக்தி ஸ்ரோஸ்
SRI SAKTHY STORES

310,A Hospital Road,
Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தால் அழியாத இந்துவின்
வணிகப் பொக்கிஷம் "வரவு" வளர்ந்து
நீரூழி வாழவேண்டும்.

## சன்லைற் றைக்கிளினர்ஸ்

★ தரமான போட்டோஸ்ரற் பிரதிகள்.
★ அடையாளஅட்டை கவரிடுதல்.
★ 60 வருட றைகிளினர்ஸ்

இம் மூன்றும் இணைந்த சேவையை
ஒரே இடத்தில் பெற்றுகொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்.

**பஸ்தரிப்பு நிலையம்,
யாழ்ப்பாணம்.**

---

தங்க மகன் இவன் எழிலை காலம்
வாழ்த்தட்டும்.

**மென்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு
எழிலூட்டும் அசல் 22 கரட் தங்க
நகைகளுக்குச் சிறந்த இடம்**



## புதிய நவீனா நகையகம்



ஓடர் நகைகள் குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.

## New Navena Nakaiyakam

இல. 189. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
*T.P 0777 - 115 625*

---

தங்க மகன் "வரவிற்கு" எம் உளமார்ந்த
நல்வாழ்த்துக்கள்

**நகையுலக நவீன டிசைன்களின்
அறிமுகத்தில் அபார முன்னோடிகளின்
அதி உன்னத தயாரிப்புக்கள்
அழகிய தங்க வைர
ஆபரணங்களுக்கு**



## நியூ ஆனந்தா ஜுவல்லறி



நவநாகரிக நங்கையர் விரும்பும் தரமான
22 கரட் தங்கநகைகளுக்கு நம்பிக்கையோடு
நாடுங்கள்.

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

With Best Wishes from

## DHL Express



*உலகளாவிய ரீதியாக 220 நாடுகளில் துரித
விநியோக சேவை.*

மேலதிக விபரங்களுக்கு
M/S Cosmos Marketing Services

*200, K.K.S Road,
Jaffna.
T.P: 222 - 5461*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வும் உள்ளக சுயநிர்ணயமும்

## பொதுச் சர்வதேச சட்டத்தின் அடிப்படையிலான ஓர் அலசல்

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை எட்டும் முயற்சிக்கான அடித்தளம் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது இடப்பட்டுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பேச்சுவார்த்தை முயற்சிகளை ஆரம்பித்த காலம் முதலாகவே பேச்சு வார்த்தைகள் தொடர்பான நிகழ்ச்சி நிரலில் அரசியல் தீர்வை எட்டுவதற்கான வழிமுறைகள் உட்பட "அடிப்படை விடயங்களுக்கே (Core Issues) முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்" என்று பிரதான எதிர்க்கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணி வலியுறுத்தி வந்தாலும், இத்தனை விரைவாக, குறிப்பாக சமஷ்டியடிப்படையிலான தீர்வு ஒன்றினை எட்டுவதற்கு இரு தரப்புகளும் கொள்கையளவில் இணங்கியுள்ளமை வியப்பளிப்பதும் மகிழ்ச்சிகரமானதுமாகும். மேலும் இத்தகைய சமஷ்டியடிப்படையிலான தீர்வைக் காணும் முயற்சியானது உள்ளக சுயநிர்ணயக் (internal Self-determination) கோட்பாடோடு இணைத்துப் பேசப்பட்டுள்ளமை முக்கியத்துவம் நிறைந்த ஒன்றாகும். ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் முடிவில் நோர்வே அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் இஃது பின்வருமாறு தெளிவுப் படுத்தப்பட்டுள்ளது:

"Responding to a proposal by the leadership of the LTTE, the parties agreed to explore a solution founded on the principle of internal - Self determination in areas of historical habitation of the Tamil speaking peoples, based on a federal structure within a united Sri Lanka."

" தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமையின் முன்மொழிவொன்றிற்குப் பதிலளிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட தரப்புகள், தமிழ் பேசும் மக்கள் பூர்வீகமாக வாழும் பிரதேசங்களில் உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டினை ஆதாரமாகக் கொண்ட தீர்வொன்றை ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையில் எட்டுவது குறித்து ஆராய இணங்கின."

கடந்த ஒரு வருட காலமாக. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை எட்டும் முயற்சிக்கான சம்பாஷணைகளில், அவை எம்மட்டத்திற் குரியன வாயினும் உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டிற்கு வழங்கப்பட்ட முக்கியத்துவமும் தற்போது சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் பேச்சுவார்த்தை மேடையிலிருந்து இக்கோட்பாடு வெளிப்படுத்தப்பட்டிருத்தலும் உள்ளக சுயநிர்ணயக் கோட்பாடு தொடர்பாகப் பலத்த வாதப் பிரதி வாதங்களை முடுக்கிவிட்டுள்ளன. சர்வதேச சட்டத்தில் (International Law) உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டிற்குள்ள நிலையம், இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றை எட்டும் முயற்சியில் இக்கோட்பாட்டின் பிரயோகம் அஃது ஒரு சட்டவழிக் கோட்பாடு (Legal Principle) என்ற அடிப்படை யிலானதாகவோ அல்லது ஓர் அரசியல் எண்ணக்கரு (Political Concept) என்ற அடிப்படையிலானதாகவோ அமைய வேண்டும் என்ற பேதம், உள்ளக சுயநிர்ணயம் புறவியலான சுயநிர்ணயமாக (External Self-determination) மாறும் சந்தர்ப்பம் என்பன தொடர்பான வாதங்கள் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக முக்கியமானவையும் விடை காணப்பட வேண்டியவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். இவ் வாதங்களுக்கான விடைகள் சுயநிர்ணயக் கோட்பாட்டின் தோற்றம் மற்றும் வளர்ச்சி, சர்வதேசச் சட்டத்தில் அதற்குள்ள முக்கியத்துவம் ஓர் தேசத்தின் ஆள்புல ஒற்றுமைக்கும், இக்கோட்பாட்டிற்குமுள்ள தொடர்பின் தன்மை உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டிற்கான கருவறை என்பன தொடர்பாக ஆராய்வதன் மூலம் இங்கு பெற உத்தேசிக்கப்படுகின்றன.

## சுயநிர்ணயக் கோட்பாடு தோற்றமும் வளர்ச்சியும்

சுயநிர்ணயக் கோட்பாடு 18ஆம் நூற்றாண்டில் மறுமலர்ச்சிக் கால சிந்தனையாளர்களது எண்ணத்தில் தோன்றிய ஒன்றாகக் கருதப்படலாம். தனிமனித சுதந்திரத்திற்கும் தனியாள் வாதத்திற்கும் முக்கியத்துவம் அளித்த இவர்களது சிந்தனைகள் ஏகாதிபத்தியத்தின் சின்னங்களான குடியேற்றவாதத்திற்கும் (Colonialism) கொடுங்கோல் முடியாட்சிக்கும் (Monarchy) எதிராக அப்போது மேற்குலகில் கிளம்பியிருந்த உணர்வுகளுக்கு வலுவூட்டுவனவாக அமைந்தன. இவற்றின் விளைவுகள் அந்நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட அமெரிக்க சுதந்திரப் புரட்சியும் பிரெஞ்சுப் புரட்சியும் ஆகும். அமெரிக்க சுதந்திரப் புரட்சியின் பிரசவமான அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் (Declaration of Independence) சுயநிர்ணயக் கோட்பாட்டு வளர்ச்சியில் ஓர் மைல் கல்லாகும்.

தொமஸ் ஜெபர்ஸன் (Thomas Jefferson) என்பவரால் வரையப்பட்ட இப் பிரகடனமானது அவரால் மூன்று பகுதிகளாக இனங்காட்டப்பட்டது. முதலாவது பகுதி மக்கள் சுதந்திரமுடையவர்களாக வாழ்தலுக்கும் அதனைப் பெற்றுக் கொள்வதற்காகப் போராடுவதற்கும் உள்ள உரிமை பற்றி குறிப்பிடுகிறது. இரண்டாவது பகுதி அவ்வாறு போராடுவதற்கு மக்களைத் தூண்டிய காரணிகளையும் அல்லது போராட்டத்திற்கான நியாய வாதங்களையும் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. மூன்றாவது பகுதி சுதந்திரத்தைப் பிரகடனம் செய்வதற்கான வாசகங்களை உள்ளடக் கியுள்ளது.

இவ் அமெரிக்க சுதந்திரப் பிரகடனமானது உலகளாவிய ரீதியில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சிந்தனைக்கும் அதனுடைய செயற்பாட்டு ரீதியான விளைவுகளுக்கும் காரணமாகியது. இப்பிரகடனத்தினுடைய தாக்கம் பிரெஞ்சுப் புரட்சியிலும் அதன் விளைவாகத் தோற்றுவிக்கப்பட்ட பிரெஞ்சுத் தேசிய சபையினால் (National Assembly) நிறைவேற்றப்பட்ட "மனிதனதும் குடிமகனதும் உரிமைகள்" (Rights of Man and of the Citizen) பிரகடனத்திலும் முதன் முதலில் பிரதிபலித்தது. அமெரிக்காவில் கறுப்பினத்தவர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடுவதற்கும் இப்பிர கடனமே ஊற்றாக விளங்கிற்று. (இப்போராட்டத்தைக் கறுப்பினத்தவர்கள் தமது தேசத்திற்குட்பட்ட வகையில் சுயநிர்ணயக் கோட்பாட்டை முன்வைத்தே நடாத்தினர் என்பது முக்கியமானது) பிரகடனத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த "நீதியின் பாற் செயற்படாத அரசாங்கத்துக்கெதிராகப் போராடிப் பிரிந்து செல்வதற்கான உரிமை" என்ற வாசகத்தைக் காரணம் காட்டியே ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தென்பகுதியினர் கூட்டுச் சமஷ்டியிலிருந்து (Confederation) பிரிந்து செல்வதை நியாயப்படுத்த உதவியது. பிரித்தானியக் காலனி யாதிக்கத்திற்கெதிராகப் போரிட்டு சுதந்திரமடைந்த முதல் நாடு என்ற வகையில் அமெரிக்கா ஏனைய காலனியாதிக்கத்திற்குட்பட்ட நாடுகளின் விடுதலைப் போராட்டத்திற்கான முன் மாதிரியாக அமைந்தது. வியட்னாம் சுதந்திரமாயிருத்தலுக்கும் ஒன்று பட்டிருத்தலுக்கும் போராடிய ஹோ-சி-மின் (Ho-Chi-Min) அவர்களும் ஒரு சந்தர்ப்பத்தில் அமெரிக்கச் சுதந்திரப் போராட்டமும் பிரகடனமும் தனக்கு வழிகாட்டியாக அமைந்தன எனக் குறிப்பிட்டிருந்தார்.

முதலாம் உலக மகா யுத்தத்தின் முடிவில் மீளவும் ஒரு உலக மகா யுத்தத்தைத் தவிர்ப்பதற்காகவும் இவ்யுத்தத்தின் விளைவாக ஆஸ்திரிய, ஹங்கேரி மற்றும் ஒட்டமான இராச்சியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறுண்டமையால் உருவாகிய புதிய தேசங்கள் தொடர்பான பிரச்சினைகளிற் குத் தீர்வு காண்பதற்குமென அப் போதைய ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சனாதிபதி வூட்றோ வில்சன் (Woodrow Wilson) அவர்களால் பதினான்கு அம்சத் திட்ட மொன்று வகுக்கப்பட்டது. இத்திட் டத்தில் புதிதாக உருவாகிய தேசங்களி னதும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் பூகோள பாதுகாப்பையும் சமாதானத்தையும் பேணுவதற்கென ஓர் கூட்டமைவம் தோற்று விக்கப்பட வேண்டுமெனவும் வில்சன் வலியுறுத்தினார். பின்னையது உலக அரசியல் பீடங்களினால் அங்கீக ரிக்கப்பட்டு சர்வதேசச் சங்கம் (League of Nations) ஒன்று உருவாக்கப்பட்டது. எனி னும் இச்சங்கமானது வில்சன் எடுத்துக் கொண்ட பெரு முயற்சி வெற்றியளிக் காவகையில் சுய நிர்ணயக் கோட்பாட்டை அங்கீகரிக்க மறுத்தது. இஃது சுய நிர்ண யக்கோட்பாடு ஓர் சட்ட வழிக்கோட்பாடு அன்று எனக் கொள்ளப்பட்டமையால் ஏற் பட்ட விளைவாகும். 1920 ஆம் ஆண்டு சுயநிர்ணயக் கோட்பாட்டோடு தொடர்பு டைய வழக்கொன்றில் வழங்கிய தீர்ப்பில் சர்வதேச சட்டவல்லுநர்கள் ஆணைக் குழுவும் (International Commission of Jurists) மற்றும் சர்வதேச தொடர்பாளர் கள் குழுவினரும் (Committee of Rapp-orteure) இக்கோட்பாடு சட்ட வழியானது அன்று எனவும் அது வெறுமனே ஓர் அரசியல் எண்ணக்கருவாகவே கருதப் பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர்கள் குடியிருந்த தீவொன்று பின்லாந்து வசமிருந்தமை தொடர்பான பிரச்சினை சங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது பின்னையது அத்தீவின் மீதான பின்லாந்தின் இறை மையை அங்கீகரித்ததோடு அதனோடு இணைந்து சிறுபான்மையினர் உரிமை களும் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டது. இவ்வுதாரணமானது சுயநிர் ணயக் கோட்பாடு ஓர் சட்டவழிக் கோட்பா டாகவன்றி ஓர் அரசியல் எண்ணக்கருவா கவே கொள்ளப்படும் போது வலுக் குறைந்திருத்தலை தெளிவுற அவதானிக் கலாம்.

இரண்டாம் உலக மகா யுத்தத் தின் பின்னர் ஐக்கிய நாடுகள் சபை தோற்றம் பெற்றமையும் இஃது சர்வதேச சட்டத்திற்குக் கொடுத்த புதியதோர் உந்துதலும் சுயநிர்ணயக் கோட்பாட்டிற் குப் புதிய பரிமாணங்களை அளித்ததோடு அதனை ஓர் சட்டவழிக் கோட்பாடு என வும் ஓர் மனித உரிமை என்றளவிற்கும் உயர்த்திற்று. இன்று சர்வதேசச் சட்டத் தில் சுயநிர்ணயம் தொடர்பான வியாக்கி யானங்கள் பிரித்தறிய முடியாதனவாயுள் ளன.

## சர்வதேசச் சட்டத்தில் சுயநிர்ணயக் கோட்பாடு

சர்வதேசச் சட்டத்தின் மூலங் களில் முக்கியமானவை ஐக்கிய நாடுகள் சபை அங்கத்துவ நாடுகளாலும் அதனுடைய பிரதேச வாரியான நிறுவனங் களாலும் (Regional bodies) உருவாக்கப் பட்ட இணக்க ஒப்பந்தங்கள் (Covenents), உடன்படிக்கைகள் (Treaties), சமவாயங் கள் (Conventions) மற்றும் பிரகடனங்கள் (Declarations) போன்றனவாகும். குறிப் பாக ஐக்கிய நாடுகள் சபையினால் உருவாக்கப்படும் இத்தகைய செய லொழுங்குகள் அவை பெரும்பாலான நாடுகளால் அங்கீகரிக்கப்படும் தன்மையு டையனவாதலால் இவற்றிற்கு சர்வதேச அங்கீகாரம் உண்டு. இவ்வாறாக உரு வாக்கப்பட்ட சர்வதேச சாதனங்களில் 1966ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு 1976 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்த அரசியல் மற்றும் குடிமையியல் உரிமை களுக்கான சர்வதேச இணக்க ஒப்பந்தம் (International Convenent on Civil and Political Rights - ICCPR) மற்றும் பொரு ளாதார, சமூக, கலாசார உரிமைகளுக் கான சர்வதேச இணக்க ஒப்பந்தம் (International Convenent on Economic, Social and Cultural Rights - IESCR) எனும் இரண்டும் சுயநிர்ணயக் கோட்பாட்டைப் பொறுத்த வரையில் அதீத முக்கியத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வமுடையவை. இவற்றைத் தவிர ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச்சபையினால் 1960 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட குடியேற்றவாத நாடுகளுக்கும் மக்கள் குழுமங்களுக்கும் சுதந்திரம் வழங்குதல் தொடர்பான பிரகடனம் (Declaration of the Granling of Independence to Colonial Counlries and Peoples - GA Resolution 1514 cxv) மற்றும் 1970ஆம் ஆண்டு நிறை வேற்றப்பட்ட (நாடுகளிடையே) நட்புறவு களை மேம்படுத்தல் தொடர்பான சர்வ தேச சட்டத்தின் தத்துவங்கள் அடங்கிய பிரகடனம் (Declaration on Principles of International Law concerning friendly Relations) என்பன முக்கியமானவை.

1948ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்ட சர்வதேச மனித உரிமைகள் பிர கடனம் (Universal Declaration of Human Rights UDHR) முன்வைத்த மனித உரிமைகள் தொடர்பான உள்ளீடுகளை விரிவுபடுத்துவதாக அமையும். மேற் குறிப்பிட்ட இணக்க ஒப்பந்தங்களில் சிவில் மற்றும் குடிமையியல் சார் உரிமை கள் தனிநபரின் உரிமைகளோடு தொடர்பு பொருளாதார, சமூக, கலாசாரம் சார் உரிமைகள் தனிநபர்கள் கூட்டாக அநுப விக்கும் கூட்டு உரிமைகள் (Collective Rights) எனும் வகையைச் சார்ந்தவை. இவற்றின் முன்னையது (ICCPR) பெரும ளவிலான சட்ட அங்கீகாரமுடைய ஒன் றாக விளங்குகின்றது. இவ்விணக்க ஒப்பந்தத்திற்கு இணைக்கப்பட்ட முதலா வது விருப்பத் தெரிவுக்குரிய பின்னேடு (First Optional Protocol) தனிநபர்கள், இணக்க ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள் ளன. தமது உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் இதற்கென அமைக்கப்பட்ட மனித உரிமைக் குழுவினரிடம் (Human Rights Committee) முறையிட வகை செய் கிறது. இதன் காரணமாக இப்பின்னேட் டில் கையெழுத்திட்ட நாடுகள் யாவும் சர்வதேச நெறிமுறைகளுக்கு உட்பட்டு நடத்தல் அவசியமாக்கப்பட்டதோடு தமது சுதேச சட்டங்களிலும் இந்நெறிமுறை களைப் புகுத்துமாறு வலியுறுத்தப்படுகின் றது. இஃது இணக்க ஒப்பந்தத்தையும் அதன் வழியாக அவற்றில் குறிப்பிடப்பட் டுள்ள உரிமைகளுக்கும் சட்டப் பெறுமதி யினை (Legal Value) வழங்க முயற் சிக்கின்றது.

மனித உரிமைகள் தொடர்பான இரு சர்வதேச இணக்க ஒப்பந்தங்களும் தமது முதலாவது உறுப்புரையிலேயே (Article) சுயநிர்ணய உரிமையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இவ்வுறுப்புரையானது மேற்குறிப்பிட்ட இரு இணக்க ஒப்பந்தங்க ளுக்கும் பொதுவாக அமைவதனால் அவை வெளிப்படுத்தும் இரு வகைப்பட்ட மனித உரிமைகளுக்கும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு பொதுவாக அமை தல் புலப்படும். இவ்வுறுப்புரையின் முத லாவது பந்தி பின்வருமாறு சுயநிர்ணயம் என்ற பதத்தின் உள்ளடக்கத்தைப் வரை யறுத்தது.

" All peoples have the right to self determination. By virtue of that right they freely determine their political status and freely pursue their economic, social and cultural development."

"சகல மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. அவ்வுரிமையின் தகுதி யினால் அவர்கள் தமது அரசியல் நிலை யைத் தீர்மானிப்பதோடு தமது பொருளா தார, சமூக, கலாசார அபிவிருத்தியை சுய மாக முன்னெடுப்பர்."


சுயநிர்ணயக் கோட்பாட்டை வரையறுக்க முயற்சிக்கும் இவ்வாசகமா னது காலனியாதிக்க நாடுகளுக்கும் அவற்றின் மக்களிற்கும் சுதந்திரத்தை வழங்குதல் தொடர்பான பிரகடனத்திலும், அதனது இரண்டாவது உறுப்புரையில் இடம் பெறுகின்றது. இணக்க ஒப்பந்தத் தின் முதலாவது உறுப்புரையின் இரண் டாவது பந்தி இவ்வுரிமையை அநுபவிப் பதில் எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப் படலாகாது என்று கூறுவதோடு மூன்றா வது பந்தி இவை தொடர்பாக அரசுகளிற் குள்ள கடமைகளைக் குறிப்பிடுகின்றது. இங்கு குறிப்பிடப்பட்ட பிரகடனத்தினு டைய ஏனைய உறுப்புரைகளும் சர்வ தேச சட்டத் தத்துவங்கள் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Varavu comes very Sweets

# Jaffna Cool Bar



Ice-cream
Cool Drinks

*446, Hospital Road,*
*Jaffna.*

வரவின் வரவு நல்வரவாகுக

இனுவை
# கனக தயாபரன்
பன்சி பலஸ்



அன்பளிப்பு மற்றும் அழகுசாதன பொருட்களை தங்கள் எண்ணம் போல நியாயவிலையில் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய இடம்.

64, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

*With the best compliments from*
# DART ENTERPRICE
Dealers in Electrical goods,
Fancy goods

* அன்பளிப்பு பொருட்களா?
* அழகு சாதன பொருட்களா?
* மின்சார உபகரணங்களா?
* இலத்திரனியல் பொருட்களா?

மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றிட!



# டாட் என்ரபிறைஸ்


11. 12 நவீன சந்தை உட்புறம்.
யாழ்ப்பாணம்.

*T.P: 3098*

உ
நாள்தோறும் உங்களுக்கு
பால் தரும் எங்களை ஒருவேளை உணவிற்காக் கொல்லலாமா?

பசுவதையை உடன் நிறுத்துவோம்

ஒவ்வொருவர் இல்லத்திலும் ஒரு கோமாதா
வீதம் பேணி பசுவை வணங்குவோம்
சைவத்தை வளர்ப்போம்.



# க. கு. கந்தையாபிள்ளை

318, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிரமணியனின் கடைக்கண் பார்வையில்
என்றோ ஒருநாள் யாழ்ப்பாணத்தில்
உதயமானது. இன்றும் புத்தக
விற்பனையில் முன்னோடியாகத்
திகழ்கின்றது.

அதுதான்

# ஸ்ரீ சுப்பிரமணிய புத்தக சாலை



பாலர் வகுப்பு முதல் பட்டதாரி
வகுப்பு வரை சகல பாடப்
புத்தகங்களையும் பெற்றிட

நீங்கள் விரும்பி நாடும் இடம்.

நீங்கள் விரும்பி நாடும் இடம்.

35, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்

*Compliments*
*from*

# Sri Lanka Cement Corporation

| CONCRETE PROJECT | CEMENT SALES UNIT |
|---|---|
| Vermban Lane | 631, K.K.S Road, |
| Urumpirai | Jaffna. |
| Tel: 222 2128 | Tel: 222 2239 |

High Quality Cement (SLS)
High Quality Concrete Products
Cement

KANKESAN CEMENT

50 YEARS OF EXPERIENCE

# AASIAN
## ELECTRONIC CENTRE





GENERAL ELECTRICAL
ELECTRONIC MERCHANTS
&
TRANSPORTERS



0777 - 785549
222-5446

**No 11/4 Staney Road,**
**Jaffna.**

வரவே நீ என்றும் மிளிர வாழ்த்துக்கள்

# ஸ்ரீ லங்கா புத்தகசாலை



67 வருட காலமாக தமிழ் பேசும்
மாணவச் செல்வங்களிற்கு ஒளியூட்டி
வழிகாட்டும் புத்தக நிறுவனம்.



(புகழ் பெற்ற புத்தகங்கள்,
உபகரண விற்பனையாளர்கள்)

234. கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்.
*T.P - 222-2573*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகடனத்தின் உறுப்புரைகளும் இணைக்க ஒப்பந்தத் தில் சுயநிர்ணயக் கோட்பாடு தொடர்பாக குறிப்பிடப்பட்டவை தொடா பாக விரிவாக ஆராய்கின்றன. இப்பிரகடனங்களின் சட்டப் பெறுமதி பற்றிக் குறிப்பிடும்போது இலண்டன் பல்கலைக்கழக சர்வதேசச் சட்டத்துறைப் பேராசிரியர் ஐவன் பிறவுன்ஸ் (Ivan Brownes) அவர்கள் தனது (Principles of Public International Law) (பொதுச் சர்வதேசச் சட்டத் தத்துவங்கள்) எனும் நூலில் அவை பரிந்துரைகளாகக் (Recommendations) கருதப்படும் தன்மையுடையவை அன்று எனவும் அவை ஐக்கிய நாடுகள் சபை சாசனத்திலிருந்து உயிர்ப்புப் பெறுவதால் சட்டப் பெறுமதி வாய்ந்தவை என்றும் குறிப்பிடுகின்றார்.

## சுயநிர்ணயக் கோட்பாடு:-

### அதனுடைய வரையறைகளும் தேசங்களின் ஆள்புல ஒருங்கிணைவும்

1945க்கு முன்னர் உலக அரசியல் ஒழுங்கில் சுயநிர்ணயக் கோட்பாட்டின் நிலையம் முன்னர் கூறப்பட்டது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் விளைவுகளும் 1945இல் ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றமும் உலகில் புதிய அரசியல் ஒழுங்கை ஸ்தாபித்தன. இதன் தாக்கம் சுயநிர்ணயக் கோட்பாடு தொடர்பாக அதுவரை காலமும் நிலவி வந்த அணுகுமுறையை மாற்றியமைப்பதில் வெற்றி கண்டன. ஆபிரிக்க ஆசிய நாடுகளில் முன்னெப்போதும் இல்லாத வகையில் முனைப்புப் பெற்ற காலணியாதிக்கத்திற்கெதிரான போராட்டங்களும் கம்யூனிச சக்திகளினது அழுத்தங்களும் இம்மாற்றத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்தின. இப்போராட்டங்களின் நியாயத்தன்மையை மதித்தே ஐ.நா. தனது ஆவணங்களில் சுயநிர்ணயக் கோட்பாட்டை ஓர் மனித உரிமையாகவும் ஓர் சட்டவழிக் கோட்பாடாகவும் வலியுறுத்தியது.

இத்தகையவோர் சூழலில் சுயநிர்ணயக் கோட்பாடு முக்கியத்துவம் பெற்றமையானது இயல்பாகவே அச்சூழலோடு மட்டும் தொடர்புபடுத்தி இக்கோட்பாடு பேசப்படுவதற்கு வழி வகுத்தது. அதாவது காலணியாதிக்க நாடுகளிற்கு சுதந் திரத்தை வழங்குதல் என்றளவிற்கு சுய நிர்ணயக் கோட்பாட்டை மட்டுப்படுத்தல் தவிர்க்க முடியாததாயிற்று. ஐ.நா. வின் குடியேற்றவாத நாடுகளிற்கு சுதந்திரத்தை வழங்குதல் தொடர்பான பிரகடனமும் இரு சர்வதேச இணைக்க ஒப்பந்தங்களும் சுய நிர்ணய உரிமை எல்லா மக்களுக்கும் பொருந்தும் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப் பட்டதாயினும் அது எவ்வளவு தூரம் நடைமுறையில் சாத்தியப்பட்டுள்ளது அல்லது சாத்தியப்படலாம் என்பது கேள்விக்குரியதே. இங்கு குறிப்பிடப்படும் "மக்கள்" எனும் பதத்திற்கு நாம் சாதாரணமாக வழங்கும் அரசியல் சமூக வரை விலக்கணத்தை வழங்கு வோமாயின் எல்லா மக்களும் சர்வதேச உரிமைகளின் நேரடி உள்ளீடுகளாகக் கருதப்படுதல் சாத்தியமாவதோடு சர்வதேசச் சட்டம் தொடர்பாக பார்வைகளும் வேறுபட்டிருக்கும் எனினும் இவை எதுவும் நிகழவில்லை. ஏனெனில் சுயநிர்ணயக் கோட்பாடு தொடர்பான வியாக்கியானங்களை குடியேற்றவாத நாடுகளிற்கு பொருந்து தலுக்கு அப்பால் விஸ்தரிக்க ஐ.நா. விரும்பவோ அநுமதிக்கவோ இல்லை. சுதந்திரமடைந்த தேசங்களின் ஆள்புல ஒருங்கிணைவு (Territorial Intergrity) மற்றும் இறைமையை (Sovereignty) பாதிக்கும் வகையில் சுயநிர்ணயக் கோட்பாட்டின் பிரயோகத்தை ஐ.நா. வன்மையாகக் கண்டிக்கின்றது. காலனியாதிக் கத்திற்குட்பட்ட தேசங்களிற்கும் மக்களிற்கும் சுதந்திரத்தை வழங்குதல் தொடர்பான பிரகடனத்தின் ஆறாவது உறுப்புரை இதனைப் பின்வருமாறு தெளிவுபடுத்தும்:

"Any attempt aimed at the partial or total disruption of the national unity and the territorial intergrity of a country is uncompatible with the purposes and principle of the charter of the UN."

"யாதாயினும் ஒரு நாட்டின் தேசிய ஐக்கியம் மற்றும் ஆள்புல ஒருங்கிணைவை பகுதியாக அல்லது முற்றாகப் பாதிக்கும் வகையிலமைந்த எவ்வித முயற்சியும் ஐ.நா. சபை சாசனத்தின் கோட்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் குறிக்கோள்களுக்கும் இணக்கமற்றது."

இக்கருத்தானது ஐ.நா. சாசனத்தின் உறுப்புரை 2(4) ஆகியவற்றிலும் பெரிதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மல்கம் என் ஷோ (Malcom N. Shaw) எனும் சட்ட அறிஞர் தனது 'International Law" (சர்வதேசச் சட்டம் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழக பதிப்பகம் - 4ஆம் பதிப்பு) எனும் நூலில்

'Self determination has also been used in conjunction with the principle of territorial intergrity so as to... prevent a rule permitting secession from independent states from arising."

"சுதந்திர அரசுகளிலிருந்து பிரிந்து செல்வதற்கான அனுமதியை வழங்கும் விதியொன்று எழுவதைத் தவிர்க்கும் வகையில் சுயநிர்ணயமானது ஆள்புல ஒற்றுமைக் கோட்பாடோடு இணைத்தே பயன்படுத்தப்படுகின்றது" என்றும்,

"It (self - determination) has been rejected as a principle conferring the right to secede upon identifiable groups within already independent states."

(இ∴து (சுயநிர்ணயம்) ஏலவே சுதந்திர அரசுகளாக விளங்குவனவற்றிலிருந்து பிரிந்து செல்வதற்கான உரிமையை இனங்காணப்படக்கூடிய குழமங்களிற்கு வழங்கும் கோட்பாடு என்பது நிராகரிக்கப்படுகின்றது)

என்றும் குறிப்பிடுகின்றார். காலனியாதிக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமடைந்திருக்கும் நாடுகளின் பொருளாதார நிலை கீழ்மட்டத்திலிருந்தமை காரணமாக அந்நாடுகளில் அடிப்படை மனித உரிமைகள் தாயினும் பேணப்படுதல் சாத்தியப்படாது என்பதை உணர்ந்து உள்நாட்டுக் குழப்பங்கள் மற்றும் வலுப்பெற்ற தேசங்களின் ஏகாதிபத்தியம் என்பன இந்நிலையை மேலும் மோசமாக்கிவிடும் என்ற அடிப்படையிலேயே இவ்வாறான ஏற்பாடுகளை ஐ.நா. சுயநிர்ணய உரிமையுடன் இணைத்துள்ளது எனலாம்.

## உள்ளக சுயநிர்ணயக் கோட்பாடு:

காலனியாதிக்கத்திற்குட்பட்டிருந்த நாடுகளில் பெரும்பாலானவை சுதந்திரம் பெற்று தனி அரசுகளாக மாறியுள்ளமை சுயநிர்ணயக் கோட்பாடு இதுவரை தன்னை உட்படுத்திக் கொண்ட சூழல் இல்லாதொழிந்து போயுள்ளமையை உணர்ந்து கொள்ள வேண்டிய கட்டத்திற்குத் தள்ளியுள்ளது. இதன் அர்த்தம் சுயநிர்ணயக் கோட்பாடு இன்றைய உலகில் வழக்கொழிந்து போய்விட்டது என்பதல்ல; மாறாக வரலாற்றின் பொருளாதார, சமூக, அரசியல் மாற்றங்களுக்கேற்ப அம்மாற்றங்கள் ஏற்படுத்தியிருக்கும் புதிய சவால்களை எதிர்கொள்ள வேண்டிய தேவையைக் குறித்து நிற்கின்றது. இது மனித உரிமைகள் என நாம் உள்ளடக்கும் யாவற்றிற்கும் பொருந்தும். இதனை ஜக்ஸ் மரிடயன் எனும் அறிஞர் தனது "Human Right Teachings" (மனித உரிமைகளைக் கற்பித்தல்) எனும் நூலில் (unesco நிறுவனத்தால் பதிப்பிக்கப்பட்டது) பின்வருமாறு குறிப்பிடுவார்:

"No declaration of human rights will ever be final or exhaustive. It will ever go hand in hand with the state of moral consciousness and civilization at a given moment of history... It remains.... a principal interest of humanity that such declarations should be renewed from century to century."

("மனித உரிமைகள் தொடர்பான எந்தவொரு பிரகடனமும் நிறைவானதாகவோ முடிவானதாகவோ அமைய மாட்டாது. அவை வரலாற்றின் தரப்பட்ட ஒரு நேரத்திற்கு மட்டுமே உரிய அறம் சார்ந்த பிரக்ஞை மற்றும் நாகரிகத்தோடு ஒத்திசைபவனாகவே அமையும். (எனவே) நூற்றாண்டுக்கு நூற்றாண்டு இப்பிரகடனங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது விருப்பை மனித சமுதாயம் கொண்டுள்ளது.)

மூன்றாம் உலக நாடுகளில் மனித உரிமைகளின் பேணுநிலை பெரும் பாலும் மறைப்பெறுமானமுடையதாக இருத்தல் மூடிமறைக்கப்பட முடியாதது. குறிப்பாக இந்நாடுகளில் பெரும்பாலா னவை பல்வேறான முரண் கூறுகளை உள்ளடக்கிய (Heterogeneous) நாடுக ளாக உள்ளமையால் கூட்டு உரிமைக ளில் (Collective Right) தலையானதாக விளங்கும் சிறுபான்மை உரிமைகள் தானும் இந்நாடுகளில் பேணுதல் சாத்தி யமற்றதாக இருந்து வருகின்றது. இதன் காரணமாக இன மற்றும் கலாசார அடையாளங்களின் (Ethnic and cultural identities) அடிப்படையிலான போராட்டங் கள் மூன்றாமுலக நாடுகளில் மலிந்தி ருக்கக் காணப்படுகின்றது. இப் போராட் டங்களிற்கான தீர்வு சுதந்திர நாடுகளை உருவாக்கல் என்ற முன் மொழிவைப் பவரும் பலவித காரணங்களுக்காக ஏற்றுக்கொள்வதில்லை. சுதந்திர நாடொன்றை நிறுவுதலுக்கு மாற்றாக ஒரு உறுதியான தளத்தையுடைய சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மாற்றீடுகள் என எதுவும் முன்வைக்கப்படவுமில்லை. இத்தகைய ஓர் வெறுமையை நீக்குதற்கு உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட் பாட்டை சிறந்த உள்ளீடாகப் பயன்படுத் தப்பட முடியும்.

நவ உலக அரசியல் ஒழுங்கிற் குப் பொருந்தும் வண்ணம் உள்ளக சுய நிர்ணயக் கோட்பாடு முக்கியத்துவப் படுத்தப்படுதல் வேண்டும் என்ற கருத்து புதுமை படைப்பது என்று குறிப்பிடப்படும் போது அது ஓரளவு ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாயினும் அக்கோட்பாடே புதுமை யானது என்ற வாதம் தவறானதும் வேடிக் கையானதுமாகும். சர்வதேச சட்ட வல்லு நர்கள் உள்ளக சுயநிர்ணயம் என்ற பதத்தை சில சந்தர்ப்பங்களில் உபயோ கித்தும் வேறு சில சந்தர்ப்பங்களில் உப யோகிக்காது விடுத்தும் இக்கோட்பாடு தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளமை அறியக் கிடைக்கின்றது.

பேராசிரியர், ஐவன் பிறவுன் லீ அவர்கள் சுயநிர்ணயக் கோட்பாட்டிற்கு வரைவிலக்கணம் தர முனைந்தபோது பின்வருமாறு குறிப்பிட்டார்:

"The right of cohesive national groups to choose for themselves a form of political organisation and their relation to other groups. This choice may be independence as a state, associations with other groups in a federal state or autonomy or assimilation in a unitary state".

("தமக்குரிய அரசியல் அமைவு வகையையும் மற்றைய குழுமங்களோடு தமக்குள்ள தொடர்புகளையும் தேர்வு செய்வதற்கு தீர்மானிப்பதற்கு பிணைப் புள்ள தேசிய குழுமங்களுக்கான உரிமை இத்தேர்வானது சுதந்திர அரசைப் பெறல், குழுமங்களுடன் இணைந்து ஒரு சமஷ்டி அரசை அமைத்தல், அல்லது ஒற்றை யாட்சிக்குட்பட்ட ஒன்றுபடல் அல்லது சுயாட்சி அலகை அமைத்தல் என்பன வரலாற்றில் யாதாயினுமொன்றிற்குப் பொருந்தலாம்".)

பேராசிரியர் பிறவுன் லீ தரும் இத்தகைய விளக்கத்தில் சுயநிர்ணயக் கோட்பாடு தேசக் கட்டமைவோடு (National Structure) தொடர்புரும் இரு வேறு சந்தர்ப்பங்களை அவதானிக்க லாம். பேராசிரியர் முதன்மையாக வைத்துக் குறிப்பிடும் புதிய சுதந்திர அரசைத் தோற்றுவித்தல் என்பது சுய நிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் தேசக் கட்டமைவிலிருந்து விடுபட்டு வெளிவாரியாகத் தமது அரசியல் அமை வினைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தைக் குறித்து நிற்கின்றது. இதனை வெளியக சுயநிர்ணயம் (External self determination) எனக் குறிப்பிடலாம். பேராசிரியர் குறிப் பிடும் ஏனைய தேர்வுகள் யாவும் (சமஷ்டி சுயாட்சி போன்றன) தேசக்கட்டமை விற்குள் தேசியக் குழுமங்கள் தமது அரசியல் அமைவினைத் தீர்மா னிக்கும் சந்தர்ப்பத்தைக் குறித்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் உள்ளடக்கம் புதுமையான ஒன்றல்ல என்பதனை நாம் இக்கோட்பாடு தொடர்பாக ஐ.நா. சபையின் ஆவணங்களிலிருந்து கிடைக்கப் பெறும் மறைமுகக் குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு நிருபணம் செய்ய முடிகின்றது. 1966ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச இணக்க ஒப்பந்தம் அங்கத்துவ நாடுகளில் பேணப்படும் நிலை தொடர்பாக அறிவதற்கு ஐந்து வருடங்களுக்கொரு முறை அந்நாடுகளிலிருந்து அறிக்கைகளைப் பெறும் மனித உரிமைக் குழுவினர் நீண்டகால அவதானிப்பின் பின் 1981ஆம் ஆண்டு முதல் பொது விமர்சனங்களை (General Comments) வெளியிட்டு வருகின்றது. 1984ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட குழுவின் 12ஆவது பொது விமர்சனம் சுயநிர்ணய உரிமை பற்றிக் குறிப்பிடும் ஒப்பந்தத்தின் முதலாவது உறுப்புரை பற்றியதாகும். இவ்விமர்சனத்தில் மனித உரிமைகள் குழுவினர் அங்கத்துவ நாடுகள் தாம் சமர்ப்பிக்கும் அறிக்கைகளில் ஏனைய உறுப்புரைகள் தொடர்பாக தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதில் கரிசனை கொண்டுள்ள போதிலும் முதலாவது உறுப்புரை தொடர்பாக மிகக் குறைந்த கவனத்தையே காட்டுவதாகக் குறைகூறியுள்ளமை அவதானிக்கத்தக்கது. மேலும் அங்கத்துவ நாடுகளில் பெரும்பாலானவை முற்றாக முதலாவது உறுப்புரை தொடர்பாகக் குறிப்பிடாது விடுவதையும் அல்லது போதுமான தகவல்கள் அளிக்காது விடுவதனையும் அல்லது வெறுமனே வழக்கிலுள்ள தமது சுதேசத் தேர்தல் சட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுவதோடு தம்மை மட்டுப்படுத்திக் கொள்வதனையும் மனித உரிமைகள் குழுவினர் கடுமையாகக் குறை கூறினர். இந் நிலையை மாற்றப் பின்வரும் பரிந்துரையையும் தனது விமர்சனத்தில் குழு குறிப்பிட்டது:

"With regard to paragraph I of article 1 states parties should describe the constitutional and political processes which in practice allow the exercise of this right".

("உறுப்புரை 1இன் பந்தி ஒன்றைப் பொறுத்த வரையில் அங்கத்துவ நாடுகள் (தமது அறிக்கையில்) இவ்வுரிமையை நடைமுறையில் அநுபவிப்பதற்கு வகை செய்யும் அரசியலமைப்பு மற்றும் அரசியல் சார் செயலொழுங்குகளைக் குறிப்பிடுதல் வேண்டும்.")

மனித உரிமைக் குழுவினர் வலியுறுத்தும் சுயநிர்ணய உரிமையை அநுபவித்தலுக்கான இத்தகைய செயலொழுங்குகளானவை காலனியாதிக்க நாடுகளினதும் மக்களினதும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தலுக்கு அப்பாலும் ஒரு தேசத்திற்கு உட்பட்ட வரையில் மக்களது நிர்ணய உரிமையைப் பாதுகாப்பதில் இக் கோட்பாட்டிற்குள்ள கடப்பாட்டைத் தெளிவுபடுத்தி நிற்கின்றது. ஆகவே உண்மையில் சுயநிர்ணய உரிமை ஒரு தேசத்திற்குட்பட்ட நிலையிலிருந்தே ஆரம்பமாகின்றது. அது நிறைவு செய்யப்பட முடியாத சந்தர்ப்பத்திலேயே அத் தேசத்திற்கப்பால் புதிய தேசத்தைத் தோற்றுவிக்கும் நிலையை அடைகின்றது.

இலங்கை இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சி உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் பாவனையானது அது ஓர் சட்டவழிக் கோட்பாடு என்ற அடிப்படையில் அணுகப்படும்போது அது எட்டப்படும் அரசியல் அமைவினை (இச்சந்தர்ப்பத்தில் சமஷ்டி) வலுப்படுத்துவதாக அமையும். அதாவது உருவாக இருக்கும் சமஷ்டி அரசியலமைப்பு 1 உறுதியானதாக இருத்தலை நெகிழ்வற்ற சமஷ்டி உருவாதலை உறுதிப்படுத்தும் இத்தகையதோர் அணுகுமுறையே இலங்கை இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வைத் தரவல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான நவீன அச்சுவேலைகளுக்கு

# போஸ்கோ நிறக்கலைப் பதிப்பகம்

252, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

தொ.பே.இல. 222-6549

★

*For Modern & Quality Printing*

# BOASCO ARTONE PRINTERS

*Specialist in Offset & Screen Printing*

252, Point Pedro Road, Nallur.

T[redacted]

---

## *BOSS STATIONERS*

**Specialist in Wedding Cards**

Dealers in Exercise Books & Stationaries





*3, Modern Market,*
*Hospital Road, Jaffna.*



**போஸ் காகிதாதியாளர்கள்**

*இல. 3, நவீன சந்தை,*
*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றா எசன்ஸ் சப்ளையர்ஸ்

அனைத்துவித சிற்றுண்டிவகைகளின் மூலப் பொருட்களையும் பெற நீங்கள் விரும்பி நாடவேண்டிய

ஒரே இடம்

## PETTAH ESSENCE -SUPPLIERS

*104, Hospital Road, Jaffna.*

# THE PHONE SHOP

## *DIAL LINKS*

*204, K. K. S.* வீதி,
யாழ்ப்பாணம்.



* யாழ் நகர எல்லையில் இருந்து 20, 25Km எங்கிருந்தாலும் கதைக்கும் வசதி உடையது.

* எம்மிடம் வாங்கும் தொலைபேசிக்கு 2 வருட உத்தரவாதம் உண்டு.

# NEW KAMAAL CERAMICS

தரமானதும் இறக்குமதி செய்யப்பட்டதுமான

- *WALL TILES*
- *FLOOR TILES*

மற்றும் குளியலறை உபகரணங்களை அழகிய, பல வர்ண, வடிவங்களில் பெற்றிட



இன்றே நாடுங்கள்

# நியூ கமால் செரமிக்ஸ்

*No.* 37, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை:

01. Principles of Public International Law, Prof. Ivan Brownlie, Professor of Intl. Law at the London University.

02. International Law, Malcom N. Shaco.

03. Interdoc: 1, The Natesan Centre full text of the UDHR, ICCPR, ICESCR and General Comments by HRC upto 1993.

04. Internet Library www umn edu/humanrts
University of Minnesota Human Rights Library.

05. Our Fundamental rights of Human security and Physical liberty A,M.R.B. Amarasinghe.

06. ஞாயிறு தினக்குரல், Jan. 19, 2003, பக். 5.

குமாரவடிவேல் குருபரன்

**உலக ரீதியாக வங்கிகளுக்கிடையிலான நிதிசார் தொலைத் தொடர்புகளுக்கான சமூக அமைப்பு [SWIFT]**

[Society for World Wide Interbank Financial Tele communications]

Swift என்பது ஒரு கூட்டுறவு சங்கம். பெல்ஜிய நாட்டு சட்டத்தின் கீழ் பெல்ஜியத்தின் Laulpe எனும் இடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1973ம் ஆண்டளவில் முன்னோக்கி சிந்திக்கின்ற 239 வங்கியாளர்களால் உருவாக்கப்பட்டது. சிலகாலமாக இவர்கள் சர்வதேச கொடுக்கல் வாங்கல்களில் உபயோகிக்கின்ற முறைகளால் குறிப்பாக கடதாசியை ஒட்டிய ஆவணங்கள். சிக்கலான தன்மை. செலவு. அதிகளவு. நேர வீண்விரயம் என்பவற்றுக்கு பிரதியீடாக ஒன்றுபட்ட உழைப்பினால் உருவாக்கப்பட்ட பயனுறுதி உடையதும் செலவு சிக்கனமுடையதும் Swift முறைமை 1997 மே மாதம் நடைமுறைப்படுத்தப்பட்டு இயங்கத் தொடங்கியது. இந்த சங்கத்தின் உரிமையாளர்கள் குறிப்பாக அங்கத்தவர்களும் பங்காளர்களும் சர்வதேச வங்கிகளாக காணப்பட்டன.

**இலங்கையின் Swift**

இலங்கையின் 15 வங்கிகள் இந்த புதிய Swift வலைப்பின்னலில் இணைந்து செயற்படுகின்றன. 7உள்ளூர் வங்கிகள் இதில் நிரந்தர அங்கத்தவர்களாக இணைந்து கொண்டுள்ளன. வெளிநாட்டு வங்கிகளின் இலங்கைக் கிளைகளும் இந்த அமைப்பில் உப அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Some Observations on our Educational system

Societies both developing and developed see Education as a key factor in the growth and development - both of the individual and society. Man is a social being and part and parcel of the society he lives in. Both man and society stand to gain by education. Education seeks the fullest development of the potential of the individual as well as providing for the social, political economic and cultural development of sociey.

Educations in our country is for the most part state controlled, is free, is in the mother tongue and the greater part of the Input for Education comes from the STATE coffers. There are over 10,000 schools in Srilanka, providing Education for nearty 4 million students and manned by 201,205 teachers. The expenditure on education is 31,161, million rupees. To make free education more meaningful Free School Uniforms and Free Text books are issued to the students.

The question upper most in the minds of the thinking public is whether education has served its purpose in Sri Lanka. Has education helped to sort out its various problems or has the expenditure on education been a waste?

Education is the birthright of every child and is free in Sri Lanka though its not compulsory, yet the question posed is whether there is equality in education. All children of school going age have the right to education but do all childen enjoy equal opportunity in education. Do all the 10,501 schools dotted all over the Island provide quality education and do all the nearly 4 million students enjoy the same facilities. The empty boast of the long line of Education Ministers in Sri Lanka has been to raise everyone of the schools to the status of a Royal College. Education no doubt is free and no child is denied the right to education but are all children fed with the wholesome nutritious food. The answer is definite no. There is a whole lot of discriminations in education thought not willfully. They experience a lot of deficiencies - lack of proper building, lack of space and furniture, lack of laboratory facilities, lack of teachers, lack of facilities for core - curricular activities, lack of basic needs such as a proper water supply, electricity and the like. Free text books may not reach them in time, so that Sri Lanka cannot boast of equality in education as it boasts of high literacy rate. This is one of the serious draw backs in the Sri Lankan educationa systems.

How far has education helped to get over the political, social, economic problems of our country. The turn of events in our little isle demonstrate that there is nothing to be happy about in SRI LANKA.

SRI LANKA is a multi-racial, multi-religious state. How for has the schools



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

implanted the idea of a United Lanka in the minds of the children? Are the children made to feel that we are all children of mother Lanka. Is National Integration talked of in schools? How on earth does this idea catch up when the children of the various races are seperated by walls - language barriers - with little contact. There is little to link them or make them aware of the oneness. The schools of yester year were multiracial in nature. Children of various communities sat in the same classrooms, taught by the same teachers taught in the same language, played and enjoyed life together, and moved about in a spirit of cameraderie, but today the children are brought up as is they belong to two different worlds with differing and conflicting views and ideas; divisive trends gain dominance in their thinking. There is a talk of Amity schools to promote National Integration. It's a welcome sugges tion

Aren't our human resources going to waste? How many of the school leavers are gainfully employed? School drop-outs the school leavers and the University pass outs, idle away their time with no job in hand. Government employment is few and far between and the type of education provided in schools and Universities hardly suit the economy. The ecomomy is unable to absorb the whole lot of the educated unemployed youth. The dropouts and passouts go to swell the numbers of the unem ployed youth.

The children aren't prepared for livelihood They live in a dream world - seekers of white collar jobs - safe government jobs. Their mental set up in not geared to the world of work. How many of the educated youth are willing and prepared to spend their lives in the fields and the factories. Are they being prepared for it? There was a time when prevocational subjects were part of the school curriculum. But they have all been dumped now. The students must be made to realise that they have a role to play in society - serve their motherland in its development and growth.

There is grumbling of falling Standards in education. The last examination saw a large number of failures in General Science, Mathematics and English. This sorry state of affairs must open our eyes to the stark fact of the unsuitability of education at least to a section of the student population. We do not have comprehensive schools with a varied curriculum to suit the differences in aptitude, interests and abilities of the children. All students have to fit themselves into the same jacket whether it suits them or not. Some years ago there was in vogue the Selective Test system at year 8 - which provided for selecting of students on the basis of their abilities for streamlining - which sought to provide an education, to fit individual differences. Unless some such steps are initiated on the bases of experiences in other countries then woe be unto our country. Its an other instance of waste in education, leading to an increase in dropouts and failures.

English is not our native language nor is it a foreign language to Sri Lanka. Its our second language. No same person would argue that of all languages English is a quality language but the fact is that by an accident in History English has emerged as the most important of International language. A language one cannot ignore.

2. "In 1500 English was a minor language,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

spoken by a few people on a small Island. Now it is perhaps the greatest language of the world spoken natively by over a quarter of a billion people and as a second language by billions.

We in Sri Lanka have an added reason to value the language. It has been with us since 1796 when the English Englishman set his foot on this island. Hence quite rightly English is a recognised language in our country and is taught in all schools from year 1 to year 13. But here again it's a sad story. At the last O/L examination only 24% of the candidates made the mark and at the A/L examination it must be worse since the A/L students show a marked disinterestedness towards the study of the language. What ails the teaching of English in schools. There is a serious shortage of English teachers - many schools are starved of English teachers. The competency of the English teacher is too being doubted . Another factor that lies in the way of improving the standards of English in schools is the rush work that is being done with a view of the examination and the teaching programme . There is no intensive teaching of the language - the children hardly master the text. English is seriously ill in Sri Lanka and needs a place in the Intensive caxes unit. Unless intensive case is taken of the language there is hardly any future for English.

Lot of thinking and planning is vital in the field of education if education it is to be the panascea of all Srilankan.

***R. Kanapathypillai.***

---

1) "Our greatest glory is not in never falling, but in rising every time we fall."

***-Oliver Goldsmith.***

2) "The heart is great indeed; through it come all the great inspirations of life; and I would a hundred times rather have a litter heart and no brain, than be all head and no heart."

***-Swami Vivekananda***

3) "Reading maketh a full man, conference a ready man; and writing an exact man".

***-Bacon***

அன்பளிப்பு:

தம்பிப்பிள்ளையும் மைந்தர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறாயோ! வரவே நீ வாறாயோ!

# லைடன் புடைவை நிலையம்

**Dealers in Textiles**
**Ready made Garments**

*

வண்ண வண்ண
டிசைன்களில் ஆடவர்,
நங்கையருக்கேற்ற
மாறா நவீன ஸ்ரைல்களில்
ஆடைகளைத் தெரிவு செய்தி



410. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.

*410, Hospital Road, Jaffna*

வாழ்க வரவு நீ பல்லாண்டு காலம்

உள்நாட்டு வெளிநாட்டுத்
தொலைபேசி அழைப்புக்கள்
பக்ஸ், போட்டோ பிரதி, லெமினேசன்



# யாழ் கொமினிகேஷன் சென்ரர்



422. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P 2016, 2502, 2192

**SECOTE**



*Net Cafe & Internet calls*



# Internet Browsing Centre

**325/1, Palaly Road, Jaffna.**

# வசந்தம் பாமசி

சகல விதமான ஆங்கில மருந்து வகைகளையும்,
பால்மா வகைகளையும், ஒடிகலன் வகைகளையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**வசந்தம் பாமசி**
**456, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**




மக்கள் நலன் கருதி காலை 6 மணியிலிருந்து இரவு 7.45 மணி வரை திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரவிற்கு எம் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.**

- புத்தம் புதிய தரம் மிக்க மோட்டார் சைக்கிள்களா?
- *MD - 90* மற்றும் றீக்கொண்டிசன் மோட்டார் சைக்கிள்களா?
- அவற்றிற்கான உதிரிப்பாகங்களா?
- பற்றறி வகைகளா?
- அசிட் வகைகளா?
- சோலர் வகைகளா?



இவையனைத்தையும் ஓரிடமாகவே பெற்றுகொள்ள இன்றே நாடுங்கள்!

# அருள் விநாயகர் ரேடர்ஸ்



**இல. 108, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**கிளை: இல. 262, கண்டி வீதி,**
**சாவகச்சேரி.**

---

வரவின் வருகைக்காய் ஆவலுடன் காத்திருக்கின்றோம்

# குகன் ஸ்ரோர்ஸ்

**சகல விதமான பலசரக்கு பொருட்களையும்**

**நியாயவிலையில் பெற**

**தலைநகரின் தன்னிகரற்ற ஸ்தாபனம்.**




180 (380), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 2767

# நன்றிக்குரியவர்கள்

* எமது "வரவு" மலருக்கு வாழ்த்துச் செய்திகள் வழங்கிய அதிபர், பொறுப்பாசிரியர், வகுப்பாசிரியர் மற்றும் அருட்கவி வினாசித்தம்பி ஐயா அவர்களுக்கும்

* "வரவு" உருவாகுவதற்கு ஆக்கங்களைத் தந்துதவிய விரிவுரையாளர்கள், மாணவர்களுக்கும்

* இம்மலர் வெளியீட்டுக்கு விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும்

* ஓய்வு நேரத்திலும் எமது மன்றத்துக்காக தன்னையே அர்ப்பணித்து ஆசிவழங்கிய சிவசுப்பிரமணிய சர்மா ஆசிரியர் அவர்கட்கும்

* இம்மலர் சிறப்பாக வெளிவர பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த ஆசிரியர் புண்ணியமூர்த்தி அவர்களுக்கும்

* இம்மலரின் முகப்பு அட்டைக்கான படத்தினை சிறப்பாக கருத்தாழத்துடன் உருவாக்கி எமக்கு வழங்கிய ஆசிரியர் D. SAM அவர்களுக்கும்

* மற்றும் இம்மலரினை மலர்விக்கவென தோளோடு தோள்நின்ற மாணவத் தோழர்களுக்கும்

* இம்மலரினை சிறப்பாக அச்சேற்றிய போஸ்கோ ஆட்ரோன் பதிப்பகத்தினர்க்கும்

* மேலும் "வரவு" மலருக்குரிய புகைப்படங்களை கலை நுட்பத்துடன் உருவாக்கிய ராஜி ஸ்ரூடியோ அவர்களுக்கும்

* மேலும் இம்முயற்சிக்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய சகலருக்கும், நன்றிகூறத் தவறிய பெரியோர்க்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

– *இதழாசிரியர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக மலர் வரவு என்றென்றும் சிறந்த விளங்க வாழ்த்துவோம்!

**தரம் வாய்ந்த மூக்குக் கண்ணாடிகளை சாதாரண விலையில் பெற நாடவேண்டிய ஒரே இடம்**





# LAVANJA

பல் - மூக்கு - கண்ணாடி அகம்

**Specialists in Handling the latest Technology in Optical work**



*Prop: Dr. Regi Soloman*

# லாவண்யா







525, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
யாழ்வீதி, நெல்லியடி.

*It's better sight at the unbeatable price.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❀ காலத்திற்குக் காலம் ஈடு இணையற்ற புத்தம் புது டிசைன்களில் நகைகளை நவீனமாக வடிவமைப்பவர்கள்

❀ காலத்தால் அழியாத – கற்பனைக்கும் எட்டாத – அற்புத எழில்மிகு ஆபரணப் படைப்பாளர்கள்

❀ தங்க நகையுலகில் மங்காப் புகழுடன் ஒளி வீசி – தனக்கென தனியிடம் வகித்து நிற்பவர்கள்

# நியூ நகுலா ஜுவல்லறி



74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
*T.P - 222 - 5511*



**கிளைகள்**

## நியூ லலிதாஸ் ஜுவல்லறி

## நகுலா நகை மாடம்





171, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
*T.P - 222 - 3433*

74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
*T.P - 222 - 3433*

Boasco, Nallur.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org